விலை ரூபா 20 பக்கங்கள் 28

# உதயன்

சுடர் 31 கதிர் 056 வள்ளுவர் ஆண்டு 2047 தை 07, வியாழக்கிழமை 21.01.2016

137
(13,704,134.40)
NLB

## மகிந்தவின் ஆட்சியிலேயே பலர் காணாமற்போனார்கள்

### மனம் திறந்தார் அமைச்சர் சமரசிங்க



கொழும்பு, ஜன. 21
முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் பலர் காணாமற்போயுள்ளதை நேற்று ஏற்றுக்கொண்டார் அமைச்சர் மகிந்த சமரசிங்க.
அதேவேளை, மகிந்த ஆட்சியில் கடத்தப்பட்டவர்கள் வெள்ளை வானிலா அல்லது வேறு நிற வானிலா கடத்தப்பட்டார்கள் என்பது தொடர்பில் பக். 24

## அரசியல் கைதிகள் எவருமே இல்லை

### இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுவிஸ் டாவோஸ் உலக பொருளாதார மாநாட்டில் தெரிவிப்பு

– டாவோஸிலிருந்து பிரேம் –

டாவோஸ், ஜனவரி 21
இலங்கையில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. சுவிற்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெறும் உலகப் பொருளாதார மாநாட்டில் கலந்துகொண்டுள்ள பிரதமர் அதன் பக்க நிகழ்வாக செய்தியாளர்களிடம் நேற்றுப் பேசுகையில், இருப்பவர்களில் சிலர் ஏற்கனவே தண்டிக்கப்பட்டவர்களே. அவர்களை விடுவிக்க முடியாது. ஏனையவர்கள் தொடர்பில் சிறைச்சாலைகள் அமைச்சர் சுவாமிநாதன் தலைமையில் ஆராயப்பட்டு வருகிறது பக். 24

## இழுவைப் படகு மூலமான மீன்பிடி; தமிழக அரசியல்வாதிகள் தொடர்பு

### டாவோஸில் கூறினார் பிரதமர்

டாவோஸ், ஜன.21
இலங்கை கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு தமிழக மீனவர்களால் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. எனினும் அவர்கள் இழுவை மடி மீன்பிடியில் ஈடுபடுவதால் அனுமதி வழங்க முடியாது.
இவ்வாறு டாவோஸ் நகரில் தெரிவித்தார் இலங்கைப் பிரதமர் ரணில்விக்கிரமசிங்க.
அத்துடன், தமிழகத் பக். 24

முச்சந்தி முரளி



எல்லாம் புரியாத புதிராத் தான் இருக்கு...

## இந்தியாவின் தேவைக்கேற்ப செயற்படுகின்றது புதிய அரசு

### நாமல் ராஜபக்ச குற்றச்சாட்டு



கொழும்பு, ஜன 21
இந்தியாவின் தேவைக்கேற்பதான் இலங்கை அரசு செயற்படுகிறது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் புதல்வரான நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச .
அம்பாந்தோட்டையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பக். 06

## எல்லை தாண்டி மீன் பிடிக்கும் இந்திய மீனவர்களுக்கு சிறை

யாழ்ப்பாணம், ஜன.21
அத்துமீறி மீன்பிடித்த குற்றச் சாட்டில் கைது செய்யப்படும் இந் திய மீனவர்கள் மீது இனி வரும் காலங்களில் 1979 ஆம் ஆண்டின் எல்லை தாண்டிய மீன்பிடித் தடைச் சட்டத்தின் கீழேயே வழக்குத் தொடுக்கப்படும் என சட்டமா அதிபர் கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றில் மனுச் சமர்ப்பித்துள்ளார். (விரிவு பக். 2)

## வடக்கு முதல்வர் தலைமையில் அதிகாரப் பகிர்வுக்கு யோசனை

### மாகாணசபையின் அடுத்த அமர்வில் பிரேரணை முதலமைச்சர் – உறுப்பினர்கள் சந்திப்பில் முடிவு

யாழ்ப்பாணம், ஜன. 21
வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தலைமையில் அதிகாரப் பகிர்வு யோசனை முன்வைக்கப்படவுள்ளது. வடக்கு மக்களின் ஆணையை ஏற்று – மதித்து, வடக்கு மாகாண சபை இந்த நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளது. இதனை முன்கொண்டு செல்வதற்கான பிரேரணை வடக்கு பக். 24

### முல்லைத்தீவுக்கு வெள்ளியன்று வருகிறார் வைரமுத்து

யாழ்ப்பாணம், ஜன.21
வடக்கு மாகாண விவசாய அமைச்சு நடத்தும் உழவர் விழா நிகழ்வில் கலந்துகொள்வதற்காக தென்னிந்தியாவின் பிரபல கவிஞரும் பாடலாசிரியருமான வைர பக். 23

## தமிழ்க் கூட்டமைப்பினர் இன்று கிளிநொச்சியில் முக்கிய சந்திப்பு

### எம்.பிக்கள், வடக்கு மாகாண முதலமைச்சர், மாகாண சபை உறுப்பினர்கள் பங்கேற்பர்

யாழ்ப்பாணம், ஜன. 21
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாணசபை முதலமைச்சர், வடக்கு – கிழக்கு மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்களுடனான முக்கிய கலந்துரையாடல்கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம் பந்தன் தலைமையில் இன்று வியாழக்கிழமை பக். 06

## போர்க்குற்ற விசாரணை நடத்த வலியுறுத்தவேண்டும் இந்தியா

### தமிழக ஆளுநர் ரோசையா கோரிக்கை

சென்னை, ஜன. 21
ஈழத் தமிழர்களுக்கு எதிராகப் போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்கள் மீது இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க இந்தியா வலியுறுத்தவேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
தமிழக ஆளுநர் ரோசையா இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.
தமிழக சட்ட சபையின் இந்த ஆண்டுக்கான கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமானது. இதன் ஆரம்ப உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,
சர்வதேச நீதி விசாரணையைக் கோரி பக். 24

## காணாமற் போனோர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும்

### ஐரோப்பிய ஒன்றியக் குழுவினரிடம் சம்பந்தன் கோரிக்கை



கொழும்பு, ஜன. 21
காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணப்படவேண்டும்.
அதேவேளை, தமிழ் அரசியல் கைதிகள் தாமதமின்றி விடுவிக்கப்படவேண்டும்.
இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியக் குழுவினரிடம் கோரிக்கை விடுத்தார் எதிர்க்கட்சித்தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன். பக். 23

### சுவிஸ் பிரதமரை சந்தித்தார் ரணில்

டாவோஸ், ஜன. 21
உலகப் பொருளாதார மாநாட்டில் பங்குபற்றுவதற்காக சுவிற்சர்லாந்துசென்றுள்ள பிரதமர் பக். 24

## புலிகளின் தமிழீழச் சித்தாந்தம் தோற்கடிக்கப்படவேயில்லை

### ஜனாதிபதி மைத்திரி கூறுகிறார்



கொழும்பு, ஜன. 21
தமிழீழத்தை உருவாக்குவதற்கான தமிழீழ விடுதலைப் புலிகளின் சித்தாந்தம் இன்னமும் தோற்கடிக்கப்படவில்லை. அதனை தோல்வியடையச் செய்யும் நடவடிக்கைகளிலேயே தற்போதைய அரசு ஈடுபட்டுள்ளது.
இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால பக். 23

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
இன்னும் 8 நாட்களில்
JITF 2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லை தாண்டிய மீன்பிடித் தடைச் சட்டத்தின் கீழ் அத்துமீறும் இந்திய மீனவர்கள் மேல் இனி வழக்கு

### சட்டமா அதிபர் கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு சமர்ப்பிப்பு

யாழ்ப்பாணம், ஜன.21

அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்படும் இந்திய மீனவர்கள் மீது இனி வரும் காலங்களில் 1979 ஆம் ஆண்டின் எல்லை தாண்டிய மீன்பிடித் தடைச் சட்டத்தின் கீழேயே வழக்குத் தொடுக்கப்படும் என சட்டமா அதிபர் கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றில் மனுச் சமர்ப்பித்துள்ளார்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் தொடர்ந்தும் அத்துமீறி உள்நுழைந்து மீன்பிடியில் ஈடுபடுவதால், இலங்கை மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்றது. அதனை முழுமையாகக் கட்டுப்படுத்த உயரதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என வடமாகாணத்தின் கடற்றொழிலாளர்களின் கூட்டுறவு சமாசங்கள் கொழும்பு மேன் முறையீட்டு நீதிமன்றில் வழக்கு ஒன்றைதாக்கல்செய்திருந்தனர்.

இது தொடர்பில் நீதி மன்றுக்கு அளித்த விளக்கக் கடிதத்திலேயே சட்டமா அதிபர் திணைக்களம் மேற்படி உத்தரவாதம் வழங்கியுள்ளது. இது தொடர்பில் அமைச்சரவைக் குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது வரைகாலமும் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்கள் மீது சட்ட விரோத மான முறையில் நாட்டுக்குள் உட் புகுந்த குற்றத்தின் கீழேயே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அதனால் இந்திய மீனவர்கள் இரண்டு அல்லது மூன்று மாத காலங்களுக்கள் நாடு திரும்புவதால் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டல் தொடர்ந்த வண்ணம் உள்ளது.

தற்போது சட்டமா அதிபர் திணைக்களம் அளித்துள்ள உத்தரவாதத்துக்கு அமைய 1979ஆம் ஆண்டின் எல்லை தாண்டிய மீன்பிடிச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடுக்கப்படும் சமயத்தில், இந்திய மீனவர்கள் குறைந்த பட்சம் மாத காலம் சிறை வைக்கப்படுவதுடன் உடைமைகளும் அரச உடைமையாக்கப்படும்.

அத்துடன் உடைமைகளின் உரிமையாளர் நேரில் முன்னிலையாக வேண்டும் என்பதுடன் எல்லை தாண்டிய மீனவர்களுக்கு 5 இலட்சம் ரூபா தண்டப் பணமும் விதிக்கப்படும். இவ்வாறு அதிகரித்த தண்டணைகள் மூலம் இந்திய மீனவர்களின் எல்லைதாண்டல் கட்டுப்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.(ற-ஜ-10)

## குளவிகளின் தாக்குதலில் 50 பேருக்கு மேல் காயம்

யாழ்ப்பாணம், ஜன.21

உரும்பிராய்ப் பகுதியில் குளவிக் கூட்டங்களின் தாக்குதலால் ஐம்பது பேருக்கும் மேல் காயப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் மதியம் உரும்பிராய் வடக்கு இந்துக்கல்லூரி வீதியில் இடம்பெற்றது.

தோட்ட வெளியில் இருந்து கலைந்த குளவிகள் மக்களின் குடிமனைக்குள் படையெடுத்து சகட்டுமேனிக்குக் கொட்டியுள்ளன. வீதியால் சென்றவர்களையும் விடாது கலைத்துக் கொட்டியுள்ளன. அதனால் செய்வதறியாது மக்கள் வீடுகளின் கதவுகளைப் பூட்டி உள்ளே இருந்தனர்.

இந்தக் குளவிகளின் தாக்குதலுக்கு இலக்காகி ஐம்பதுக்கும் மேற் பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். குளவிகளின் கடுமையான தாக்குதலுக்கு இலக்கான சிலர் கோப்பாய் மற்றும் தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலைகளுக்கு சென்று சிகிச்சை பெற்றுள்ளனர். (ஜ-17)

## டிராக்டர் மோதி பொலிஸ் காயம்

யாழ்ப்பாணம், ஜன.21

கவனக்குறைவாக டிராக்டரைச் செலுத்தி பொலிஸ் உத்தியோகத்தருக்கு பெரும் காயத்தை ஏற்படுத்திய டிராக்டர் சாரதியை 75 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆட்பிணையில் செல்ல மல்லாகம் மாவட்ட நீதிவான் ஏ.யூட்சன் நேற்று முன்தினம் அனுமதியளித்தார்.

அத்துடன் விபத்து தொடர்பான வழக்கு விசாரணையை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 25ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

சுன்னாகம் மயிலியதனைப் பகுதியில் மோட்டார் சைக்கிள் செலுத்திய பொலிஸ் உத்தியோகத்தர் டிராக்டர் மோதி விபத்துக்குள்ளானார்.

இந்தச் சம்பவத்தில் பலாலி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் காயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-ஜ-107)

## எறிகணை குண்டுகள் மீட்பு

யாழ்ப்பாணம், ஜன.21

புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பகுதியில் உள்ள காணி ஒன்றில் இருந்து நேற்று மூன்று 40 மில்லி மீற்றர் எறிகணைக் குண்டுகளை மீட்டுள்ள விசேட அதிரடிப்படையினர் அவற்றை செயலிழக்க வைத்துள்ளனர் என்று சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

காணி ஒன்றில் துப்பரவு வேலையில் ஈடுபட்டிருந்தவர்கள் வெடிகுண்டு இருப்பதை கண்டு சுன்னாகம் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

இதனையடுத்து சுன்னாகம் பொலிஸாருடன் வந்த பொலிஸ் விசேட அதிரப்படையினர் அதனை எடுத்துச் சென்று, காட்டுப் பகுதியினுள் செயலிழக்க வைத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-107)

## கைக்குண்டு வைத்திருந்தார் என குற்றஞ்சாட்டப்பட்டவருக்குப் பிணை

யாழ்ப்பாணம், ஜன. 21

ரி82 ரக கைக்குண்டு ஒன்றை சட்டவிரோதமாக வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவர் 9 மாதங்களின் பின்னர் நேற்று யாழ். மேல்நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

மூளாயைச் சேர்ந்த குறித்த நபரைப் பொலிஸார் கடந்த ஏப்ரல் 30 ஆம் திகதி கைது செய்திருந்தனர். அவரது காற்சட்டைப் பைக்குள் இருந்து குறித்த வகைக் குண்டை மீட்டது என்று கூறி அவருக்கு எதிராக அபாயகர ஆயுதங்கள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழக்குத் தொடரப்பட்டிருந்து.

மல்லாகம் நீதிமன்றில் அவர் முற்படுத்தப்பட்ட போது அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் அவரைப் பிணையில் விடுவிக்குமாறு கோரி அவரது உறவினர்கள் சட்டத்தரணி க.சுகாஷ் மூலமாக யாழ்.மேல்நீதிமன்றில் பிணை விண்ணப்பம் தாக்கல் செய்திருந்தனர்.

மேல்நீதிமன்றில் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் இந்தப் பிணை விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு சந்தேகநபர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அதன்படி 25 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான தலா 2 ஆள்பிணையிலும் அவர் விடுவிக்கப்பட்டார். எனினும் அவர் மீதான வழக்குத் தொடரவுள்ளது. (ற-ஜ-4)

## 50 ஏக்கருக்கு அதிகமான காணிகள் வைத்திருப்போர் விவரம் சேகரிப்பு

### மன்னார் அபிவிருத்திக் குழு கூட்டத்தில் சமர்ப்பிக்க அறிவுறுத்து

மன்னார்,ஜன.21

மன்னார் மாவட்டத்தில் 50 ஏக்கருக்கு அதிகமாகக் காணிகளை வைத்திருப்பவர்கள் தொடர்பான விவரங்களை அடுத்த அபிவிருத்தி குழு கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின் போதே குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

இதுகுறித்து இணைத்தலைவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது–

மன்னார் மாந்தைப் பகுதியில் தனிநபர்களுக்குச் சொந்தமான பல ஏக்கர் காணி வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு விற்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் கிடைத்துள்ளன.

எமது மண்ணில் எங்களது மக்கள் வாழ்வதற்கு இடம் இல்லாமலும், உணவு இல்லாமலும் அலைகின்ற போது, எங்களது காணிகள் வெளிநாட்டவர்களுக்கோ அல்லது வேறு மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கோ விற்பதற்கு யாருக்கும் உரிமை இல்லை.

பல ஏக்கர் கணக்கில் காணிகளை வைத்திருப்பவர்கள் தான் இவ்வாறு காணிகளை விற்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மன்னார் மாவட்டத்தில் 50 ஏக்கருக்கு அதிகமாக யார் காணிகள் வைத்திருந்தாலும் அது தொடர்பான விடயங்களை அனைத்து மாந்தை உட்பட அனைத்து பிரதேச செயலாளர்களும் அடுத்த மூன்று மாதங்களின் பின்னர் நடைபெறும் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

அரச சட்டப்படி ஒருவர் 50 ஏக்கருக்கு அதிகமாக காணிகள் வைத்திருக்க முடியாது என சட்டம் உள்ளது. எனவே பிரதேச செயலாளர்கள் இந்த விடயத்தில் கூடிய கவனம் எடுத்து விவரங்களைச் சேகரிக்க வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஜ-21)

## ஆசிரியர்களை நியமிக்கக் கோரி வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்



வவுனியா, ஜன.21

வவுனியா செட்டிகுளம் முதலியார்குளம்றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையில் கணிதம், விஞ்ஞானம், உடற் பயிற்சி மற்றும் சிறுவர் பிரிவு ஆகியவற்றுக்கு ஆசிரியர்களை நியமிக்கக்கோரி நேற்று காலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் அமைதியான முறையில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் 'கல்வியைச் சீரழிக்காதே' 'ஆசிரியர் வளத்தை சரியாக பங்கிடு', 'கிராமம்புற பாடசாலைகள் என்ன கிள்ளுக்கீரையா', 'அதிகாரிகளே உங்கள் பதவிகளை துஸ்பிரயோகம் செய்யாதீர', 'கண்முன்னே பாழாகிறது எம் பிள்ளைகளின் எதிர்காலம்', ஒரு சமூகத்தின் அழிவுக்கு தீ வைக்கிறது வவுனியா தெற்கு வலயம் போன்ற பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

கடந்த காலத்தில் வளமான ஆசிரியர்களை கொண்ட பாடசாலையாக திகழ்ந்த போதிலும் இப்போது ஆசிரியர்கள் இல்லாதது மாணவர்களின் கல்வி உரிமையை பாதிப்பதாகவே இருக்கிறது என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

பாடசாலை குறித்து கருத்த வெளியிட்ட கிராம மக்கள் கடந்த மூன்று நான்கு வருடங்களுக்கு மேலாக பாடசாலையில் எந்த விதமான அபிவிருத்தியையும் ஏற்படுத்தவில்லை என்று தெரிவித்தனர். (ற-ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விசாரணைக்கான முன்னோடியே புதிய அரசமைப்பு

## கூறுகின்றார் ஜீ.எல்.பீரிஸ்

கொழும்பு, ஜன.21

போர்க்குற்ற விசாரணைக்குத் தேவையான நடவடிக்கைகளை வெளிப்படையாக முன்னெடுத்தால்,அதற்கு எதிர்ப்பு வலுக்கும் என்பதால், புதிய அரசமைப்பு என்ற விடயத்தைத்தூக்கிப்பிடித்துக்கொண்டு மக்களைத்திசை திருப்புவதற்கு அரசு முயற்சிக்கின்றது.

இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளார் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் மகிந்த ஆதரவு அணி உறுப்பினருமான பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

கொழும்பு என்.எம்.பெரேரா கேந்திர நிலையத்தில் நேற்று இடம்பெற்றகூட்டுஎதிர்க்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது , தற்போதைய அரசிடம் தெளி வானதொரு கொள்கைத்திட்டம் இல்லை. சொல்வது ஒன்று செய்வது வேறொன்று என்ற நிலையிலேயே அது பயணித்துக்கொண்டிருக்கிறது. குறிப்பாக, மூன்று அடி முன்னோக்கி வந்தால் மறுபுறம் ஐந்து அடி பின்னோக்கிச் செல்லும் வகையிலேயே அரசின் திட்டங்கள் இருக்கின்றன.

குரோதப் பேச்சுகள் தொடர்பிலான சட்டம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இது எங்களுக்குத் தேவையான ஒன்று அல்ல. ஜெனிவாவுக்கும், சர்வதேசத்துக்கும் கொடுத்த வாக்குறுதியாகும். அதன் பத்திரம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு மீளப் பெற்றுக் கொள்ளப்பட்டது. பௌத்த பிக்குகளுக்கான ஒழுக்கச் சட்டம் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்பட்டது. இது விடயத்திலும் அரசு குழம்பிப் போயுள்ளது.

பொருளாதார வீழ்ச்சி, வரவு-செலவுத் திட்டம் தோல்வி. தற்போது அரசமைப்பு. கடந்த ஒன்பதாம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு அன்று இரவே அந்தப்பிரேரணைநிறைவேற்றப்படுகிறது. விவாதம் நடத்துவதை விடுத்து விவாதத்தை ஆரம்பிக்கக்கூட முடியாது போனது. எந்தவொருவிடயமும்கருத்துக்கோரப்பட்டு செய்யப்படுவதில்லை. குறிப்பாக, அமைச்சரவை கூட அனுமதிப்பதில்லை. சாதாரண சட்டமாக இருந்தாலும்,அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் தான் நாடாளுமன்றில் சமர்ப்பிக்க முடியும். ஆனால், அவ்வாறு இன்று செய்யப்படுவதில்லை.

எதிர்வரும் 26ஆம் திகதி மீண்டும் நாடாளுமன்றம் ஆரம்பமாக உள்ளது. அது தொடர்பிலான நாடாளுமன்ற ஒழுங்குப்பத்திரம் எங்கும் காணப்படுவதாக இல்லை. பிரதமரின் பிரேரணையை எவரும் விவாதிப்பதில்லை. இது முற்றிலும் தன்னிச்சையாகச் செயற்படுவதாகும்.

மக்கள் ஆணையின்றி நிறைவேற்றிக்கொள்ளக்கூடிய யோசனைகள் மாத்திரம் நிறைவேற்றப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஆனால், பிரதமர் சமர்ப்பித்துள்ள பிரேரணையில் 24ஆவது பந்தி தெரிவிக்கப்பட்டுள்ளதானது, தற் போது நடைமுறையிலுள்ள அரசமைப்பு முழுமையாக மாற்றியமைக்கப்படும்என்று. இவர்கள் இருவரின் கொள்கைகளுக்கும் பாரிய வேறுபாடு உள்ளது. ஜனாதிபதியின் ஆணைக்குபிரதமரின் செயற்பாடு விரோதமானது.

என்ன நடக்கிறது. எவரும் இதை மழுங்கடிக்கவில்லை. அரசினுள் ஓர் இணக்கமோ, வேலைத்திட்டமோ இல்லை. விரோதம் எங்கு எழுகிறதோ அவர்களை அடக்குவதற்கே இவை மேற்கொள்ளப்படுகின்றன. தேரவாத சட்டத்தின் மூலம் பிக்குகளை மௌனிக்க வைக்கப்பார்க்கின்றனர். வைத்திய சங்கத்தை மௌனிக்கும் செயற்பாடு, நாடாளுமன்றில் அவர்களுக்கு எதிராக எழும் குரலை ஒடுக்கும் செயற்பாடு ஆகும்.

முக்கியமாகப்பேசப்பட வேண்டிய விடயம்தான் தேர்தல் முறை மாற்றமும், நிறைவேற்று முறைமையை ஒழிப்பதும். மக்களின் பார்வையை வேறு திசைக்குத் திருப்பப் பார்க்கின்றனர். அண்மையில் பிரிட்டனின் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் ஹியூகோஸ்வைர் இலங்கைக்கு வந்தார். சைட் அல் ஹுசைன் பெப்ரவரி மாதம் இலங்கை வருகிறார். இன்னும் காலம் கொடுக்க முடியாது. ஜெனிவாத் தீர்மானத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துங்கள். போர்க்குற்றப் பொறிமுறையை உடனடியாக ஸ்தாபியுங்கள் என்று அவர் அழுத்தம் கொடுக்கிறார்.

அரசும் பெப்ரவரி மாதம் அமைச்சரவையில் இந்த விடயம் சமர்ப்பிக்கப்படும் என்று உறுதியளித்துள்ளது. இதுதான் நடைபெறப் போகிறது. விசேட நீதிமன்றம் அமைத்து விசேட சட்டங்களை கொண்டுவந்து எதிர்காலத்தைப் பாதிக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டு எமது இராணுவத்தைத் தண்டிக்கப் பார்க்கின்றனர்.

ஹியூகோ ஸ்வைர் கூறுகிறார், இதை நாங்களே செய்வோம் என்று. அரசு இதற்கான வேலைப்பாடுகளை உடனடி யாகச்செய்ய வேண்டும் என்று. போர்க்குற்றப் பொறிமுறை தொடர்பிலான விடயம் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்படும். இதைச் செய்வதற்குத்தான் அர சமைப்பு என்று கூறி மக்களின் பார்வையைவேறுதிசைக்குதிசை திருப்பப் பார்க்கின்றனர். உண் மைப் பிரச்சினைகளை மூடி மறைத்து நாட்டின் இறைமைக் குப் பாதிப்பு ஏற்படுத்தும் கண் மூடித்தனமான வேலையே நடைபெறுகிறது என்றார்.

(கு-சி)

# மூத்த அமைச்சர் குணவர்த்தன காலமானார்



கொழும்பு, ஜன.21

நல்லாட்சிக்கான ஐக்கிய தேசிய முன்னணி அரசின் மூத்த அமைச்சர்களுள் ஒருவரான எம்.கே.டி.எஸ்.குணவர்தன நேற்று முன்தினம் காலமானார். கொழும்பு தனியார் வைத்திய சாலையொன்றில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த நிலையிலேயே அவர் உயிரிழந்தார். சுகவீனமுற்றிருந்த அமைச்சர் வெளிநாட்டில் சிகிச்சைபெற்று வந்ததுடன், அண்மையில் நாடு திரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சியிலும் அமைச்சுப் பதவி வகித்து வந்த குணவர்த்தன,பொது வேட்பாளராகத் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன போட்டியிட்டபோது அமைச்சுப்பதவியைத் துறந்து மைத்திரிபாலவுக்கு ஆதரவளித்திருந்தார்.

அதன் பின்னர் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அவருக்கு தேசியப்பட்டியல் நியமனத்தை வழங்கிக் காணி அமைச்சுப் பதவியையும் வழங்கியது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மிகவும் விசுவாசமான அரசியல்வாதிகளில் எம்.கே.டி. எஸ். குணவர்த்தன முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1947ஆம் ஆண்டு மார்ச் மாதம் 6ஆம் திகதி பிறந்த குணவர்த்தன, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (கு-சி)

# ஆசிரியையிடம் இலஞ்சம் வாங்கிய அதிபர் சிக்கினார்



கொழும்பு, ஜன.21

தன்னுடைய பிள்ளையை பொலனறுவையில் உள்ள பாடசாலையில் சேர்த்துக் கொள்வதற்காக ஆசிரியை ஒருவரிடமிருந் து 7,500 ரூபாவை இலஞ்சமாகப் பெற்றார் என்ற குற்றச் சாட்டின் பேரில் அந்தப் பாடசாலையின் அதிபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேவேளை, அதிபருடன் உப அதிபர் மற்றும் காரியாலய உதவியாளரும் கைதுசெய்யப் பட்டனர் என்று இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக் குழுவின் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

(கு-சி)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள்
இளைஞர், யுவதிகள்,தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் இணைய முடியும்
பாடப்புத்தகங்கள், Video DVD, சான்றிதழ் முற்றிலும் இலவசம்!
சனி, ஞாயிறு பிரிவுகள்ஆரம்பம் 23.01.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
23.01.2016 இற்குமுன் விண்ணப்பித்தல்வேண்டும்! ஒரு பிரிவில் 20 பேர் மட்டுமே!
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம்,
யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

# போர் விமானக்கொள்வனவு ; தீவிரமாக ஆராய்கின்றது அரசு

கொழும்பு, ஜன.21

இந்தியா பிரயோகித்த கடும் அழுத்தத்தால் பாகிஸ்தானிடமிருந்து போர் விமானங்களைக் கொள்வனவுசெய்யும் திட்டத்தைக் கைவிட்ட இலங்கை அரசு, தற்போது எந்த நாட்டிடமிருந்து தாக்குதல் விமானங்களைக் கொள்வனவு செய்யலாம் என்பது பற்றி தீவிரமாக ஆராய்ந்து வருகின்றது என அறியமுடிகின்றது.

தாக்குதல், இடைமறிப்பு, கண்காணிப்பு எனப்பல நோக்குப் பயன்பாடுகளுக்கு உகந்த வகையிலான போர் விமானங்களை,விமானப்படைக்குக்கொள்வனவு செய்வதற்குப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்திருந்தது.

அந்தவகையில், சீனாவின் தொழில்நுட்ப உதவியுடன் பாகிஸ்தானில் தயாரிக்கப்படும் ஜே.எவ். 17 போர் விமானங்களை சலுகை அடிப்படையில் வாங்குவதற்கு கொழும்பு முடிவெடுத்திருந்தது. இதற்கு இஸ்லாமாபாத்தும் பச்சைக்கொடி காட்டியிருந்தது.

பாகிஸ்தான் பிரதமரின் இலங்கைப் பயணத்தின் போது இதற்கான உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதற்குரிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன என்றும், இறுதி நேரத்தில் இந்தியா பிரயோகித்த அழுத்தங்களால் அந்த முயற்சி கைவிடப்பட்டது என்றும் செய்திகள் வெளியாகியிருந்தன.


இந்தநிலையில், தற்போது ஜப்பான், இஸ்ரேல் போன்ற நாடுகளில் தயாரிக்கப்படும் தாக்குதல் விமானங்கள் தொடர்பில் இலங்கை ஆராய்ந்து வருகின்றது.

இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளையும் திருப்திப்படுத்தும் நோக்கில் இவ் விரு நாடுகளையும் தவிர்த்து பிறிதொரு நாட்டிலேயே இலங்கை அரசு, விமானப்படைக்குத் தேவையான போர் விமானங்களைக் கொள்வனவு செய்யும் எனத் தெரிய வருகின்றது.

அதேவேளை, இலங்கை விமானப்படைக்குத் தேவையான போர் விமானங்களைக் கொள் வனவு செய்வதற்கு முடிவெடுக்கப்பட்டு விட்டதா என்று விமானப்படைப் பேச்சாளர் குஸப் கப்டன் சந்திம அல்விஸிடம் வினவியபோது, இதற்குப் பதிலளித்த அவர்,

விமானப்படைக்குப் புதிய விமானங்கள் தேவையாகவுள்ளது. அதனை வாங்குவதற்குரிய ஆரம்பக்கட்டப் பணிகள் இடம்பெற்று வருகின்றமை உண்மைதான். அந்த வகையில் எந்த நாட்டிடமிருந்து வாங்கலாம் என்பது பற்றி தொழில்நுட்பரீதியாக ஆராயப்பட்டு வருகின்றது.இதன் ஓர் அங்கமாகத்தான் பாகிஸ் தான் தயாரிப்பான ஜே.எவ். 17விமானங்கள் பற்றியும் ஆராயப்பட்டது. ஆனால், அங்குதான் வாங்குவது என்று எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லை என்று கூறினார். (கு-சி)

பாராட்டி வாழ்த்துகின்றோம்
யாழ். பல்கலைக்கழக பொது பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் கலாநிதி பட்டத்தைப் பெற்ற எமது வடமராட்சி லயன்ஸ் கழக தலைவர்
லயன்ஸ் செ.சேதுராஜா
(B.A, PGDE, PGDEM, M.Sc
(Edu.Mgt, Mphil (Edu)
ஓய்வுநிலை அதிபர் யாழ். நெல்லியடி மத்திய கல்லூரி, வருகை விரிவுரையாளர் இலங்கை திறந்த பல்கலைக் கழகம் (PGDE, Dip.in youth Develop), தேசிய கல்வி நிறுவனம் (Med),இணைப்பாளர் தேசிய கல்வி நிறுவனம் (BEd) நெல்லியடி.
அவர்கள் 31ஆவது பொது பட்டமளிப்பு விழாவில் கல்வியியல் கலாநிதி பட்டத்தை பெற்றமையை வாழ்த்தி பாராட்டுவதுடன் [illegible] கல்விப் பணி தொடர நாம் வாழ்த்துகின்றோம்.




வாழ்த்துவோர்:-
அங்கத்தவர்கள், வடமராட்சி லயன்ஸ் கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று
(20.01.2016) புதன்கிழமை நடைபெற்ற
31 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவில்

**BFA சிறப்பு நுண்கலைமாணிப்**

பட்டத்தைப் பெற்ற

**கலாபூசணம் ஈழநல்லூர் P.S பிச்சையப்பாவின்**

பேரனும்

**திரு. திருமதி ரஜீந்திரன் வாசஸ்பதி**

தம்பதியரின் புதல்வனுமாகிய அன்புச்
செல்வம்

**ர.சாகித்தியன்**

அவர்களைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
ராகசுதன்(ராக்கி),
தரங்கினி



## காசி யாத்திரை

**நாள்கள்** 19 **ஆரம்பம்** 10.03.2016

**செல்லுமிடங்கள்:**

டெல்லி, ஆக்ரா, தாஜ்மகால், மதுரா, கிருஷ்ணர் பிறந்த இடம், அலகபாத், கங்கா, ஜமுனா சரஸ்வதி, திருவேணிசங்கமம்,காயா, புத்தகாயா,குருச்சேத்திரம், சீத்தாமடி, காசி,ஹரித்துவார், ரிஷிகேஸ், ஜெய்பூர், உஜைனி, இராமேஸ்வரம், தனுஸ்கோடி, உத்திரகோசமங்கை, திருப்புலானி, நவபாஷாணம், ராமர்பாதம், பஞ்சமுக ஆஞ்சினேயர், திருப்பதி, திருத்தணி, அலமேலுமங்கா, கானகஸ்திரி நேரமிருந்தால் வேறு ஆலயங்களும் தரிசிக்கலாம். பதிவு செய்த பின் பூரணவிவரம் தரப்படும்.

**பெற்றுக் கொள்ளும் ரூபாவிற்கு எமது சேவை**

கொழும்பு -டெல்லி, வாரணாசி- டெல்லி, சென்னை- கொழும்பு, விமானம், பயணம் முழுவதும், A/C வாகனவசதி, மூன்றுவேளை சுத்தமான சைவ உணவு (பிராமண சமையல்), குடி தண்ணீர், காப்பி, ரீ, இராமேஸ்வரம் போகவர ரெயின் 2 ஆம் வகுப்பு, உறங்கலிருக்கை சுற்றிப்பார்க்க வாகனவசதி, சென்னையில் ஒரு நாள் சொப்பிங் இவை அனைத்தும். மேலும் குறூப்பாக எடுக்கும் புகைப்படங்கள் 30 ஊர்திரும்பிய பின் தபாலில் அனுப்பி வைக்கப்படும். தரமான 2 பேருக்கு ஒரு றூம் எடுத்து தங்கவைக்கப்படுவீர்கள். மேலும் விவரங்கள் கேட்டு அறிந்து பதிவு செய்யவும்.

**கலாநிதி : T. ஸ்ரீ ரெங்கநாதன்,மகன் ராஜன்**
59, 3/6 செட்டியார் தெரு, கொழும்பு- 11
T.P: 077 768 0102, 077 736 2154


## உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஜூனுக்குள் புதிய முறையில்

கொழும்பு, ஜன. 21

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் எதிர்வரும் ஜூன் மாதத்துக்கு முன்னர் நடத்தப்படும் என்று மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் பைசல் முஸ்தபா தெரிவித்தார்.

தேர்தல் பிற்போடப்பட்டமைக்கு தற்போதைய அரசோ, ஜனாதிபதியோ காரணமில்லை என்றும், கடந்த அரசின் அலட்சியப்போக்காலேயே இந்த நிலை ஏற்பட்டது என்றும் அவர் கூறினார்.

மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சில் நேற்று முன் தினம் இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எல்லை நிர்ணயம் தொடர்பில் 1831 திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன. இது தொடர்பான விடயங்களை நான் நியமித்த குழு, விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது. கடந்த ஆட்சியின் வினைத்திறனற்ற செயற்பாடு காரணமாகவே எல்லை நிர்ணயத்தில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன. எல்லை நிர்ணயம் தொடர்பிலான விடயங்கள் எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் பூர்த்திசெய்யப்படும். மக்களுக்கு ஏற்றவகையில் அவைகள் மாற்றியமைக்கப்படவேண்டும்.

கடந்த 2012ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் விருப்பு வாக்குமுறை காரணமாக துப்பாக்கிச் சூடுகள்தான் இடம்பெற்றன. பழைய முறையில் தேர்தலை நடத்த மக்களின் ஆணை இம்முறை கிடைக்கவில்லை. தேர்தல் புதிய முறையில்தான் நடைபெறும். 70வீதம் தொகுதிவாரி முறையிலும், 30 வீதம் விகிதாசார முறையிலும் அமையும்படி தேர்தல் முறை மாற்றியமைக்கப்படும். பெண்களுக்கு 25வீதம் பிரதிநிதித்துவம் ஒதுக்கப்படும். எல்லை நிர்ணயம் உட்பட அனைத்துப் பிரச்சினைகளையும் தீர்த்த பின்னர், ஏப்ரல் மாதம் இறுதிப் பகுதியில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடவுள்ளோம் என்றார். (து-சி)


**விற்பனைக்கு** தொடர்பு: 078 6155 929

ஜப்பானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சைக்கிள் ( Push Bike) விற்பனைக்குண்டு.
ரூபா பத்தாயிரத்திலிருந்து.
திருநெல்வேலி.

**தவறிவிட்டது**

வேலாயுதம் ஆனைமுகன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (861731774 V), மோட்டார் சைக்கிளின் முக்கிய ஆவணங்கள் என்பன அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்வரும் தொ.பே இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (67669) (14.15)

தொடர்பு : 076 778 0882

**இறைச்சிக் கோழி விற்பனைக்கு**

புறொயிலர் .கல்பேட்
மொத்தமாவும் சில்லறையாகவும் மிகக்குறைந்த விலையில்
பெற்றுக்கொள்ளலாம்.
சுத்தம் செய்யப்பட்டது.
புறொயிலர்- 400/=
கல்பேட்-500/=

**U.S.A பாம்**
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை
T.P: 077 868 9500

**ELOCUTION வகுப்புக்கள்**

3 வயது முதல் 10 வயது வரையான பிள்ளைகளின் ஆங்கில உச்சரிப்பு முறையை மேம்படுத்தக் கூடிய வகுப்புக்கள்,

**திங்கள், புதன், வெள்ளி நாள்களில்**
**3.30 - 5.30 வரை**

Beefort International School
136,Navalar Road, Jaffna

உ

# அருள் மிகு இணுவில் கந்தசுவாமி கோயில்
# தைப்பூசதின உலகப் பெருமஞ்சத்திருவிழா





## விசேட பொங்கல்
## 24.01.2015

- **காலை 5.30 மணிக்கு பூஜை**
  **காலை 7.00 மணிக்கு 1008 சங்காபிஷேகம்**
  **காலை 7.30- 8.30** மணிவரையுள்ள சுபமுகூர்த்தவேளையில் இணுவில் சந்தியில் புதிதாக அமைக்கப்பெற்ற நுழைவாயில் கோபுர கும்பாபிஷேகம் இடம்பெறும்.
- முற்பகல் 10.00 மணிக்கு மாபெரும் பொங்கல் நிகழ்வு ஆரம்பமாகி மாலை 4மணிக்கு நிறைவு பெறும்.மதியம் விசேட பூஜை, பஜனை இடம் பெறும்.
- நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.
- இரவு 7 மணிக்கு உலகப்பெருமஞ்சத்தில் முருகப் பொருமான் வீதிவலம் வரும் நிகழ்ச்சி இடம்பெறும்.

**தொடர்ந்து மாபெரும் இன்னிசை கானங்கள் இடம்பெறும்**






**ஆலய தர்மகர்த்தா சபை**

**விளம்பர அனுசரணையாளர்கள்**

**ஐயாத்துரை சிற்பாலயம்**
கோயிலுக்குத் தேவையான தேர், வாகனங்கள் செய்திட நாடவேண்டிய இடம்
தாவடி வடக்கு,கொக்குவில்.

**கஜானன் பந்தல் சேவை**
சகல விதமான பந்தல் சேவைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்
சுன்னாகம், சிவன்கோயிலடி.

**ஸ்ரீ ஐங்கரன் வெதுப்பகம்**
தினமும் இரவு 8.00 மணிக்கு சுடச்சுட பாண், பணிஸ் வகைகளைப் பெற்றிட நாடவேண்டிய இடம்
இணுவில் தெற்கு, துரைவீதி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி வைத்தியசாலை விடுதிகளில் கட்டாக்காலிகளின் தொல்லை அதிகரிப்பு


## நோயாளர்களுக்கு பெரும் அசௌகரியம்

யாழ்ப்பாணம், ஜன.21
அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை வளாகத்தினுள் கட்டாக்காலி நாய்கள் மற்றும் பூனைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது. அதனால் நாளாந்தம் சிகிச்சை பெற வரும் நோயாளிகள் பல அசௌகரியங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாளாந்த சிகிச்சைக்கு வரும் நோயாளிகள் ஒருவித அச்ச உணர்வுடன் வளாகத்தினுள் வந்து சிகிச்சை பெற்று செல்ல வேண்டியுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அருகில் உள்ள இராணுவ முகாமில் இருந்து வரும் இவை, விடுதியில் தங்கி நின்று சிகிச்சை பெறவரும் நோயாளிகளின் உணவுப்பண்டங்களை இழுத்தெடுத்துச்செல்கின்றன.

அத்துடன் பூனைகள் கட்டில்களில் ஏறிப் பாய்ந்து சுடுநீர் போத்தல்கள் என்பவற்றையும் தட்டி வீழ்த்தி உடைக்கும் சம்பவங்களும் இடம் பெற்று வருகின்றன என்று நோயாளி




இங்கு பணிபுரியும் சிற்றூழியர் இவற்றைப் பொருட்படுத்தாமல் நடந்து கொள்வதாகக்கூறும்நோயாளிகள், நோயாளிகள் சாப்பிடும் இடம், மற்றும் சமையல் இடங்களில் இவை அலைந்து திரிவதைக் காணக்கூடியதாக உள்ளது

கள் கூறுகின்றனர்.

இரவு நேரங்களிலே இவைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகிறது. சிற்றூழியர் தொலைக்காட்சி பார்ப்பதில் கவனம் செலுத்துவதாகக் கூறும் நோயாளிகள், இவற்றைக்கட்டுப்படுத்துவதில் அக்கறை காட்டுவதில்லை என நோயா ளிகள் கூறுகின்றனர்.

ஆண், பெண் விடுதிகளில் நோயாளிகள் அற்றுக்காணப்படும் படுக்கைக் கட்டிலில் இரவு நேரங்களில் ஏறிப்படுத்தும் உறங்குகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் தோல் நோய்கள், தொற்று நோய்கள் பரவக்கூடிய சூழ்நிலை காணப்படுவதாக வைத்தியசாலைக்கு வருவோர் சுட்டிக்காட்டுகின்றனர்.



என்றும் தெரிவித்தனர்.

இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஐ-107)

# போக்குவரத்து விதிகளை மீறியோருக்கு அபராதம்

சாவகச்சேரி, ஜன.21
சட்டவிரோத மற்றும் போக்குவரத்து விதிமுறைகளை மீறியோருக்குசாவகச்சேரிநீதிமன்றில் நேற்று முன்தினம் ஒரு லட் சத்து 70 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. சாவகச்சேரிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப் பட்டபோது குறித்த அபராதம் விதிக்கப்பட்டது.

கசிப்பு வைத்திருந்த நபருக்கு 50 ஆயிரம் ரூபாவும், அனுமதிப் பத்திரமின்றி அரச சாராயம் வைத்திருந்த இருவருக்கு முறையே 15 ஆயிரம் ரூபா, 12 ஆயிரம் ரூபாவும், வழித்தட அனுமதிப் பத்திரமின்றி பயணிகளை ஏற்றி வந்த போது பொலிஸார் நிறுத்துமாறு சமிக்ஞை செய்தும் சமிக்ஞையை மீறி வாகனத்தை நிறுத்தாமல் சென்ற சாரதிக்கு 29 ஆயிரத்து 500 ரூபாவும், காப்புறுதிப்பத்திரமின்றி வாகனங்கள் செலுத்திய மூவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதமும், மதுபோதையில் வாகனம் செலுத்திய இருவருக்கு தலா 12 ஆயிரம் ரூபா வீதமும் அபராதம் விதிக்கப்பட்டது.

மிருசுவில் பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யப்படுகின்றது என்று கிடைத்த தகவலையடுத்து, யாழ்ப்பாணம் பொலிஸார் அந்தப் பகுதியில் சுற்றி வளைப்பை மேற்கொண்ட போது அகப்பட்ட நபரை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்திருந்தனர். இந்த நபர் எற்கனவே நீதிமன்றால் தண்டிக்கப்பட்டவர் என பொலிஸார் நீதிமன்றில் சுட்டிக் காட்டியதையடுத்து எச்சரிக்கை செய்யப்பட்டு 50 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

முதல் தடவையாக காப்புறுதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்தியவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-9)

# விளையாட்டு உடல்நல மேம்பாட்டு தேசிய வாரம் 25ஆம் திகதி முதல்

யாழ்ப்பாணம், ஜன.21
வட மாகாணத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை விளையாட்டு உடல்நல மேம்பாட்டு தேசிய வாரமும் மற்றும் விசேட தினமும் கடைப்பிடிக்குமாறு மாகாண பிரதம செயலகத்தால் அனைத்துத் திணைக்கள அலுவலகங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை விளையாட்டு உடல்நல மேம்பாட்டு தேசிய வாரமாகவும் 30 ஆம் திகதி விளையாட்டு உடல் நல மேம்பாட்டு விசேட தினமாகவும் அரசால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதால், இவற்றுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு பிரதம செயலாளர் செயலக உதவிப்பிரதம செயலாளர் திருமதி கு.காஞ்சனா அறிவித்துள்ளார்.

அத்துடன் இலங்கையில் அதிகரித்து வரும் தொற்றா நோய்கள் தொடர்பான நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள தேசிய நிகழ்ச்சித் திட்டத்துக்கு ஏற்பாடுகள் செய்து நடைமுறைப் படுத்துமாறும் அறிவித்துள்ளார். (ற-ஐ)





# அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கான மக்கள் பிரதிநிதிகள் குழு

பொதுமக்கள் எழுத்து மூலமான பிரேரணைகளை விதந்துரைக்கப்பட்ட வேறுபட்ட தலைப்புகளின் கீழ் தனித்தனியாக அனுப்புதல் வேண்டும். அவற்றை ஒரே கடிதவுறையிலிட்டு அனுப்பலாம்.

**விதந்துரைக்கப்பட்ட தலைப்புக்கள்**

1. அரசின் தன்மை
2. அரசாங்கத்தின் வடிவம் (ஜனாதிபதி முறைமை/ பாராளுமன்ற முறைமை)
3. அரசியல் யாப்பின் அடிப்படை கட்டமைப்பு
4. பிரஜாவுரிமை, சமயம், அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள், மொழியுரிமை, தனியாள் மற்றும் குழு உரிமைகள், அரசியல் கொள்கை மீதான குறிக்கப்பட்ட தத்துவங்கள்
5. சட்டவாக்கச் சபை (ஒற்றையாட்சி ஆட்சி/இரட்டையாட்சி)
6. அரசியல் யாப்பின் அல்லது பாராளுமன்றத்தின் மேலாதிக்கம்
7. அதிகாரப் பகிர்வு
8. நீதித்துறை மற்றும் நீதிமன்றக் கட்டமைப்பு
9. அரசியல் யாப்பு நீதிமன்றம்
10. அதிகார பங்கீடு பரவலாக்கம் மற்றும் உள்ளூராட்சி
11. மத்திய அதிகாரப் பங்கீடு
12. அரசியல் யாப்புச் சபை மற்றும் சுயாதீன ஆணைக்குழுக்கள்
13. பொதுச் சேவை
14. தேர்தல் சீர்திருத்தங்கள்
15. சட்டவாக்கத்தின் நீதித்துறை நோக்கம்
16. பாராளுமன்ற முறைமையின் கீழ் ஜனாதிபதியின் அதிகாரம்
17. பாராளுமன்ற முறைமையின் கீழ் ஜனாதிபதி தேர்தல்
18. பொதுமக்கள் பாதுகாப்பு
19. நிதி
20. வேறு விடயங்கள்

மேற்குறிப்பிட்டபடி பிரேரணைகளை தபால், பெக்ஸ், இ.மெயில் மற்றும் yourconstitution.lk என்ற-வெப்சைட் என்பனவற்றுக்கூடாக 2016 ஆண்டு பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்,**
**அரசியல் யாப்பு சீர்திருத்தத்திற்கான மக்கள் பிரதிநிதிகள் குழு,**
**விசும்பாய, கொழும்பு 2.**
**தொலைபேசி: 011 2437676 Fax: 011 2328780**
**இ.மெயில்: constitutionalreforms@gmail.com**
**வெப்சைட்: yourconstitution.lk**

ANCL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்திசேவா சங்கத்தின் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன. 21

அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் கலந்துரையாடல் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு அகில இலங்கை காந்திசேவா சங்கத்தின் மாவட்டக் காரியாலயத்தில் நடை பெற வுள்ளது.

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள தமிழ்நாடு சர்வோதய மண் டல செயலர் எஸ்.ரி.ராஜேந்திரன், மற்றும் தமிழ்நாடு இயற்கை மருத்துவச் சங்கத்தின் இணைச் செயலாளர் எஸ்.தேவ தாஸ் காந்தி ஆகியோர் இதில் கலந்து கொள்வர்.

முன்னதாக இவர்கள் நேற்று கிளிநொச்சி உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டதுடன், இன்று யாழ்.வருகை தந்து இந்தியதுணைத் தூதர், வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன், சிவ குருநாத பீடத்தில் வித்தியாசாகர சுவாமிகளையும் சந்திக்கவுள் ளனர். (ற-ஐ-ரி5)

**தமிழ்க்**

கிளிநொச்சியில் நடைபெறவுள் ளது.

கடந்த ஓகஸ்ட் மாதம் நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்த லின் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மாகாண சபை உறுப்பினர்களுக்குமான கூட்டத்தைக் கூட்டுமாறு பல தரப் பினராலும் கோரிக்கை விடுக் கப்பட்டது. வடக்கு மாகாண சபை யின் ஒரு தொகுதி உறுப்பினர்கள், கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தனை நேரில் சந்தித்து இந்தக் கோரிக் கையை முன்வைத்தும் இருந்த னர்.

இந்த நிலையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப் படுத்தும் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களும் அதேபோன்று வடக்கு – கிழக்கு மாகாண சபைக ளின் கூட்டமைப்பின் சகல உறுப் பினர்களையும் ஒருங்கிணைத்து இந்தக் கூட்டம் கிளிநொச்சி கூட் டுறவு மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

கூட்டமைப்பின் சகல நாடாளும ன்ற உறுப்பினர்களுக்கும், வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக் னேஸ்வரன் உட்பட வடக்கு – கிழக்கு மாகாண சபைகளின் சகல உறுப்பினர்களுக்கும் இந் தக் கூட்டத்துக்கான அழைப்பிதழ் தனித்தனியே அனுப்பப்பட்டுள் ளது.

புதிய அரசமைப்பு, ஐ.நா. தீர்மா னம், மீள்குடியேற்றம் மற்றும் வடக்கு – கிழக்கு அபிவிருத்தி உட் பட நிகழ்கால விடயங்கள் தொடர் பில் இந்தக் கூட்டத்தில் ஆரா யப்படும் என்று தெரிவிக்கப்படு கின்றது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை வவுனி யாவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

**இந்தியாவின்**

அவர் இவ்வாறு குற்றஞ்சாட்டி னார்.

நல்லாட்சி அரசு மாணவர்களை துரத்தித் துரத்தி தாக்குதல் நடத் துகிறது. ஆனால், ஜே.வி.பியோ மௌனம் காக்கின்றது. இவ்வா றான சம்பவங்கள் மகிந்த ஆட்சியில் இடம்பெற்றிருந்தால் அதை ஜே.வி.பி. பெரிதுபடுத்தி யிருக்கும்.

மகிந்தவைத் திட்டுவதால் மாத் திரம் மாற்றத்தை ஏற்படுத்தி விடமுடியாது. நாம் குற்றமிழைக்க வில்லை. அதனால், எவருக்கும் அஞ்சவேண்டியதில்லை.

அதேவேளை, இந்தியாவின் தேவைக்கேற் பத்தான் அரசு செயற்படுகிறது. சீபா உடன்படிக்கை பெயர்மாற்றத்துடன் வரவுள்ளது. இத னால், இந்தியாவின் அனுமதியுடனேயே விற்பனை செய்ய வேண்டியநிலைமை எமது நாட்டவருக்கு ஏற்படும். ஆகவே, எதிர்காலத்திலும் ஜே.வி. பியும் பொது எதிரணியில் இணை யும் என நம்புகி றேன்- என்று நாமல் கூறினார். (த-சி)


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**சின்னட்டி செல்லையா**

திதி: பூர்வபட்ஷ துவாதசி
(21.01.2016 வியாழக்கிழமை)

**தோற்றம்**
17.05.1934

**மறைவு**
23.01.2013

அன்பும், பாசமும் நிறைந்த எங்கள் ஐயா!
ஆண்டுகள் மூன்று கடந்தாலும் உங்கள் நினைவுகள் அகலுமா
எங்கள் மனங்களிலிருந்து
எங்கள் உயிர் உள்ளவரைக்கும்
உங்கள் நினைவுகள் தொடரும் ஐயா.....

கலைநகர்,
அளவெட்டி தெற்கு. (67700)(11.15.18) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலய அதிபர் திரு. பசுபதி தர்மபூபதி அவர்களின் அன்புத் தாயார்.

**திருமதி மேரி திரேசா பசுபதி**
(ஓய்வு பெற்ற அதிபர்)

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற் றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திகின்றோம்.

பாடசாலைச் சமூகத்தினர்.
**யா/ கொடிகாமம் அரசினர் வித்தியாலயம் கொடிகாமம்.**

## 31ஆம் நாளில் நினைவுகளை மீட்கின்றோம்

பிறப்பு
20 . 02 . 1933



இறப்பு
22 . 12 . 2015

அமரர் **ஞானமணி நடராசா**
(இளைப்பாறிய அதிபர் - யா/மண்டைதீவு கார்த்திகேய வித்தியாலயம்)

குடும்பத்தின் குலவிளக்காய் குவலயத்தில் வந்துதித்த – எம்
வாழ்வின் வழிகாட்டியே ! வளம் குன்றா வைகையே !
கல்விப்பணியின் கலங்கரை விளக்கே !
சொல்விற்பனங் கொண்ட சோர்விலா நெஞ்சமே !
இறைவனுக்கொப்பான சேவையில் நிறைவுற மகிழ்ந்தீர்கள் !
குறைவற இறைபணி இதமுடன் புரிந்தீர்கள் !
சமூகத்தொண்டினை சலிக்காது ஆற்றிய – மனம்
சளைக்காத சரித்திரமே ! விளைந்திடும் நின் கருமம் தனில்
திளைத்திட்ட தத்துவமே ! தாழாத நின் பிரிவால்
மீளாத்துயரில் நாம் – உங்கள் நினைவுகளை மீட்கின்றோம்

[illegible]/2 நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

ஞானலிங்கம் குடும்பத்தினர்.
செல்வலிங்கம் குடும்பத்தினர்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**மனுவிற்பிள்ளை செல்வராசா**
(பீற்றர்)

பிறப்பு
10.12.1947

இறப்பு
21.01.2011

அன்பாலும் பண்டாலும் எம்
அனைவரையும் அரவணைத்த
எம் அன்புத் தெய்வம் நீங்கள்
மீளாத் துயில் கொண்டு
ஐந்தாண்டுகள் ஓடிமுடிந்து விட்டதையா!
நம்பமுடியவில்லை -எம்
ஆழ் மனதில் சோகம் ஆழ்கடல் போல்
பரந்து மாமலை போல்
உயர்ந்து நின்றபோதும்
நாளும் பொழுதும் எம் இதயத்தில்
அகல் விளக்காய்ப் பிரகாசித்துக்
கொண்டிருப்பதனால் உங்களை
மறக்க முடியாது தானே!
நீங்கள் எங்களுடன் வாழ்ந்த
நாள்களும் நீங்காத நினைவுகளும்
என்றும் ஆறாதவை
உங்கள் நினைவே எங்களுயிர் மூச்சாய்
வாழ்கின்றோம்.

அன்னாரின் ஐந்தாம் ஆண்டு நினை வஞ்சலி இன்று (21.01.2016) வியாழக் கிழமை பொற்பதி புனித இராயப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி முற்பகல் 8.00 மணியளவில் நடைபெற்று, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத் திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்

மனைவி - தவமணி,பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.
போற்[illegible],
தொ.பே.077 787 5626

(65905) (13.15.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காய உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை

## பிரதி மாகாண விவசாயப்பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.21

இலங்கையின் மொத்த தேசிய வெங்காய உற்பத்தியின் 60 வீதத்தை இந்த வருடம் யாழ்ப் பாணத்தில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் கிருஸ்ணன் ஸ்ரீபால சுந்தரம் தெரிவித்தார்.

போட்டிச் சந்தையில் இறக்குமதி செய்யப்படும் வெங்காயத்தின் விலைக்கு முகம்கொடுக்கும்வகையில் உற்பத்திச் செலவைக் குறைத் தல், உற்பத்திவிலைத்தழம்பலைக் குறைத்தல், தொடர்ச்சியாக வெங் காயத்தை உற்பத்தி செய்தல் மற் றும் உண்மைவிதையை உற்பத்தி செய்தல் இந்த நான்கு திட்டங் கள் மூலம் வெங்காயத்தின் உற் பத்தியை யாழ்ப்பாணத்தில் தக்க வைத்துக் கொள்ள முடியும் என் றும் அவர் குறிப்பிட்டார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது-

இதனால் வெங்காயம் சந்தையில் உச்ச விலை விற்கும் காலப் பகுதியில் நுகர்வோர் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள முடியும்.

இதனால் பயிர்ச் செய்கைச் செலவைக் குறைத்தலும், உற்பத்தியால் கூடிய இலாபத்தை விவசாயிகள் பெற்றுக் கொள்ளலும், மேலும் சாதக மற்ற கால நிலையில் யாழ்ப்பாணத்தின் கடல்நீரேரியை அண்டிய பகுதிகளான புங்குடுதீவு, அனலைதீவு, வல்லை, குடத்தனைப் பகுதிகளில் கடல் நீரேரியை நம்பி விவசாயம் மேற் கொள்ள விவசாயிகளை ஊக்கு விப்பதற்கும் விவசாயத் திணைக் களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

> உண்மை விதை உற்பத்தியை மேலும் ஊக்குவிப்பதன் மூலம் 2016 நுகர்ச்சியின் மூலம் தேசிய வெங் காயத்தின் 60 வீதத்தை யாழ்.மாவட் டத்தில் இருந்து பெற்றுக் கொள்ள முடியும்

கடல்நீரேரியை நம்பி வெங்காயம் பயிரிடும் விவசாயிகளுக்கு விதை வெங்காயம் வழங்கப்படும். இத னால் யாழ் மாவட்டத்தின் குறித்த பகுதிகளில் இருந்து 1000 ஹெக் டெயர் வெங்காய உற்பத்தியை மேற் கொள்ள முடியும்.

தற்போது யாழ்ப் பாணத்தின் பெரும்பகுதி களில் குமிழ் வெங் காய விதைகள் மூலமே வெங் காயம் பயிரிடப்ப டுகிறது. இதற் குப் பதிலாக உண்மை விதைகளை நட்டு அவற்றை மானிய அடிப்படையில் விவசாயி களுக்கு வழங்க நடவ டிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனால் குமிழ் விதைகளின் 75 வீத செலவைக் குறைத்தலும், போட்டிச் சந்தையில் வெங் காயத்தை நல்ல விலைக்கு விற் றலும், இதற்காக உண்மை விதை உற்பத்தி செய்யும் திட்டம் இலங்கையில், யாழ்ப்பாணத்தில் முதன் முதலாக வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் உண்மை விதை உற்பத்தியை மேலும் ஊக்குவிப்பதன் மூலம் 2016 நுகர்ச்சியின் மூலம் தேசிய வெங் காயத்தின் 60 வீதத்தை யாழ்.மாவட் டத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.- என்றார். (ற-ஜ-107)

# மத்திய பஸ் நிலையத்தை இடமாற்றுமாறு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.21

போதனா வைத்திய சாலை வீதியில் நான்கு சாலை அமைப்பு முறையை உருவாக்கி பஸ் நிலையத்தை வேறுபகுதிக்கு இடமாற் றம் செய்வதனுடாக நகரத்தில் நிலவும் போக்குவரத்து நெரிசல் களை குறைத்து, மக்களின் சுதந்திரமான செயற்பாட்டுக்கு வழிசெய்ய முடியும் என ஓய்வு நிலை துறைசார் வல்லுநர்களும், அரச அதிகாரிகளும் உலக வங் கியின் பிரதிநிதியிடம் கோரிக்கை முன்வைத்துள்ளனர்.

பொது அமைப்புக்கள் மற்றும் ஓய்வுநிலை உத்தியோகத்தர் களுடன் தந்திரோபாய நகரத்திட் டமிடல் தொடர்பான ஆரம்பமட்ட கலந்துரையாடலின் இரண்டாம் நாள் அமர்வில் இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலின் போது நகரத்தில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக செய்யப்பட வேண்டிய திட்டங்களில் வீதி அகலிப்புக்கள், வர்த்தக நிலைய இடமாற்றங்கள், வாகனத் தரிப் பிடங்கள், துவிச்சக்கர வண்டிப் பயணிகள், பாதசாரிகளின் நலன் கள் அதிகளவில் கலந்துரையாடப் பட்டதுடன், பஸ் நிலையத்தை இடமாற்றம் செய்வதும் நகரின் வேறுபகுதியில் ரயில் நிலையம் அருகில் மத்தியபஸ்நிலையத்தை இடமாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையும் முன் வைக் கப்பட்டது. (ற-ஜ-ரி5)

# மாணவர் மீதான ஒழுக்காற்று நடவடிக்கை சுற்றறிக்கையின்படியே அமைய வேண்டும்

## இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 21

மாணவர்கள் தவறுவிடும் பட் சத்தில் ஒழுக்காற்று விசாரணை நடத்தப்பட வேண்டியதும், நட வடிக்கை எடுக்கப்பட வேண் டிய தும் சரியானதே. ஆனால் அவை சுற்றறிக்கைக்கு அமை வாகவே மேற்கொள்ளப்பட வேண்டும். - இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் விடுத்துள்ள செய்திக் குறிப் பிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

பாடசாலைகளில் மாணவர் களுக் கான ஒழுக்காற்று நட வடிக்கை களின் போது பாட சாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் வரம்பு மீறிச் செயற்படுவதை நிறுத்த வேண்டும்.

மாணவர்களுக்கான ஒழுக்க நடவடிக்கைகளில் ஆசிரியர் களுக்குரிய வகிபாகம் தொடர் பிலும், மாணவர்களுக்கான ஒழுக்க நெறி பற்றியும் சுற்றறிக் கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் உள்ள விடயங்களைப் பின்பற்றினால் பிரச்சினை வராது. அதிலுள்ளவற்றை உரிய முறையில் செய்ய வேண்டும். அது கட்டாயமானது.

> ஒவ்வொரு பாட சாலையும் தத்தமது பாட சாலைக்குரிய ஒழுக்க நியதி என்ன என் பதனைக் கொண்ட ஒழுக்கக் கோவை ஒன்றை வைத்திருத் தல் வேண்டும்.

ஆனால் பல பாடசாலைகளினது அதிபர்கள், பாடசாலை நிர் வாகங்கள் மாணவர்களுக்குரிய குறித்த சுற்றறிக்கையை உரிய முறையில் தயாரிப்பதில்லை. அதனால்தான் பெரும் பிரச்சி னைகள் ஏற்படவும் மாணவர்களின் ஒழுக்கம் சீர்குலையவும் காரண மாக அமைந்து விடுகிறது.

எனவே ஒவ்வொரு பாடசாலை யும் தத்தமது பாடசாலைக்குரிய ஒழுக்க நியதி என்ன என்ப தனைக்கொண்ட ஒழுக்கக்கோவை ஒன்றை வைத்திருத்தல் வேண் டும். அதனைச் சரியாக நடை முறைப்படுத்த வேண்டும். மாண வர்களின் மனநிலையில் மோச மான தாக்கத்தை ஏற்படுத்தாத வகையில் ஒழுக்க நடவடிக்கைகள் கட்டாயம் எடுக்கப்பட வேண்டும்.

ஏனைய மாணவ மாணவிகளின் முன்னிலையில் உடல், உள ரீதி யாக மாணவர்களைத் துன் புறுத்துவதும், மாணவர்களின் ஆடைகளைச் சேதப்படுத்து வதும் மாணவரின் உரிமையை, ஆசிரியர்கள் மீறும் செயற் பாடாகும். இப்படியான செயற் பாடுகளை இலங்கை ஆசிரியர் சங்கம் வன்மையாக கண்டிப் பதுடன் அவ்வாறு செயற்படும் ஆசிரியர்களுக்கு ஆதரவாக வும் செயற்பட முடியாது.

மாணவர்களின் ஒழுக்காற்று நட வடிக்கையின் போது மாண வர்களின் உரிமை பாதிக்கப் படாத வகையில் பாடசாலை நிர்வாகங்கள் நடவடிக்கை மேற் கொள்ளவேண்டும்என இலங்கை ஆசிரியர் சங்கம் வலியுறுத்து கிறது.- என்றுள்ளது. (ற-ஜ-4)

# தண்டப்பணம் அறவிடும் நடவடிக்கையால் நகரின் பிரதான வீதிகளில் குப்பை குறைவு

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ். மாநகரப்பகுதியில் குறிப் பிட்ட சில பிரதான இடங்களில் கழிவுப் பொருள்களைக் கொட் டுவது சற்று குறைவடைந்துள் ளது. தண்டப்பணம் அறவீடு நட வடிக்கையால் சுற்றாடலில் சுகாதாரம் பேணப்படுகின்றது.- இவ்வாறு மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார்.

வீதியோரங்களில் கழிவுப் பொருள் களைக் கொட்டுவோர் மீது உடன டியாக தண்டப்பணம் அறவிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன.

இதன் காரணத்தால் கழிவுப் பொருள்கள் மற்றும் குப்பை களைக்கொட்டுவோர்எண்ணிக்கை குறைவடைந்துள்ளன.

நகரை அண்டிய நாவலர் வீதி, இராசாவின் தோட்டவீதி, ஆஸ் பத்திரி வீதி போன்ற இடங்களில் வீதியோரங்களில் குப்பைகள், கழிவுகளை மக்கள் கண்ட கண்ட இடங்களில் கொட்டி விட்டுச்செல் வதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்படு வதோடு நகரில் சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகின்றன.

இதனால் மக்கள் தமது வீட்டுக் கழிவுகளைச் சேகரித்து தரம் பிரித்து பொதியாக்கி வைக்க வேண்டும். சேகரிக்கும் கழிவுகள் மாநகர கழிவகற்றும் பிரிவின ரால் வாரத்தில் அவை இரண்டு தடவைகள் அகற்றப்படும். இவற் றையும் மீறி கழிவுகளை வீதியோரங் களில் கொட்டுவோர் மீது உடன டியாகத் தண்டப்பணமாக ஆயிரம் ரூபா அறவிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த வாரத்தில் இந்தத் தண்டப் பணம் அறவிடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கழிவு களை வீதியோரம் கொட்டிய சிலர் தண்டப்பணம் செலுத்த வேண் டிய நிலை ஏற்பட்டது.

இதனை அடுத்து வீதியோரத்தில் கழிவுகள் கொட்டுவது திடீரெனக் குறைவடைந்துள்ளது. குறிப்பாக சிலர் இரவு நேரங்களில் கழிவு களை வீதிகளில் வீசி விட்டுச் செல்கின்றனர்.

இவ்வாறு இரவில் கழிவுகளை வீசி விடுவோர் மீதும் தண் டப் பணம் அறவிடுவதற்கான நடை முறை யையும் மாநகராட்சி மன்றம் நடை முறைப்படுத்தவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ஜ-17)

# கோணேஸ்வரா மாணவன் மாவட்டத்தில் 3ஆம் இடம்

திருகோணமலை, ஜன.21

2015ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட் சை யில் திரு கோண மலை ஆர். கே. எம். கோணேஸ் வரா இந்துக் கல்லூரி மாண வன் வர்ண குல ராஜா சாரங்கன் உயிரியல் பிரிவில் 2ஏ,பி புள்ளிகளைப் பெற்று மாவட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றுள்ளார்.



இதுகுறித்து அவர் தெரி விக்கையில் -

இந்தச் சாத னையை நிலை நாட்டு வதற்கு எனக்கு உதவிய அனைவருக்கும் நன்றிகள். சிறந்த மருத்துவராக வந்து நாட்டுக்கு சேவை செய்வதே எனது இலக்கு. சிறுவயதில் இருந்தேமருத்துவராக வேண் டும் என்பது எனது இலக்கு - என்று தெரிவித்தார்.

# மரக்கறிகளின் விலைகள் யாழில் குறைவடைகின்றன

யாழ்ப்பாணம், ஜன.21

யாழ். குடா நாட்டில் மரக்கறி வகை களின் விலைகள் சற்றுக் குறை வடைந்து வருகின்றன. எதிர் வரும் தைப்பூசத் திருநாளுக்குப் பின் னர் அதன் விலைகள் மேலும் குறை வடையவாய்ப்புக்கள் உள்ளனஎன்று விவசாயிகள் தெரிவித்துள் ளனர்.

அனேகமான விவசாயிகள் தைப் பூசத் திருநாளுக்குப் பின்னரே மரக் கறிவகைகளை அறுவடை செய்வதற்கும் ஏற்பாடுகளை மேற் கொண்டுள்ளனர்.

நிலவரப்படி கத்தரிக்காய் கிலோ 110 ரூபாவாகவும், பாவற்காய் கிலோ 150 ரூபாவாகவும், பயிற்றங் காய் கிலோ 160 ரூபாவாகவும், உருளைக்கிழங்கு கிலோ 70 ரூபா வாகவும், தக்காளிப்பழம் கிலோ 60 ரூபாவாகவும், பூசணிக்காய் கிலோ 50 ரூபாவாகவும், கரட் கிலோ 240 ரூபாவாகவும், பச்சை மிளகாய் கிலோ 280 ரூபாவாகவும் வெங்காயம் கிலோ 100 [illegible] வும் விற்பனை செய்யப்படுகின்றன.

கடந்த ஆண்டு நவம்பரில் பெய்த [illegible] மரக்கறிப் பயிர்கள் முழுமையாக அழிவடைந்தன. இதன் காரணத் தால் மரக்கறி வகைகளுக்குப் பெரும் பற்றாக்குறையும், தட்டுப் பாடும் நிலவியதோடு அதன் விலை களும் அதிகரித்துக் காணப்பட்டன.

இந்த விலை அதிகரிப்பால் நுகர் வோர் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

தற்போது குடாநாட்டின் விவசாயி கள் மரக்கறிச் செய்கையில் [illegible] சந்தைகளில் அதிகரித்தும் [illegible] காணப்படுகின்றன. (ஜ-17)

# வடக்கு மாகாண சபையில் நூல் நிலையம் அமையும்

சாவகச்சேரி,ஜன.21

உள்ளூராட்சி சபைகள் மற்றும் மாகாண சபை ஆகியவற்றால் வெளியிடப்பட்ட புத்தகங்கள் மற் றும் ஆவணங்கள் பற்றிய சுற்ற றிக்கைகளை உள்ளடக்கிய நூல் நிலையத்தை வட மாகாண சபை உருவாக்கவுள்ளது.

இந்த நூல் நிலையத்தை உரு வாக்க உள்ளூராட்சி சபைகளால் இதுவரை வெளியிடப்பட்ட வெளி யீடுகள், ஆண்டறிக்கைகள், நூல்கள், சஞ்சிகைகள், துணை விதிகள், மற்றும் நியதிச் சட்டங் கள்பற்றியதகவல்களை அனுப்பி வைக்குமாறு யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணை யாளர் அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் அறிவித்துள் ளார். (ற-ஜ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 3 மாதங்களுக்கு ஒரு தடவை அபிவிருத்திக் குழுக் கூட்டம்

## நாடாளுமன்ற உறுப்பினர் மஸ்தான் மன்னாரில் தெரிவிப்பு

மன்னார், ஜன.21

ஜனாதிபதியின் அறிவுறுத்தலுக்கு அமைவாக இந்த ஆண்டு முதல் மூன்று மாதங்களுக்கு ஒருதடவை மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டம் நடைபெறும் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மன்னார் மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தின் இணைத்தலைவராக கலந்து கொண்டு ஆரம்ப உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்திக் குழு கூட்டம் மூன்று ஆண்டுகளின் பின்னர் நடைபெறுகின்றது. மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டம் நீண்ட காலமாக இடம்பெறாமையின் காரணத்தினாலேயே எங்களுடைய மாவட்டம் அபிவிருத்தி சார்ந்து முன்னேற்றம் காணப்படாமல் உள்ளது.

ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனவின் புதிய திட்டத்தில் இன்று இந்த அபிவிருத்திக் குழுக் கூட்டத்துக்கு மக்களுடைய நலன் சார்ந்து பேசக்கூடிய விடயங்களைத் தீர்மானிக்கக் கூடிய நான்கு இணைத் தலைவர்கள் நியமிக்கப் பட்டுள்ளோம்.

அதே போன்று ஜனாதிபதியால் எங்களுக்கு இன்னொரு விடயமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தின் அபிவிருத்தியைத் தீர்மானிப்பதற்கும், அது பற்றி பேசுவதற்கும் வருடத்தில் ஒரு நாள் இந்த அபிவிருத்தி குழுக் கூட் டத்தை நடத்தினால் அபிவிருத்தி மெதுவாகவே நகரும்.

எனவே மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாவட் அபிவிருத்தி குழுக் கூட்டத்தை நடத்த வேண்டும். அப்போது தான் எங்களது மாவட்டங்கள் அபிவிருத்தியை நோக்கி வேகமாக நகரும் எனவும் எங்களிடம் ஜனாதிபதி கூறியிருந்தார். எனவே இந்த வருடத்தில் இருந்து மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாவட்ட அபிவிருத்திக் குழுக்கூட்டம் இடம்பெறும்.

- என்றார். (ற-ஜ-21)

# சட்டவிரோத கருங்கல் அகழ்வு வவுனியாவில் தொடர்கின்றது

## பொதுமக்கள் குற்றச்சாட்டு

வவுனியா,ஜன.21

வவுனியா மாவட்டத்தில் பல பகுதிகளிலும் சட்டவிரோதமான முறையில் கருங்கல் அகழும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்று பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

ஓமந்தை- கோமரசங்குளம், சிதம்பரபுரம், விளாத்திக்குளம் உள்ளிட்ட பகுதிகளில் இந்த சட்டவிரோத நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கற்கள் பெருமளவு தென்னிலங்கைக்கு கடத்தப்படுகிறது. சூழல் பாதுகாப்புச் சட்டங்களையும், விதிமுறைகளையும் மீறி சட்ட விரோதமாக இந்த அகழ்வு நடைபெற்று வருகின்றமை தொடர்பாக அரச அலுவலகங்களுக்குத் தெரியப்படுத்திய போதும் தடுத்து நிறுத்த அவர்கள் முன்வரவில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

> நிர்ணயிக்கப்பட்ட ஆழத்தைவிட கூடுதலான ஆழத்துக்கு கருங்கல் தோண்டப் படுவதால் சூழ உள்ள பிரதேசங்களில் நிலத்தடி நீர் வற்றிப் போகின்றது

நிர்ணயிக்கப்பட்ட ஆழத்தைவிட கூடுதலான ஆழத்துக்கு கருங்கல் தோண்டப்படுவதால் சூழ உள்ள பிரதேசங்களில் நிலத்தடி நீர் வற்றிப் போகின்றது.

வெடிவைத்து தகர்க்கப்படும் அதிர்வுகளால் கட்டடங்களில் விரிசல் ஏற்படுகின்றது.

கற்கள் கனரக வாகனங்கள் மூலம் கொண்டு செல்லப்படுவதால் வீதிகள் மோசமாக பாதிக்கப்படு கிறது. பாதிக்கப் பட்ட வீதிகள் நீண்டகாலமாக திருத்தப் படாமையால் பல தரப்பட்டோரும் பாதிக்கப்படுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் கற்கள் தகர்க்கப்படுவதற்கு பயன்படுத்தப்படும் வெடிச் சத்தங்களால் உளவியல் ரீதியாக நோயாளிகள், மாணவர்கள் உள்ளிட்டோரும் பாதிக்கப்படுகின்றனர்.

இவ்வாறு தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் கல் அகழ்வுகளை தடுத்து நிறுத்த அரச அதிகாரிகள் முன்வரவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஜ-402)

# 4,000 குடும்பங்களுக்கு வீட்டு வசதிகள் இல்லை

## கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவில்

முல்லைத்தீவு, ஜன.21

முல்லைத்தீவு மாவட்டம் கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 13 ஆயிரத்து 28 குடும்பங்களில் 4 ஆயிரத்து 972 குடும்பங்களுக்கு வீட்டு வசதிகள் இல்லை என்று பிரதேச செயலக புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

> 46 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய 652 சதுரக் கிலோ மீற்றர் பரப்பைக் கொண்ட இந்தப் பிரதேச செயலர் பிரிவில் 13 ஆயிரத்து 28 குடும்பங்களைச் சேர்ந்த 41 ஆயிரத்து 588 மக்கள் வசிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் அதிக மக்கள் வாழும் பிரதேச செயலாளர் பிரிவாக கரைதுறைப்பற்றுப்பிரதேச செயலர் பிரிவு காணப்படுகின்றது. 46 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய 652 சதுர கிலோ மீற்றர் பரப்பைக் கொண்ட இந்தப் பிரதேச செயலர் பிரிவில் 13 ஆயிரத்து 28 குடும்பங்களைச் சேர்ந்த 41 ஆயிரத்து 588 மக்கள் வசிக்கின்றனர்.

அவர்களில் 5 ஆயிரத்து 111 குடும்பங் களுக்கு இந்திய வீட்டுத்திட்டம் உள்ளிட்ட வீட்டுத்திட்டங்களின் ஊடாக வீட்டு வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று ஆயிரத்து 829 குடும்பங்களுக்கு வீடுகள் பகுதித் திருத்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டது.

ஆயிரத்து 115 வீடுகளுக்காக பகுதிக் கொடுப்பனவுகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அதேவேளை 4 ஆயிரத்து 972 குடும்பங்களுக்கான வீட்டு வசதிகள் 2016 ஆம் ஆண்டின் நிலவரத்தின் பிரகாரம் தேவை என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (ற-ஜ-101)



முல்லை வித்தியானந்தாக் கல்லூரியின் புதிய முயற்சியாக மாணவர்கள் இடையே உணவு தயாரித்தல் போட்டி இடம்பெற்றது. கல்லூரியின் அதிபர் கே.சிவலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் தரம் 9 மாணவர்கள் ஒரு பிரிவாகவும், உயர்தரத்தின் தொழில் நுட்ப பிரிவு மாணவர்கள் ஒரு பிரிவாகவும் என இரு பிரிவுகளாக நடைபெற்றது. இரு பிரிவுகளிலும் முதல் மூன்று இடங்களையும் பெற்றவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன. குறித்த நிகழ்வில் வலய கல்விப் பணிமனையின் அலுவலர்கள் மற்றும் அயல் பாடசாலை அதிபர்கள், ஓய்வு நிலை அதிபர்கள் என ஏழு பேர் நடுவர்களாக பங்கு கொண்டனர். (ற-ஜ-101)

# முதியோருக்கு இலவச மருத்துவ சேவைகள்

கிளிநொச்சி, ஜன.21

அரச மருத்துவமனை சேவையைப் பெறுவதற்கு போக்குவரத்து சேவையை இலகுவாகப் பெறமுடியாத நிலையில் உள்ள முதியோர்களுக்கான இலவச மருத்துவச் சேவையை வழங்க கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் மா.ஜெயராஜா நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் அனுசரணையுடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள முதியோர் சங்கங்களின்வேண்டுகோளின் படி இலவச மருத்துவ சேவைகள் கிராமங்கள் தோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

இதன் அடிப்படையில் பளைப் பிரதேச முதியோர் களுக்கான இலவச மருத்துவச் சேவை நாளை வெள்ளிக்கிழமை இத்தாவில் கிராம சனசமூக நிலையத்தில் நடத்தப்படவுள்ளது.

அதில் இத்தாவில் கிராமத்தை அண்டியுள்ள முகமாலை, கச்சார்வெளி, செல்வபுரம், அரசர்கேணி உள்ளிட்ட கிராம முதியோர்களையும் பளைப் பிரதேச முதியோர்களையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது

அண்மையில் கரைச்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஊற்றுப்புலம் கிராமத்தில் நடத்திய இலவச மருத்துவ முகாமில் பெருமளவு முதியோர்கள் கலந்து கொண்டனர். (ற-ஜ-9)

# பணிப் புறக்கணிப்பு நடத்தியும் கோரிக்கைகளுக்கு தீர்வில்லை

## கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க கிளைகளின் பணியாளர்கள் விசனம்

கிளிநொச்சி, ஜன.21

ஆறு நாள்களாகப் பணிப் புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையிலும், தமது கோரிக்கைகள் தொடர்பில் எவரும் கவனம் செலுத்தவில்லை என கரைச்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுக் கிளைகளில் பணியாற்றுபவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் மேலும் தெரிவித்துள்ளதாவது-

கரைச்சி கிழக்கு பல நோக்கு கூட்டுறவுக் கிளைகளில் பணியாற்றுபவர்களுக்கு மாதாந்தச் சம்பளம் சரியாக வழங்கப்படுவதில்லை.

கடந்த 25 மாதமாக தமது சம்பளத்தில் வெட்டப்பட்ட சேமலாப நிதி உரிய இடத்துக்கு அனுப்பி வைக்கப்படவில்லை. எமது கிளைகளில் வியாபாரத்தை மேற்கொள்வதற்கு பொருள்கள் இல்லை.

கடந்த 8 ஆம் திகதி இது தொடர்பான கடிதம் ஒன்றைக் கரைச்சி கிழக்கு பொது நோக்கு முகாமையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கிளிநொச்சி, மாவட்ட அரச அதிபர் கிளிநொச்சி, கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் யாழ்ப்பாணம், வட மாகாண கூட்டுறவு அமைச்சர் பொ. ஐங்கரநேசன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன ஆகியோருக்கு அனுப்பிவைத்திருந்தோம். அதற்குப் பதில் கிடைக்காத பட்சத்தில் கடந்த 13 ஆம் திகதி முதல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவித்திருந்தோம் - என்றனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

இந்த விடயம் தொடர்பாகத் தமது தலைமையகத்துக்கு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கவுள்ளேன்.

கரைச்சி கிழக்கு பலநோக்குக் கிளையானது 2013.12.31 வரை எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் படி 1 கோடி 57 லட்சம் ரூபா நட்டத்தில் இயங்கியது. இது தொடர்பில் விரைவில் தீர்வு பெறப்படும்- என்றார். (ற-ஜ-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரியாலைக் கடலேரியில் தொடரும் மணல் அகழ்வு

## தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.21
அரியாலை உதயபுரம் கிராம கடலேரியின் கரையோர மணல் தினமும் வாகனங்களில் எடுத்துச் செல்லப்படுவதால் மணியந் தோட்டம், உதயபுரம், நாவலடி போன்ற கிராமங்களுக்குள் வெள்ள நீர் புகுகின்றது. அந்தப் பகுதியில் உள்ள நெல் வயல்களும் கடல்நீரால்பாதிப்படையும் நிலை ஏற்பட்டுள்ளது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தினமும் சுமார் 15 தொடக்கம் 25 வரையான வாகனங்களில் இரவு வேளைகளில் மணல் எற்றிச் செல்லப்படுகின்றது என்றும், கரையோரத்திலிருந்து சுமார் 2 கிலோ மீற்றர் நீளத்துக்கு குறைந்தது பத்து அடி ஆழத்துக்கு மணல் அகழ்ந்து எடுக்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

> உடனடியாக கட்டுப் படுத்தாவிடில் மூன்று கிராம மக்களும் எதிர் காலத்தில் அந்தப் பகுதி யிலிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்படலாம் என மக்கள் அச்சம் தெரிவிக் கின்றனர்.

இதனை உடனடியாக கட்டுப் படுத்தாவிடில் மூன்று கிராம மக்களும் எதிர்காலத்தில் அந்தப் பகுதியிலிருந்துவெளியேறவேண்டிய நிலை ஏற்படலாம் என மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கிராம அலுவலர், பிரதேச செயலர், மாவட்ட அரச அதிபர், கரையோரப் பாது காப்புப் பிரிவினர் பொலிஸார் உட்பட அனைவருக்கும் அறிவித்தும் இதுவரை பயன் கிடைக்கவில்லை.

கடந்த வாரம் இரவு பொலிஸார் ரோந்து வந்த வேளையில் வாகனங்களில் கொண்டு வரப்பட்ட மணலை வீதியில் பறித்துவிட்டு வாகனங்கள் தப்பிச் சென்றுள்ளன.

அந்தப் பகுதியில் புதிதாக வீதி அமைக்கப் பட்டு வரும் நிலையில் வீதியில் மணல் பறித்து விட்டுச்சென்றதால் வீதிசெப்பனிடுவோர் வேலையை இடைநிறுத்தி விட்டுச் சென்றுள்ளனர் என்றும் மக்கள் தெரிவித்தனர்.

இரவு வேளை பயணிக்கும் கனரக வாகனங்களால் செப்பனிடப் பட்டு வரும் வீதி பழுதடைகின்றது என்றும் அவர்கள் கூறினர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஐ-9)

### தெல்லிப்பழை ப.கூ.சங்க முன்னாள் தலைவருக்குச் சிலை

யாழ்ப்பாணம், ஜன.21
தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முன்னாள் தலைவருமான சி.சிவமகாராசாவின் நினைவாக உருவச்சிலை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வளாகத்தில் இந்தச்சிலை அமைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சங்கத்தின் தலைவர் ந.உமாகரன் தெரிவித்தார்.

இந்தச் சிலைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தைப்பூசம் அன்று நடைபெறவுள்ளது.

இந்தச் சிலையை நிறுவுவதற்காக சங்கம் 11 பேர் கொண்ட குழுவையும் நியமித்துள்ளது. (ற-ஐ-17)

### மெய்வல்லுநர் போட்டியும் கட்டடத் திறப்பு விழாவும்

யாழ்ப்பாணம், ஜன.21
யாழ்.ஸ்கந்தவரோதயா ஆரம்பப் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியும், புதிய கட்டடத்திறப்பு விழாவும் நாளை மறுதினம் 22 ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு அதிபர் வ.நந்தீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் விருந்தினர்களாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், வலிகாமம் வலயக்கல்வி பணிப்பாளர் செ.சந்திரராஜா, ம.பிரிதிவிராஜா, முன்னாள் உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மகாலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ஐ-ரி5)

### தைப்பூச விசேட பூசை

சாவகச்சேரி,ஜன.21
சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலயத்தில் தைப்பூசத்தை முன்னிட்டு எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு விநாயகப் பெருமானுக்கும் வள்ளி தேவசேனா சமேத முருகப்பெருமானுக்கும் அபிசேகம் நடைபெற்று சண்முகார்ச்சனையும் நடைபெறவுள்ளது. (ற-ஐ-9)

### அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன.21
யாழ். பஸ் நிலைய ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவத் திருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ள இந்தத் திருவிழா, தினமும் காலை 7 மணிக்கு பூசைகளுடன் ஆரம்பித்து, சுவாமி உள் வீதி உலாவலம் வரவுள்ளது. எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக் கிழமை 108 சங்காபிசேக பூசையும், மாலை 4 மணிக்கு வழமை போல் சுவாமி வெளி வீதியுலா வலம்வரும் நிகழ்வும் நடைபெறவுள்ளது என்று ஆலயத்தினர் தெரிவித்துள்ளனர். (ற-ஐ-ரி5)

### மகா கும்பாபிசேகம்

யாழ்ப்பாணம், ஜன. 21
யாழ். வேலணை மத்தியகல்லூரி ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப்பெருமான் ஆலயத்தின் மகா கும்பாபிசேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை வெள்ளிக்கிழமை பூர்வாங்கக் கிரியைகளுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 3 நாள்கள் நடைபெற்று, எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை விநாயகர் வழி பாட்டுடன் ஆரம்பமாகி மு.ப.10.30 மணிக்கு மகாகும்பாபிசேகம் நடை பெறும். (ற-ஐ-ரி5)

## கஞ்சா வைத்திருந்தவருக்கு ரூ.9,000 அபராதம் விதிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.21
கஞ்சா வைத்திருந்தமைக்காக பல மாதங்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இளைஞர் ஒருவருக்கு நீதிமன்று நேற்று முன்தினம் 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

யாழ்.கடற்கரை வீதியைச் சேர்ந்த 19 வயதுடைய நபர், கடந்த செப்ரெம்பர் மாதம் 467 மில்லிகிராம் கஞ்சா போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த போது யாழ்.பொலிஸாரால் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் முற்படுத்தப்பட்டிருந்தார்.

அவரிடமிருந்து கைப்பற்றப் பட்ட கஞ்சா போதைப் பொருளை பகுப்பாய்வுக்காகப் பகுப் பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

பகுப்பாய்வு அறிக்கை கிடைக் கப்பெற்ற பின்னர், அவர் பல மாதங்கள் விளக்கமறியலில் வைக் கப்பட்டிருந்த நிலையில் பிணையில் விடுவிக்கப்பட் டிருந்தார். பின்னர் அவர் மீதான வழக்கின் போது தன் மீதான குற்றத்தை அவர் ஏற்றுக் கொண்டார்.

அதனையடுத்து அவரைக் கடுமையாக எச்சரித்த யாழ்.நீதிவான் சி.சதீஸ்தரன், 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துத் தீர்ப்பளித்தார். (ற-ஐ-4,103)

## ஆதனவரி செலுத்துமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன. 21
நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில், ஆதனங்களுக்குரிய ஆதன வரியை இதுவரை செலுத்தத் தவறியவர்கள் எதிர்வரும் 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகசெலுத்திபிரதேசசபைக்கு ஒத்துழைப்பை வழங்குமாறு பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் வரி செலுத்தத் தவறும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் நல்லூர் பிரதேசசபையின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார். (ற-ஐ-ரி5)

## கைவிடப்பட்ட இரு முதியவர்கள் முதியோர் இல்லத்தில் சேர்ப்பு

யாழ்ப்பாணம், ஜன.21
யாழ்ப்பாணம், வவுனியா வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக உறவினர்களால் சேர்க்கப்பட்டு, பின்னர் கைவிடப்பட்ட இரு வயோதிபர்களை வைத்தியசாலை நிர்வாகங்கள் கைதடி அரசினர் முதியோர் இல்லத்தில் சேர்த்துள்ளன.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்ற மண்டான் கரவெட்டி மேற்கைச் சேர்ந்தகிட்ணபிள்ளை பாலையா (வயது - 62) என்பவரும், வவுனியா அரசினர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்ற யாக்கரு கரவெட்டியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை யோகராஜா (வயது - 60) என்பவருமே இவ்வாறு முதியோர் இல்லத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். குறித்த இரு வயோதிபர்களும் முழங்காலுக்குக் கீழ் காலை இழந்துள்ளனர்.

சுகவீன காரணத்தால் இவர்களை உறவினர்கள் வவுனியா அரசினர் வைத்தியசாலையிலும் மற்றும் யாழ். போதனா வைத்தியசாலையிலும் சேர்த்து விட்டுச் சென்றுள்ளனர்.

தற்போது உறவினர்கள் யாரும் வராமையால் கைவிடப்பட்ட இந்த வயோதிபர்கள் குறித்து முழுமையான தகவல்கள் தெரிந்தவர்கள் அல்லது உறவினர்கள் கைதடி அரசினர் முதியோர் இல்லத்துடன் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு இல்ல அத்தியட்சகர் த.கிருபாகரன் தெரிவித்துள்ளார். (ற-ஐ-17)

## எழுதுமட்டுவாழ் ரயில் நிலையம் இருளில்

### பயணிகள் பெரும் சிரமம்

சாவகச்சேரி,ஜன.21
எழுதுமட்டுவாழ் ரயில் நிலையம் மின்விளக்குகள் இன்றி இருளாகக் காணப்படுவதால் இரவு வேளைகளில் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

கிளாலி, எழுதுமட்டுவாழ் வடக்கு தெற்கு , கரம்பகம் ஒட்டுவெளி, முகமாலை போன்ற கிராமங்களைச் சேர்ந்த மக்கள் எழுதுமட்டுவாழ் ரயில் நிலையத்தில் தமது பயணங்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில் ரயில் நிலையத்தில் மின்விளக்குகள் பழுதடைந்து ஒளிராததால் இரவு ரயில்களில் வரும் பயணிகள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். ரயில் நிலையம் அமைக்கப்பட்ட போது மின் இணைப்பு வழங்கப் படாது பின்னரே இணைப்பு வழங்கப் பட்டிருந்தது.

அதையடுத்து நிலைய அதிகாரி தனதுசெலவில் மின்குமிழ்களை பொருத்தியிருந்தார். தற்போது அவை பழுதடைந்துள்ளன.

புதிய மின்குமிழ்கள் பொருத்த நடவடிக்கை எடுக்குமாறு ரயில்வே அதிகாரிகளை பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-ஐ-9)

## கோப்பாய்- சாவகச்சேரி வீதியில் கொட்டப்படும் திண்மக் கழிவுகள்

### வீதியால் பயணிப்போர் பெரும் அசௌகரியம்

சாவகச்சேரி,ஜன.21
கோப்பாயிலிருந்து சாவகச்சேரிக்கு செல்லும் வீதியில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்துக்குக் கொட்டப்பட்டுள்ள திண்மக் கழிவுகளால் வீதியில் செல்ல முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுகிறது.

தென்மராட்சி - வலிகாமம் கிழக்குப் பகுதிக்கு இந்த வீதி பிரதான வீதியாக திகழவதால் தினமும் நூற்றுக்கணக்கான வாகனங்களில் பொதுமக்கள், அரச பணியாளர்கள், விவசாயிகள், உற்பத்தியாளர்களென பெருமளவானோர் பயணித்து வருகின்றனர்.

கைதடி- கோப்பாய் பாலத்துக்கு அப்பால் கண்டல்காட்டு மயானத்துக்கு முன்பாக இரவு வேளைகளில் வாகனங்களில் கொண்டு வரப்படும் திண்மக் கழிவுகள் கொட்டப்படுவதால், அதிலிருந்து வீசும் துர்நாற்றம் சகிக்கமுடியாத அளவுக்கு உள்ளது.

கோப்பாய் பகுதி மக்களின் பிரதான மயானமான கண்டல்காட்டு மயானத்துக்குச் செல்வோர் துர்நாற்றம் சகிக்க முடியாத நிலையில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

திண்மக்கழிவுகள் கொட்டும் இடத்துக்கு அருகில் கல்லுடைக்கும் நிலையும் மற்றும் படையினரின் முகாம் உள்ள போதிலும் தினமும் கழிவுகள் கொட்டப்பட்டு வருகின்றன. (ற-ஐ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயப் பணிமனைகளுடன் 98 ஆசிரியர் பயிற்சி மையம்

## அமைப்பதற்கு அரசு நடவடிக்கை

கொழும்பு,ஜன.21
ஆசிரியர் பயிற்சியைச் செயற்றிறன் மிக்கதாக மீளவும் ஆரம்பிப்பதற்காக ஒவ்வொரு வலயப் பணிமனைகளுடனும் இணைந்ததாக 98 ஆசிரியப் பயிற்சி மையங்களை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

கடந்த காலத்தில் அரசியல் நியமனங்கள் போன்றே பல தரப்பட்ட காரணிகளால் கல்விச் சீர்கேடுகள் ஏற்படுத்தப்பட்டன. ஒரேயடியாக நூற்றுக்கு நூறு வீதமான இந்தச்சரிவை நிறுத்தி விட இயலாது.

எதிர்காலத்தில் தேசியப் பாடசாலைகளுக்கான அதிபர் நியமனங்களை சரியான முறையொன்றுக்குக் கொண்டு வரவுள்ளோம்.

இந்த ஓராண்டு காலத்துக்குள் கல்வித்துறையில் 825 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தது போன்று இந்த ஆண்டில் மேலும் 4 ஆயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப் படவுள்ளனர்.

கடந்த ஆண்டில் 600 பாடசாலை அதிபர்களுக்கு உள்நாட்டில் பயிற்சி பெறுவதற்கும், 120 அதிபர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சியைப் பெறுவதற்கும் வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அந்தப் பயிற்சிகள் மூலமாக எதிர்காலத்தில் கல்வித்துறையை மேம்படுத்தி விடுவதே எமது எதிர்பார்ப்பாகும்.

மேலும் 250 மில்லியன் ரூபா செலவில் பாடசாலைகளுக்கு பல் சத்திர சிகிச்சை நிலையங்கள் நிறுவப்பட்டு வழங்கப்படவுள்ளன. எதிர்காலத்தில் கல்வி அமைச்சினால் மாகாணங்கள் மட்டத்தில் பாடப் புத்தகங்களுக்கு மேலதிகமான வாசிப்புப் புத்தகங்களும் பாடசாலைகளுக்கு வழங்கப்படவுள்ளன.

வரலாற்றில் என்றுமில்லாதவாறு கல்வித்துறைக்கு இந்த முறை 67 பில்லியன் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது. விஞ்ஞான பீடங்களுக்கான கட்டடங்களை அமைத்து விஞ்ஞானம், கணிதம், தகவல் தொழில்நுட்பம் போன்றே ஆசிரியர்களைப் பெருமளவில் பயிற்றுவிப்பதற்குச் செயற்படவுள்ளோம்- என்றார். (த-ஜ-22)

# சத்தமான பாடல்கள் கேட்ட 51 பேருக்கு எதிராக வழக்கு

கொழும்பு, ஜன. 21
வீதியில் அதிக சத்தமாகப் பாடல்களை ஒலிக்கச் செய்து வாகனம் செலுத்திய 51 பேருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் காலியில் இடம் பெற்றுள்ளது.

காலி - மாத்தறை பிரதான வீதியில் அதிக சத்தத்துடன் பாடல்களை ஒலிபரப்பியவாறு சென்ற வாகனங்களுக்கே அவ்வாறு வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

சத்தமாகப் பாடல்களை ஒலிபரப்பியவாறு சென்ற மேலும் சிலரை எச்சரித்துள்ளதாகவும் ஹபராதுவ பொலிஸார் தெரிவித்தனர்.

மத்திய சுற்றாடல் அதிகார சபை, தென் மாகாண மோட்டர் வாகன திணைக்களம் மற்றும் ஹபராதுவ பொலிஸார் இணைந்து நடத்திய விசேட சோதனையின்போதே இவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-4)




# விமானங்களை முறைகேடாக பயன்படுத்தியவர்கள் சிக்குவர்

கொழும்பு,ஜன.21
கடந்த அரசின் காலத்தில் விமானப் படைக்குச் சொந்தமான விமானங்களை முறைகேடாகப் பயன்படுத்தியமை தொடர்பாக, கிடைக்கப் பெற்றுள்ள தகவலுக்கு அமைய அது தொடர்பான விசாரணைகளுக்காக அரசியல்வாதிகள் சிலரைப் பெரிய ஊழல் மற்றும் நிதி மோசடி ஜனாதிபதி ஆணைக்குழு முன் வரவழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாக ஆணைக் குழுவின் செயலாளர் லசில் டி சில்வா தெரிவித்துள்ளார். கடந்த அரசின் ஆட்சிக் காலத்தில் இலங்கை விமானப் படையின் விமானங்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்திக் கொண்டிருந்தமை தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளை ஆரம்பித்தது.

இதில் குற்றம் சுமத்தப்பட்டிருந்த அரசியல்வாதியொருவர் அந்த விமானப் பயணங்களுக்கு உரிய 5 கோடி ரூபா வரையான பணத்தை அவசர அவசரமாக மீளச் செலுத்தியிருந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனிடையே ஏற்கனவே கடந்த அரசில் நான்கு பேர் வரையான அரசியல்வாதிகளின் விமானப் பயணங்கள் தொடர்பான விவரங்களும் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அரசின் உயரதிகாரியொருவர் தெரிவித்துள்ளார். (த-ஜ-22)

# பொலிஸ் நாள்குறிப்பில் மகிந்தவின் ஒளிப்படம்

## விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜன,21
பொலிஸ் பரிசோதகர்கள் சங்கம் வெளியிட்டுள்ள 2016 ஆம் ஆண்டுக்கான நாள்குறிப்பில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் பின்னணி ஒளிப் படத்துடன் கூடிய பொலிஸ்மா அதிபர் என்.கே. இலங்கக்கோனின் பழைய ஒளிப்படம் பிரசுரிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகப் பொலிஸ் தலைமையகம் விசாரணைகளை ஆரம் பித்துள்ளது.

பொலிஸ் பரிசோதகர்கள் சங்கம் வெளியிட்டுள்ள நாள் குறிப்பை அச்சிடும்போது பொலிஸ் மா அதிபரின் ஒளிப்படத்தைப் பெற்றுக் கொள்வதில் தாமத மேற்பட்ட காரணத்தால் பழைய ஒளிப் படமொன்றே அச்சுக்கு அனுப்பப்பட்டதனால் இந்தச் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த நாள் குறிப்பு அச்சிடப் பட்ட பின்னர் பொலிஸ்மா அதிபரின் ஒளிப்படத்தில், அவர் அமர்ந்துள்ள ஆசனத்துக்குப் பின்புலத்தில் முன்னாள் ஜனாதிபதியின் ஒளிப்படமும் காணப்படுவதால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-சி)

# இடமாற்றத்துக்கு தகுதியுள்ள 3,274 பொலிஸார் கடமையில்

கொழும்பு,ஜன.21
பொலிஸ் திணைக்களத்தில் உள்ளக இடமாற்றங்கள் தொடர்பான தகுதிகளைப் பெற்றுள்ள பல்வேறு தரங்களிலுள்ள ஆண், பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் 3 ஆயிரத்து 274 பேர் இருப்பதாகப் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு தரங்களிலும் பதவி உயர்வுகளைப் பெற்றுள்ளவர்களின் பதவி வெற்றிடங்கள் தொடர்பாகவும், அந்தப் பதவி வெற்றிடங்களுக்கு வரவேண்டியுள்ள தகுதியானவர்களைத் தெரிவு செய்து அந்தப் பதவி நிலைகளில் அமர்த்தி விடுவது தொடர்பாகவும் பொலிஸ் ஆணைக் குழுவின் அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக சட்ட ஒழுங்கு சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளருக்கு பொலிஸ்மா அதிபர் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்த வகையில் 521 பொலிஸ் பரிசோதகர் பதவிகள், 52 பெண் பொலிஸ் பரிசோதகர் பதவிகள், ஆயிரத்து 861 பொலிஸ் சார்ஜன்ட் பதவிகள், 567 பெண் பொலிஸ் சார்ஜன்ட் பதவிகள், 275 பொலிஸ் சாரதி பதவிகள் இருப்பதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். நீண்ட கால சேவைகள் என்ற அடிப்படையின் மீது மேற்குறிப்பிட்ட பதவி வெற்றிடங்களை நிரப்ப அனுமதி கோரப்பட்டுள்ளது. (த-ஜ-22)

# கால்கோல் விழா இன்று

யாழ்ப்பாணம்,ஜன.21
சிறுப்பிட்டி அ.த.க பாடசாலையில் கால்கோல் விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ப.சுதர்சன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஆ.க.சற்குணராஜா கலந்து கொள்வார். (த-ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமார் குணரட்ணத்தை உடனே விடுவிக்கக்கோரி ஆர்ப்பாட்டம்

## தண்ணீர் பிரயோகித்துப் பொலிஸார் கலைப்பு

கொழும்பு, ஜன 21
முன்னிலை சோஸிலக் கட்சியின் அரசியல் குழு உறுப்பினரான குமார் குணரட்ணத்தை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி கொழும்பில் நேற்று முன் தினம் மாபெரும் ஆர்ப்பாட்டமும், பேரணியும் முன்னெடுக்கப்பட்டன.

கொழும்பு டெக்னிக்கல் சந்தியில் ஆரம்பமான ஆர்ப்பாட்டப் பேரணி ஜனாதிபதி செயலகத்தை நோக்கிச் சென்றது.

''ஆர்ப்பாட்டக்காரர்களைத் தடுத்துநிறுத்திய பொலிஸார் கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறி பேச்சுகள் நடத்த ஒழுங்குசெய்து தருவதாகக் கூறினர். என்றாலும், அதற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் இணங்கவில்லை.

குடிவரவு- குடியகல்வுச் சட்டத்தை மீறி குமார் குணரட்ணம் கைது செய்யப் பட்டு 77 நாள்கள் கடந்துள்ளன. கடந்த அரசால் கைது செய்யப்பட்டவர்களின்விவரங்கள் புதிய அரசால் இதுவரை வெளியிடப்படவில்லை. இந்த விடயங்களை அரசு கண்டுகொள்ளவில்லை. இதற்கு ஒரு தீர்வு வேண்டும்'' என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் சுமார் 800இற்கும் அதிகமானோர் கலந்துகொண்டிருந்தனர்.

பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களை ஜனாதிபதியின் செயலகத்திற்குச் செல்லவிடாமல் மறைகம்பங்களை எழுப்பியிருந்தனர். அதனை உடைத்து உள்நுழைய முற்பட்டபோது ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலிஸாரால் தண்ணீர் பிரயோகிக்கப்பட்டது. இதன் காரணமாக ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர். என்றாலும், ஜனாதிபதியிடம் மகஜர் கையளிக்காததன் காரணமாக போராட்டம் தொடரும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

(த-சி)




> ஆர்ப்பாட்டக்காரர்களைத் தடுத்துநிறுத்திய பொலிஸார் கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறி பேச்சுகள் நடத்த ஒழுங்கு செய்து தருவதாகக் கூறினர்.

## கடந்த வருடத்தில் 32 யானைகள் சாவு

அம்பாறை, ஜன.21
அம்பாறை மாவட்டத்தின் காடுகளை அண்டியுள்ள குடியிருப்புக்களில் கடந்த வருடம் ஏற்பட்டுள்ள மோதல்களில் 32 யானைகள் சாவடைந்திருப்பதுடன், காட்டு யானைகளின் தாக்குதல்களால் 9 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அம்பாறை மாவட்டத்தின் வனஜீவிகள் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அம்பாறை, உஹண, தமண, திருக்கோவில், மஹாஓயா, பதியத்தலாவ மற்றும் தெஹிஅத்தகண்டிய ஆகிய பிரதேச செயலாளர்பிரிவுகளின்யானைகள்–மனிதர்கள் இடையேயானமோதல்கள் அதிகளவில் இடம்பெறுகின்றன.

இதனிடையே சம்மாந்துறை பொலிஸ்பிரிவின்நைனாக்காடு வயல் வெளியில் காட்டு யானையொன்றினால் தாக்கப்பட்டு விவசாயியொருவர் உயிரிழந்துள்ளார்.

நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் யானைகள் – மனிதர்கள் மோதல்களைத் தவிர்த்துக் கொள்வது தொடர்பாக மேற்படி பிரதேசங்களில் மின்சார வேலிகளை அமைத்து விடுவதற்கு நிதி ஒதுக்கீடுகள் கிடைத்துள்ள போதிலும், கடந்த தினங்களில் பெய்த – அதிகரித்த மழை காரணமாக அந்தப் பணிகள் பலவும் தாமதமடைந்திருப்பதாகவும் வனஜீவிகள் உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (த-ஐ-22)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
011 4 700 600 011 4 700 677 info@dpmco.com www.dpmco.com/www.dpg.lk

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## ஊடகத் துறையே இனி நீ என்ன செய்யப்போகிறாய்...?

தென்னிலங்கையின், காலி மாவட்டத்தின் எம்பிலிப்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில், அங்கு தகவல் சேகரிக்கச் சென்றிருந்த ஊடகவியலாளர்களின் குறிப்புப் புத்தகங்கள், நீதிமன்றப் பொலிஸ் அதிகாரி ஒருவரால் பலவந்தமாகப் பறிமுதல் செய்யப்பட்ட சம்பவம் இப்போது பெரும் விவகாரமாகி உள்ளது.

குறிப்புப் புத்தகங்களில், பதியப்பட்டிருந்த பக்கங்கள், குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரி ஒருவரால் கிழித்துப் பறிமுதல் செய்யப்பட்டிருந்தன.

அந்த ஒவ்வாத செயல் குறித்து, இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்கள் சங்கம் கடும்தொனியில் கண்டனம் வெளியிட்டுள்ளது.

செய்தியாளர்கள் நியாயபூர்வமான தமது உத்தியோகபூர்வ பணிகளைச் செய்து கொண்டிருந்த வேளை, சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரி அவர்களின் குறிப்புப் புத்தகங்களைப் பலவந்தமாகப் பறித்து எடுத்தமை, எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத அதிகாரத்தனமும் ஆணவப் போக்கும் எனலாம்.

எந்த ஒரு கட்டத்திலும் ஊடகவியலாளர்களை நீதிமன்ற அறையை விட்டு வெளியேறுமாறோ, அன்றி வழக்கு விசாரணை குறித்துக் குறிப்புக்கள் எடுப்பதையோ, புகைப்படம் எடுப்பதையோ நிறுத்துமாறு நீதிபதி உத்தரவிடவில்லை.

ஆனால் பொலிஸ் அதிகாரி ஒருவர், தமது விருப்பு வெறுப்புக்களை மனதில் கொண்டு, பொலிஸ் சேவைக்கே பரந்த அளவில் கறுப்புப்புள்ளி போட்டிருக்கிறார்.

உயர் நீதிமன்றம் மற்றும் மேல் நீதிமன்றங்களில்கூட, வழக்கு விசாரணைகளை குறிப்பு எடுத்து, மக்களுக்குத் தகவல் தெரிவிக்க வசதி செய்யப்பட்டுள்ளது. அது ஜனநாயகத்தின் பண்பியல்புகளில் தவிர்க்கக் கூடாத பெரும் பண்பு.

பிந்திய தகவல்களின் பிரகாரம், எம்பிலிப்பிட்டிய விவகாரத்துக்கு உரிய விடயம் நாடாளுமன்றில் அலசப்படலாம் என்று தெரிய வருகின்றது.

எம்பிலிப்பிட்டிய நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்ற குறிப்பிட்ட சம்பவம், நல்லிணக்க அரசின் ஆட்சியிலும்-

ஊடக சுதந்திரம் கேள்விக்கு உரியதாக மாறும் ஆபத்தைத் தொட்டுக் காட்டுகிறது.

இதற்கு முன்னர், கடந்த 2015 ஜனவரியில், அச்சொட்டாக ஒரு வருட காலத்துக்கு முன்னர், ஊடக சுதந்திரமும், நல்லாட்சியும் சிறைப்படுத்தப்பட்டிருந்த நிலையில்--

ஊடகவியலாளர்களும், ஊடகங்களும் எதிர்கொண்ட உயிர், உடைமை அழிவுகள் மீண்டும் மேலெழுந்து அராஜகச் சன்னதம் ஆடுமா என்ற வகையில் இருள் சூழ்ந்த வானம் மப்புக்கட்டுகிறது.

நல்லாட்சி அரசே! ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்றான ஊடகத் துறையை நீ என்ன செய்யப்போகிறாய்...?

# ஒற்றை ஆட்சிக்குள் தமிழர்களுக்குத் தீர்வா?

**சேரலாதன்**

மக்களின் கருத்துக்களின் அடிப்படையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்படுமென நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ச தெரிவித்திருக்கிறார். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இந்த விடயம் தொடர்பாக ஊடகவியலாளர்களிடம் கருத்தைத் தெரிவிக்கும் போது புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டாலும் ஒற்றை ஆட்சி என்பது மாறவே மாறாது எனத் தெரிவித்திருக்கிறார். ஆக மொத்தமாகப் பார்க்கும்போது ஒற்றை ஆட்சியை அடிப்படையாகக் கொண்டே புதிய அரசமைப்பு உருவாகப் போகின்றது என்பது தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது.

### அதிகாரப் பகிர்வுக்காக அலையும் தமிழர்கள்

நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழர்கள் அதிகாரப் பகிர்வைக் கேட்டு நிற்கின்றனர். தந்தை செல்வா தமது இறுதிக் காலம் வரை ஒற்றை ஆட்சிக்குப் பதிலாக சமஷ்டி முறையிலான ஆட்சி முறை வேண்டுமெனப் போராடினார். ஏனென்றால் ஒற்றை ஆட்சியின் கீழ் தமிழ் மக்களுக்கு எந்த வித அதிகாரங்களும் கிடைக்காது என்பதே அவரது உறுதியான நிலைப்பாடாக இருந்தது.

ஆனால் நீதியமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ச ஒற்றை ஆட்சியின் கீழ் அதிகாரப் பகிர்வுக்கு சாத்தியம் உள்ளதாகத் தெரிவித்துள்ளார். ஆனால் மக்களின் விருப்பம் இல்லாமல் எதுவுமே இடம்பெறாதெனவும் அவர் தெரிவித்துள்ளமை பலத்த சந்தேகங்களைத் தமிழர்கள் மத்தியில் எழுப்பியுள்ளது. ஏன் என்றால் தமிழர்களுக்கு எதுவும் கிடைக்கக்கூடாது என்பதில் தென்பகுதி இனவாதிகள் உறுதியாக இருக்கிறார்கள். பெரும்பான்மையின மக்களின் மனங்களில் குழப்பங்களை ஏற்படுத்தி சமாதான நடவடிக்கைகளைக் குழப்புவதிலும் அவர்கள் முனைப்புடன் செயற்படுகின்றனர். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இனவாதக் கருத்துக் களை மக்கள் மத்தியில் விதைப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றார்.

### 13ஆவது திருத்தங்களுக்கு அப்பால் இல்லை

புதிய அரசமைப்பில் 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் எதுவுமே இருக்கக் கூடாதென அவர் தெரிவித்துள்ளமை அரசின் புதிய அரசமைப்பை அமைப்பதற்கான நடவடிக்கையில் பின்னடைவை ஏற்படுத்தவே செய்யும். மாகாண சபைகளுக்குப் பொலிஸ் அதிகாரம் வழங்கக் கூடாதெனவும் அவர் தெரிவித்துள்ளார். இதே மகிந்த ராஜபக்சதான் இந்தியாவை ஏமாற்றும் பொருட்டு 13⁺ என்ற தமது கண்டு பிடிப்பை அங்கு செல்லும் போதெல்லாம் பேசி உள்ளார். அதாவது 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்துக்கு அப்பாலும் தாம் சென்று தமிழர்களுக்குத் தீர்வை வழங்கப்போவதாக அவர் கூறி வந்தார். இப்போது அவர் தமது சுருதியை மாற்றி 13க்கு அப்பால் செல்ல வேண்டாமென அரசை எச்சரிக்கின்றார். தென்பகுதியில் மகிந்தவுக்கு இன்னமும் ஆதரவு இருந்துவரும் நிலையில் அவரது சொற்களுக்கு அங்கு மதிப்பு இருக்கவே செய்யும். இதனால் அரசும் தமது இஷ்டம்போல எதனையும் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தென்பகுதி இனவாதிகள் நீண்ட கொடிய போர் ஒன்றினால் இந்த நாடு எதிர்கொண்ட அவலத்தை எண்ணிக்கூடப் பார்ப்பதாகத் தெரியவில்லை. இந்தப் போர் காரணமாக தமிழர்கள் பெருமளவில் அழிக்கப்பட்டது ஒருபுறம் இருக்க பெரும்பான்மையின மக்களும்பாதிப்பை எதிர்கொண்டனர். சொத்துக்களுக்கு பெரும் சேதங்கள் ஏற்பட்டன. ஆனால் போர் ஓய்ந்து விட்டது. தமிழர்களுக்கு ஒரு கேடயமாக விளங்கிய புலிகள் அழிக்கப்பட்டு விட்டனர். ஆகவே தமிழர்கள் நாம் கொடுப்பதை ஏற்றுக் கொண்டு இருக்கவேண்டியது தான் என இனவாதிகள் நினைக் கின்றனர். தமிழர்களை ஒரு தோற்ற இனமாகவே அவர்கள் ஏளனமாகப் பார்க்கின்றனர். இந்த நிலையில் தமிழர்கள் அதிகாரப் பகிர்வுக்காகக் காத்திருப்பது இலவு காத்த கிளியின் கதை போலவே இருக்கப் போகின்றது. கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் கூட பிளவுபடாத நாட்டுக்குள் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு வேண்டுமெனக் கூறியுள்ளார். ஆனால் இது தொடர்பான விரிவான மேலதிக விவரங்களை அவர் தெரிவிக்கவில்லை. இதன் மூலமாக கூட்டமைப்பினர் தனிநாட்டுக் கோரிக்கையை இனிமேல் ஆதரிக்கமாட்டார்கள் என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் தமிழ் மக்கள் ஒட்டுமொத் தமாக கூட்டமைப்பின் கருத்துடன் ஒத்து வருவார்களெனக் கூறமுடியாது. மேலும் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தமிழ் மக்கள் பேரவை இந்த விடயத்தில் என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். ஏனென்றால் தமது தீர்வுத் திட்டம் தொடர்பாகப் பேரவை இன்னமும் எதுவும் தெரிவிக்காத நிலையே தொடர்கின்றது. அவர்களின் திட்டங்கள் மூடுமந்திரமாகவே உள்ளதால் எதையுமே தீர்மானிக்க முடியவில்லை.

### ஒற்றை ஆட்சி அதிகாரப் பகிர்வுக்கு உதவுமா?

ஆனால் ஒற்றை ஆட்சியின் கீழ் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு இடம்பெறுமா? என்பது சந்தேகமாகவே உள்ளது. சமஷ்டி ஆட்சி முறைக்கு இடமே இல்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்களின் சுயாட்சி உரிமை என்ற விடயம் அடிபட்டுப் போகும் சாத்தியங்களே அதிகளவில் காணப்படுகின்றது.



அங்கே சுற்றி இங்கே சுற்றி ஈற்றில் ஆரம்பித்த இடத்திலேயே இலங்கை அரசு வந்து நிற்கின்றது. இதனால் தமிழர்களின் அபிலாசைகள் நிறைவேறும் என்பது வெறும் பகற்கனவாகவே முடியப் போகின்றது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.ஐ.முபாறக்

# புதிய அரசமைப்பு உருவாக்கம்; வாய்ப்பைப் பயன்படுத்துவோம்

இலங்கை அரசியலில் இந்த வருடத்துக்கான பிரதான தலைப்பு புதிய அரசமைப்பின் உருவாக்கம் பற்றியதுதான். இந்தத் தலைப்பும் அதனுடன் ஒத்த அரசியல் தீர்வு விவகாரமும்தான் 2016ஆம் ஆண்டின் இலங்கை அரசியல் அரங்கைச் சூடாக்கப் போகின்றன.

**ஜனாதிபதியின் விசேட உரை**

மைத்திரி – ரணில் அரசு உருவாகி, மைத்திரி ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டு ஒரு வருடம் நிறைவடைந்ததை ஒட்டி இந்த மாதம் 9ஆம் திகதி நாடாளுமன்றில் ஜனாதிபதி விசேட உரை ஒன்றை நிகழ்த்தியதைத் தொடர்ந்தும் புதிய அரசியல் அமைப்பை உருவாக்குவதற்காக முழு நாடாளுமன்றையும் அரசியல் நிர்ணய சபையாக மாற்றுவதற்கான பிரேரணையை பிரதமர் நாடாளுமன்றில் சமர்ப்பித்ததைத் தொடர்ந்தும் புதிய அரசமைப்பு தொடர்பான கதையாடல்கள் தொடங்கப்பட்டுள்ளன.

முழு நாடாளுமன்றத்தையும் அரசியல் நிர்ணய சபையாக ம்ாற்றும் யோசனைக்கு ஆதரவளிப்பதற்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஒன்பது நிபந்தனைகளை அரசுக்கு முன்வைத்துள்ளது.

மறுபுறம், ஜே.வி.பி. நாடாளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக மாற்றுவதை எதிர்த்துள்ளது. புதிய அரசமைப்பை உருவாக்கும் செயற்பாடுகளுக்கும் ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. புதிய அரசமைப்பு மூலம் இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண முடியாது என்பது இந்தக் கட்சியின் நிலைப்பாடாகும்.

அதேவேளை, மகிந்த தரப்பினரும் அவர்களின் எதிர்ப்பைப் பதிவு செய்துள்ளனர். அரசமைப்பின் உருவாக்கமும் அதன் மூலம் கொண்டு வரப்படும் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அரசியல் தீர்வும் தமிழீழத்தை உருவாக்கும் நடவடிக்கை என அவர்கள் கூறி வருகின்றனர்.

**சூடாகியது இலங்கையின் அரசியல் அரங்கு**

இவ்வாறு புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் ஆதரவும் எதிர்ப்பும் முன்வைக்கப்பட்டு 2016ஆம் ஆண்டின் இலங்கையின் அரசியல் அரங்கு சூடாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

எல்லா எதிர்ப்புகளையும் தாண்டி இந்த நாட்டு மக்களின் இணக்கப்பாட்டோடு எப்படியாவது புதிய அரசமைப்பைக் கொண்டு வந்துவிட வேண்டும் என்ற முனைப்பில் மைத்திரி – ரணில் அரசு இருப்பதைக் காணலாம்.

எந்தவொரு காரியத்தையும் தன்னிச்சைப்படி – தான்தோன்றித்தனமாகச் செய்யாது – ஜனநாயகத்தை மதித்து –மக்களின் விருப்பு, வெறுப்புகளை மதித்து செயற்படும் இந்த அரசு புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பிலும் அவ்வாறே செயற்படத் தொடங்கியுள்ளதை அவதானிக்கலாம்.

புதிய அரசமைப்பில் எவ்வாறான விடயங்கள் உள்ளடக்கப்பட வேண்டும், எவ்வாறான விடயங்கள் உள்ளடக்கப்படக் கூடாது என்பன போன்ற மக்களின் கருத்துக்களை அறிவதற்காக – அக்கருத்துக்களை புதிய அரசமைப்பில் புகுத்துவதற்காக 20பேர் கொண்ட விசேட குழுவொன்றை இந்த அரசு நியமித்துள்ளது. இந்த மாதம் 18ஆம் திகதி இந்தக் குழு அதன் பணியைத் தொடங்கவுள்ளது. இந்தக் குழு 4 பேர் கொண்ட உப குழுக்களாகப் பிரிந்து நாடு முழுவதும் மக்கள் கருத்துக்களைத் திரட்டவுள்ளது.

> ஓர் இனத்தின் உரிமைகள் – மதச் சுதந்திரம் வழங்கப்படுவதை ஏனைய இனங்கள் அங்கீகரிக்கும் நிலை உருவாக்கப்பட வேண்டும். இனவாதம் என்ற ஒன்று இல்லாதொழிக்கப்பட்டால் மாத்திரமே இவை அனைத்தும் சாத்தியப்படும்.



இந்த வாய்ப்பை இந்த நாட்டு மக்கள் அனைவரும் பயன்படுத்துவதோடு, சிறுபான்மை இன மக்கள் இதை முழுமையாகப் பயன்படுத்த வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

**சிறுபான்மை இன மக்களின் உரிமைகள்**

சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் தொடர்பில் தற்போதைய அரசமைப்பில் உள்ள விடயங்களை விடவும் அதிகமான விடயங்கள் புதிய அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டியது தவிர்க்க முடியாததாகும். அதற்கான யோசனைகளை சிறுபான்மை இன மக்கள் ஒருமித்த குரலில் முன்வைக்கவேண்டும்.

குறிப்பாக அரசியல் தீர்வு, மதச் சுதந்திரம், இன அடையாளங்களைப் பாதுகாக்கும் விடயங்கள், அரச தொழில், கல்வி, இருப்பு, மீள்குடியேற்றம், காணி மீட்பு மற்றும் மொழி உள்ளிட்ட சிறுபான்மை இன மக்களுடன் தொடர்புபட்ட பல பிரச்சினைகளுக்கு இந்தப் புதிய அரசமைப்பில் தீர்வு வழங்கப்படவேண்டும். அந்தத் தீர்வுகள் எவ்வாறு அமைய வேண்டும் என்ற காத்திரமான யோசனைகளை சிறுபான்மை இன மக்கள் இந்தக் குழுவுக்கு வழங்க முன்வரவேண்டும்.

அவை போக, மேலும் பல விடயங்களில் சிறுபான்மை இன மக்கள் கவனம் செலுத்த வேண்டும். அவற்றுள் முக்கியமாக இனவாதத்தைப் பார்க்கலாம்.

சிறுபான்மை இன மக்களுக்கு எவ்வாறான நன்மைகளை வழங்குவதற்கு இந்த அரசு முன்வந்தாலும், அவை முழுமையாக அந்த மக்களைச் சென்றடைவதோடு அவை நிலையானவையாக–அனைத்து இன மக்களும் ஏற்றுக் கொண்டதாக இருக்கவேண்டும். இல்லாத பட்சத்தில் அவை இடை நடுவில் நழுவிச் சென்றுவிடும்.

அந்த நன்மைகள் அவ்வாறு நழுவுவதற்குக் காரணமாக இருப்பது இனவாதம்தான். இவ்வளவு காலமும் சிறுபான்மை இன மக்கள் அதிக துன்பங்களை அனுபவித்து வந்தமைக்கு அடிப்படைக் காரணம் பேரினவாதமே என்றால் அது மிகை அல்ல.

**பேரினவாதத்தினால் அட்டூழியம்**

இந்தப் பேரினவாதம் சில சிங்கள அரசியல்வாதிகளின் மனங்களிலும் அவர்களினால் மூளைச் சலவை செய்யப்பட்ட சிங்களவர்கள் சிலரது மனங்களிலும் குடி கொண்டிருந்ததால்தான் சிறுபான்மை இனங்களுக்கு எதிராக அட்டூழியங்கள் நிகழ்த்தப்பட்டன.

## வைத்தியசாலைப் பணிப்பாளருக்கு எமது பாராட்டுதல்கள்

சில தினங்களுக்கு முன்னர் எனது நண்பர் ஒருவர் சுகவீன முற்றிருந்த தமது மனைவியை யாழ்.போதனா மருத்துவ மனையில் சேர்த்தார்.

தாம் வழக்கமாகத் தனியார் மருத்துவமனைகளையே நாடிச் செல்வதாகவும் இந்த முறை தமது மனைவியின் உடல் நிலையைக் கருத்தில் கொண்டு யாழ்.மருத்துவ மனையில் தமது மனைவியைச் சேர்த்ததாகவும் அவர் தெரிவித்தார். அரச மருத்துவமனை என்பதால் அப்படி இப்படி இருக்குமெனத் தாம் நினைத்ததற்கு மாறாக யாழ். மருத்துவமனையில் தமது மனைவியை மருத்துவர்களும், தாதிமாரும், நல்ல முறையில் கவனித்து வருவதாக அவர் மகிழ்ச்சியும் வெளியிட்டார். இதற்குரிய காரணமும் அவரால் தெரிவிக்கப்பட்டது. தற்போது பதவியில்உள்ள வைத்தியசாலைப் பணிப்பாளரின் சிறந்த வழிகாட்டல் மற்றும் செயற்பாடுகள் காரணமாகவே யாழ்.மருத்துவ மனை தற்போது புதிய பொலிவுடன் திகழ்கின்றது என அவர் கூறுவதை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

யாழ் போதனா மருத்துவமனையை மக்களின் உயிர்களைக் காக்கின்ற ஓர் ஆலயம் என்றும் கூறலாம். இந்த மருத்துவமனை இல்லாவிட்டால் ஏராளமான நோயாளிகள் தமது உயிர்களை இழந்திருப்பார்கள் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதன் சிறப்பான செயற்பாடுகளே மக்களுக்கு உறுதுணையாக உள்ளது. இந்த நிலையில் தற்போதைய வைத்தியசாலைப் பணிப்பாளர் அவர்களின் சிறந்த சேவைகள் தொடர வேண்டும் என்பதே நோயாளர்களின் பிரார்த்தனையாகும்.

பா.சுசீலாதேவி, குருநகர்.

## வீதிப் புனரமைப்பு குறித்து கவனம் எடுப்பார்களா மக்கள் பிரதிநிதிகள்?

எமது கிராம எல்லைக்குட்பட்ட 1.5 கி.மீ தூரம்கொண்ட இத்தியடி கோயிலூடாகச் செல்லும் ஞான சம்பந்தர்–முதலி கோயில் வீதியானது பகுதியளவில் 2013 ஆம் ஆண்டு புனரமைப்புச்செய்யப்பட்டு மிகுதி 700 மீற்றர் தூர வீதி இன்னும் புனரமைப்புச் செய்யப் படாதுள்ளது.

இந்த வீதியானது கடந்த மழை காரணமாக பெரியளவில் சேதமடைந்து மக்களின் போக்குவரத்துக்கு பெரும் சிரமாக இருக்கின்றது.

எமது கிராம எல்லைக்குட்பட்ட மக்கள் அதிகம் பயன்படுத்தும் வீதியாக இது விளங்குவதால் குறித்த 700 மீற்றர் தூரத்தை முன்னுரிமை அடிப்படையில் மிக விரைவாக புனரமைப்புச்செய்து தருமாறு வட்டுக்கோட்டையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்,வடமாகாண சபை உறுப்பினர் மற்றும் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகளைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

வெம்பல்
வட்டுத்தென்மேற்கு

## என்னையா இப்படிப் பண்ணுறீங்களே?

இலங்கை மின்சார சபை ஓய்வூதியக் கொடுப்பனவு அட்டவணை தற்செயலாக எனது கைக்கு கிடைத்தது.(மூலப்பிரதி என்னிடம் உள்ளது) தமிழில் பல பிழைகள் காணப்படுகின்றன. தாயை, தாய்மொழியை இழிவு செய்வது மிகவும் வேதனைக்குரிய செயல். எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளத்தான் வேண்டும். ஏனென்றால் எதிர்க்கட்சித் தலைவர் பதவியும், நிலையியல் குழுத்தலைவர் பதவியும்நல்லாட்சியில் தமிழருக்குக் கிடைத்த வரப்பிரசாதம் அல்லவா?

தா.மகேஸ்வரன், அரசமுறிப்பு, ஓமந்தை.

## பொறுமைக்கும் எல்லையுண்டு

சங்கானை மீன் சந்தை புதிதாக நிர்மாணம் செய்யப்பட்டு அண்மையில் முதலமைச்சர் வருகைதராத நிலையில் திறப்புவிழா இடம் பெற்றதை உதயன் திருமுகம் சுட்டிக்காட்டியிருந்தான்.

இதில் மீன் சந்தையுடன் தொடர்புபட்டவர்களின் பெயர்களை பொறிக்க சபையின் செயலாளர் முன்னிற்கவில்லை.

மீன் சந்தையுடன் தொடர்பு இல்லாத மூவர் தமது பெயர்களை அனுமதியின்றிப் பொறித்துள்ளமை பட்டின அபிவிருத்திச் சபையின் ஏனைய உறுப்பினர்களைப் பாதித்துள்ளது.

இதனை மீனவர்களாகிய நாம் ஏற்கவில்லை. இவ்விடயம் தொடர்பில் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அவர்களுக்கு கடிதம் மூலம் தெரியப் படுத்தியிருந்தோம்.

எனவே சந்தையில் பொறிக்கப்பட்ட மூவரது பெயர் அடங்கிய கல்லை பிரதேச சபை அகற்ற வேண்டும்.

இல்லையேல் சங்கானை வாழ் பொது ஒன்றிய பிரதிநிதிகள் ஆகிய நாம் இதனை அகற்றியே தீருவோம்.


பொறுமைக்கும் எல்லையுண்டு பொறுப்பதே நன்று, கல்லை அகற்றுவதே சிறப்பானது.

நடேசு தயாளன்
சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச பனித்திருவிழா சீனாவில் ஆரம்பமானது

பீஜிங், ஜன.21
சர்வதேச பனிச்சிற்பத் திருவிழா சீனாவின் ஹர்பின் நகரில் இடம்பெற்று வருகிறது. கடந்த ஜனவரி 5 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த விழா எதிர்வரும் பெப்ரவரி மாதம் வரை இடம்பெறவுள்ளது.
32 ஆவது விழா, பனி மகுடத்தில் முத்து எனும் தலைப்புடன் நிகழ்ந்து வருகிறது. சுற்றுலா, பண்பாடு, அழகு, வர்த்தகம் மற்றும் விளையாட்டு நடவடிக்கைகள் என 5 வகையான நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன. 4 கேளிக்கைப் பூங்காக்களில் இந்தக் கேளிக்கை நிகழ்வுகள் இடம்பெற்று வருகின்றன.
ஐஸ் கால்பந்து, ஐஸ் ஹொக்கி, பனிச்சறுக்கு விளையாட்டுகள், ஐஸ் தேவதை சிற்பங்கள், கலாசார சிற்பங்கள், பனி ஓவியங்கள், பனித் திருமண நிகழ்ச்சிகள், பனியில் வர்த்தக பேச்சு. பனி மீன்பிடித்தல், ஐஸ் படகோட்டம், பனிச்சறுக்கு, சர்வதேச பனிச் சிற்பப் போட்டிகள், நீச்சல், பனிக் கலை நிகழ்ச்சி, கண்காட்சி, கையெழுத்துக் காட்சிகள், நடன நிகழ்ச்சிகள் எனச் சகல வெளிப்பாடுகளும் பனிக்கட்டிகளில் உருவங்கள் படைக்கப்பட்டுப் பார்வையாளர்களை பரவசப்படுத்துகிறது. (த-ரி4)





# பாரிஸ் ஹோட்டலில் நேற்று திடீர் தீவிபத்து

பாரிஸ், ஜன.21
பாரிஸ் நகர பிரபல 5 நட்சத்திர ஹோட்டலில் நேற்று திடீர் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. பழைமை வாய்ந்த ஹோட்டலான ரிட்ஸ் ஹோட்டலின் மேல் மாடியில் இந்தத் தீவிபத்து



ஏற்பட்டள்ளது. பாரிஸ் நகரில் இந்தப் புகை தெளிவாகத் தெரிந்தது.
விபத்துக் குறித்த ஆரம்பகட்ட அறிக்கையில் மேல் மாடி முழுவதும் தீக்கிரையானது எனத் தெரிவிக்கப்பட்டது.
பெரிய அளவில் கட்டட மறுசீரமைப்புச் செய்து ஒரு வாரத்தின் பின்னர் இந்தத் தீவிபத்து ஏற்பட்டுள்ளது. ஹோட்டலில் இருந்த மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டனர். தீயை அணைக்க 15 தீயணைப்புச் சேவை வாகனங்கள் பணியில் ஈடுபட்டன.
தீயணைப்புத் துறை ஊடகப்பேச்சாளர் வோன் போட், இந்தத் தீவிபத்தில் யாருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. கூரைப் பகுதியும், ஏழாவது மாடியும் தீக்கிரையாகின. காலை 6 மணியளவில் கட்டடத்தில் தீ பரவ ஆரம்பித்துள்ளது.
இதனைப் புனரமைக்க 200 மில்லியன் யூரோ செலவாகும் என அவர் தெரிவித்தார். இந்த ஹோட்டல் அமைந்துள்ள கட்டடம் 1898 ஆம் ஆண்டு கட்டப்பட்டதாகும். பல பிரபலங்கள் தங்கிச்சென்ற வரலாற்றுக் கட்டடம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (த-ரி4)




இந்தியக் குடியரசு தினம் இம்மாதம் 26 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில்
4 வயதுக்கிடையிலான இராணுவ நாய்கள் அணிவகுப்பில் பங்குபற்றவுள்ளன

# 21 மாதங்களில் 19,0 கொன்று குவித்துள்

## சிறுபான்மையினரை அடிமையாக்குவதும், வ ஈடுபடுவதும் ஒருவகை இன அழிப்பு என ஐ.நா

பக்தாத், ஜன.21
ஐ.எஸ். அமைப்பினர் ஈராக் பகுதியில் 3 ஆயிரத்து 500 பேரை அடிமைகளாக நடத்துகின்றனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.
சிவிலியன்களுக்கு எதிரான துஷ்பிரயோகம் அதிகரித்துள்ளது. போர்க் குற்றச் செயல்களுடன், மனிதத்துக்கு எதிரான செயல்களும் அதிகரித்துள்ளன என்றும், இந்த நிலை இன அழிப்புக்கு வழிவகுப்பதாகவும் அது மேலும் கூறியுள்ளது.
2014 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து இதுவரை குறைந்தது 19 ஆயிரம் பேரைக் கொன்று குவித்துள்ளதாகவும், 3.2 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்தனர் எனவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.
ஐ.எஸ். அமைப்பினரின் அடிமைகளாக யாசிடி இனத்தைச் சேர்ந்த பெண்களும், சிறுவர்களும் இருப்பதுடன், சிறுபான்மை இனத்தவர்களையும் தமது அடிமைகளாக்கியுள்ளதாக ஐ.நா. தெரிவித்துள்ளது.
மேலும் மக்களை தண்டிப்பதற்காகத் துப்பாக்கியால் சுடுதல், தலை வெட்டுதல், உயிருடன் கொளுத்துதல், உயிருடன் புதைத்தல் போன்றவற்றுக்கு அதிர்ச்சியூட்டும் ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றதாகவும், திட்ட மிடப்பட்ட பரந்த அளவிலான வன்முறை இது எனவும் ஐ.நா. குறிப்பிட்டுள்ளது.
இந்த அறிக்கையைச் சுதந்திரமான, நம்பகமான, உண்மையான தரவுகளின் அடிப்படையில், ஐ.நா.வின் அவதானிப்புக் குழுவினர் தயாரித்துள்ளனர்.
அத்துடன் கடந்த வருடம் 800 இலிருந்து 900 சிறுவர்கள் மொசூல் பயிற்சி முகாமில் சேர்க்கப்பட்டுள்ளனர். அதற்கு இணங்காதவர்கள் சாட்டையால் அடித்துச் சித்திரவதை செய்யப்பட்டு, பலாத்காரப்படுத்தப்பட்டுச் சேர்க்கப்பட்டுள்ளனர் என அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
கடந்த ஓகஸ்ட் மாதம் பயிற்சி முகாமில் இருந்து ஓடிய 18 சிறுவர்கள் ஐ.எஸ். அமைப்பினரால் கொலை



> 2014 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து இதுவரை குறைந்தது 19 ஆயிரம் பேரைக் கொன்று குவித் துள்ளதாகவும், 3.2 மில்லியன் மக்கள் இடம் பெயர்ந்தனர் எனவும் ஐ.நா தெரிவித்துள்ளது.

செய்யப்பட்டனர்.
ஐ.நாவின் மனித உரிமைகளின் பிரதான அதிகா
சிட் ரா-அட் அல்- குசேன், அவதானிகள் மூல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





லயில் அதற்கான பயிற்சிகள் இடம்பெற்று வருகின்றன. அவற்றில் 26 வருடங்களின் பின்பு இராணுவ நாய்களின் அணிவகுப்பும் இடம்பெறவுள்ளது. 2 வயதிலிருந்து ுள்ளன என கப்டன் ரிசா ஷர்மா தெரிவித்தார். அவற்றுக்கான உணவுகளை வழங்கிச் சிறந்த முறையில் அவற்றைப் பயிற்றுவிப்பதாகவும் அவர் மேலும் கூறினார். (த-ரி4)

# ,000 பேரை
# ள்ள ஐ.எஸ்.

## வன்முறைச் செயல்களில்
## நா. அறிக்கை தெரிவிப்பு




ந்து
ரைக்
மில்

அதிகாரி
மூலம்

அங்கு வாழும் பொதுமக்கள் எவ்வாறான துன்பங்களுக்கு முகம் கொடுக்கின்றனர் என அறியமுடிகிறது. வன்முறையால் ஏற்பட்ட இறப்புகள் ஒருபுறம் இருக்க, உணவு, நீர், மருத்துவ வசதிகள் இன்றி எண்ணில் அடங்காதோர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறான சம்பவங்களினால் மக்கள் நாட்டைவிட்டு வெளியேறி ஐரோப்பாவுக்கும் இன்னும் பல இடங்களுக்கும் இடம் பெயர்ந்துள்ளனர்-என்றார். ஈராக்கில் உள்ள ஐ.நாவின் சிறப்பு பிரதிநிதி ஜான் குபிஸ், சொல்ல முடியாத அள வுக்கு ஏற்பட்ட துன்பங்களாலும் உயிரிழப்புகளாலும் மக்கள் தம்மைப் பாதுகாத்துக்கொள்ள இடம்பெயர்ந்துள்ளனர் எனத் தெரிவித்தார். (த-ரி4)

# வெற்றிகரமாக ஏவுகணை சோதனை நடத்தியது பாக்.

லாகூர், ஜன.21
பாகிஸ்தான் தரை மற்றும் கடலில் தாக்கக் கூடிய மூலோபாய ஏவுகணையைப் பரிசோதனை செய்தது.
நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சோதனையில் பரிசீலிக்கப் பட்ட ஏவுகணை 350 கிலோ மீற்றர் வரை இலக்கு வைத்து தாக்கக் கூடியது ஆகும். இந்தப் பரிசோதனை வெற்றியளித்தது எனப் பாகிஸ்தான் இராணுவத்தினர் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்தது.
மேலும் மேம்படுத்தப்பட்ட ஊடுருவலோடும், இலக்குத் திறனோடும் இலக்கை மிகத்துல்லியமாக அடையத்தக்க விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளது.
நிலப்பரப்புப் பகுதிகளில் இடம்பெறக் கூடிய சூழ்ச்சி நடவடிக்கைகளை எதிர் கொண்டு தாக்குதலை நடத்தத்தக்க சாதனமாக இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
ஆனால் சோதனை நடத்தப்பட்ட இடம் குறித்த தகவலை வெளியிட



மறுத்துவிட்டனர். குற்றங்களைக் குறைக்கும் நோக்கத்தில் பாகிஸ்தான் முக்கியமான முயற்சியில் ஈடுபட்டுள்ளது என மூலோபாய திட்டப் பிரிவுத் தலைவர் மஜ்கார் ஜாமல் தெரிவித்தார். மேலும் இந்த முயற்சி மூலோபாய ஸ்திரத்தன்மையுடன் எமது பிரதேசத்தில் அமைதிக்கு பங்காற் றும்-என்றார்.

# எண்ணெய் விலை சரிவு

தெஹ்ரான், ஜன.21
மசகு எண்ணெய் விலை சர்வதேச சந்தையில் கடந்த 12 ஆண்டுகளில் இல்லாத வகையில் சரிவைச் சந்தித்துள்ளது.
இந்த நிலையில், ஈரான் மீதான பொருளாதாரத் தடை நீக்கப்பட்டு வருவதையடுத்து, அந்நாடு மசகு எண்ணெய் உற்பத்தியை ஒரு நாளைக்கு 5 லட்சம் பரல்களாக அதிகரிக்க முடிவு செய்துள்ளது.
தேவைக்கு அதிகமாக உற்பத்தி இருப்பதால், மசகு எண்ணெய் விலை மேலும் குறைய அதிக வாய்ப்புகள் இருப்பதாக சர்வதேச எரிசக்தி நிறுவனம் தனது மாதாந்த அறிக்கை யில் தெரிவித்துள்ளது.
தற்போது கச்சா எண்ணெய் சர்வதேச சந்தையில் ஒரு பரலுக்கு 29 டொலருக்கும் குறைவாகவே விற்பனையாகி வருவது குறிப்பிடத்தக்கது. (த-ரி4)

# வினோத வடிவத்தில் தேவாலயம்

தாய்பேய், ஜன.21,
தாய்வானில் வினோதமான வடிவமைப்பில் தேவாலயம் வடிவமைக்கப் பட்டுள்ளது. பெண்களின் சப்பாத்துக் குதியைப் போன்று வடி வமைக் கப்பட்டுள்ளது. நீல நிறக் கண்ணாடியால்வடிவமைக் கப்பட்ட இந்தக் கட்டடம், 55 அடி உயரமும், 36 அடி அகலமும் கொண் டதாகும். கட்டடத்தின் நீளம் 75 - 80 அடிகள் ஆகும். இதைக் கட்டி முடிக்க 2 மாதங்கள் பிடித்ததுடன், 686 ஆயிரம் அமெரிக்க டொலர் செலவிலும் கட்டப்பட்டுள்ளது.
தாய்வானின் உள்ளூர் அரசு அதிகாரிகளால் இந்த அமைப்பு வடிவமை [illegible] கால்கள் துண்டிக்கப்பட்டதால் திருமணமே நிறுத்தப் பட்டது. இதன் பின்னர் ஆலயத்தில் தனது வாழ்நாளைக் கழித்திருந்தார். இந்தச் சம்பவத்தை நினைவு கூரும் வகையில் இந்த கட்டடம் வடிவமைக் கப்பட்டது. இந்த கட்டடம் எதிர்வரும் பெப் ரவரி மாதம் 8 ஆம் திகதி திறக்கப்படவுள்ள நிலையில், மக்கள் இப்போதே பல ஒளிப்படங்களை எடுத்து சமூக வலைத்தயங்களில் பதிவேற்றியுள்ளனர். (த-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.நற்குணலிங்கம்
நெல்லியடி

## குடும்ப வன்முறையால் அதிகம் பாதிக்கப்படுவது

# பெண்களே

குடும்ப வன்முறை என்பது மேலோட்டமாக, நெருக்க முறையான உறவுக்குட்பட்ட ஒருவரினாலோ அல்லது அதற்கும் மேற்பட்டவர்களாளோ நிகழ்த்தப்படுகின்ற துஷ்பிரயோகமான ஒரு நடத்தைப்போக்கு எனலாம். இது உடல் ரீதியான அல்லது உளரீதியான பாதிப்புக்களை ஏற்படுத்துவதாக அமையலாம். சமூக விஞ்ஞானிகளின் அண்மைக்கால ஆய்வுகளின்படி வீட்டினுள் இடம்பெறும் வன்முறை நடவடிக்கைகளில் அதிகமாகப் பெண்களே பாதிக்கப்படுகின்றனர். நான்கு பெண்களுக்கு ஒருவர் தமது வாழ்நாளில் குடும்ப வன்முறைக்கு ஆளாகுகிறார்கள். குடும்ப வன்முறையால் பாதிக்கப்படுகின்றவர்களில் 85வீதமானவர்கள் பெண்கள்.

ஒரு குடும்பச் சூழலில் ஒருவர் வேறொருவர் மீது அதிகாரத்தையும், கட்டுப்பாட்டையும் விதிக்கும்போது குடும்ப வன்முறை தோன்றுகின்றது. கணவனால் மனைவி அடித்துத் துன்புறுத்தப்படுதல், குடும்பத் தலைவிக்குப் பணம் கொடுக்காமை, வீட்டில் உரக்கக் கத்தி அவமரியாதை செய்தல், பய முறுத்தல், அச்சுறுத்தல், வார்த்தைத் துஷ்பிரயோகம் என்பன குடும்ப வன்முறையாகும்.

பெண்களுக்கு எதிரான வன்முறை ஒரு பாரதூரமான சுகாதாரப் பிரச்சினையாகவும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. வன்முறைக்கு உள்ளாக்கப்பட்ட பெண்கள் தமது சாதாரண வாழ்க்கையை முற்றாக வாழமுடியாது அல்லல்படுகின்றனர். பெரும்பாலும் பல்வேறுபட்ட பௌதிக, உளவியல் தொடர்பான பல நோய்களுக்குள்ளாகின்றனர். குடும்ப வன்முறைக்கு உள்ளான பெண்கள் நாளாந்த நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமை, மயக்கம், தலைச்சுற்று, ஞாபகமறதி, உடலுறவில் விருப்பமின்மை, சௌகரியமின்மை, மன அழுத்தம், சாப்பாட்டு ஒழுங்கின்மை, சோர்வு, அங்கலாய்ப்புத் தன்மை, பயம், கொலை, தற்கொலை எண்ணம், கோபம், தாழ்வுணர்ச்சி போன்ற பாதக்மான விளைவுகளை எதிர்நோக்குகின்றனர். ஒட்டுமொத்தமாக முழுக்குடும்பமுமே பாதிப்புக்கு உள்ளாகின்றது. எனவே குடும்ப வன்முறைகளிலிருந்து விலகி குடும்பம் மகிழ்வான வாழ்வை நோக்கிச் செல்ல வேண்டும்.

கணவன் மனைவி ஒருவர்மீது மற்றவர் நம்பிக்கை கொள்ளும் போதுதான் அந்தக் குடும்பம் சீராக இயங்கமுடியும்.

> "ஒரு குடும்பச் சூழலில் ஒருவர் வேறொருவர் மீது அதிகாரத்தையும், கட்டுப்பாட்டையும் விதிக்கும் போது குடும்ப வன்முறை தோன்றுகின்றது."



சந்தேகமே நம்பிக்கையை இழப்பதற்கான முக்கிய காரணம். எனவே முதலில் ஒருவர் தன்னைத்தானே நம்ப வேண்டும். நம்பிக்கைதான் வாழ்க்கையின் அத்திபாரம் என்பதைப் புரிந்து வாழ வேண்டும். அன்பாகப் பேசுங்கள். அன்பான பேச்சு வாழ்க்கையை ஆழப்படுத்தும். எதற்கெடுத்தாலும் கோபப்படாதீர்கள். பொறுமையை வளர்த்துக்கொள்ளுங்கள். மரியாதையாகப் பழக வேண்டும். மரியாதை பரிமாறப்படாத இடங்களில் உறவுகள் நிலைப்பதில்லை.

ஒரு புன்னகை, ஓர் அரவணைப்பு, ஒரு பாராட்டு, இவற்றைக் குடும்பத்தில் கவனத்துடன் செய்ய ஆரம்பிப்பதில் இருக்கிறது குடும்ப வன்முறையற்ற வாழ்க்கையின் வெற்றி. உங்களுக்குப் பிடிக்கும் விடயம் சிலவேளைகளில் கணவனுக்கோ மனைவிக்கோ பிடிக்க வேண்டும் என முரண்படாதீர்கள். இருவருக்குமான தனிப்பட்ட விடயங்கள் இருப்பதில் தவறில்லை. இது குடும்ப உறவைப் பாதிக்காதிருப்பதில் மட்டுமே கவனமாக இருங்கள்.

எப்போதும் மனதில் நன்மையாக யோசித்தால் எந்தவொரு செயலையும் துணிந்து செய்யலாம். மனதை எப்போதும் சுறுசுறுப்பாக வைத்திருப்பதுடன் அடைய வேண்டிய வாழ்வின் இலக்கை மனதில் கொண்டு சுறுசுறுப்பாகச் செயற்பட வேண்டும்.

இது உங்களை வாழ்வில் நல்ல நிலைக்குக் கொண்டு செல்லும். எனவே மனதை ஒழுங்காக, அங்கலாய்க்காது வைத்திருக்க வேண்டும். ஐயம் ஏற்படும் வகையில் நடத்தைக் கோலங்கள் அமையக்கூடாது. எந்த விடயமானாலும் பல தடவைகள் தீர யோசித்த பின்னரே இறங்க வேண்டும். இல்லையேல் குடும்ப உறவில் விரிசல் ஏற்படலாம். கணவன் மனைவி இருவரும் ஒன்றாக இருந்து மனம் விட்டுப் பேசி முடிவுக்கு வருவது சிறந்ததும் குடும்ப வன்முறைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளவும் வழி சமைக்கும்.

விட்டுக்கொடுத்தல், சகிப்புத்தன்மை, புரிந்துணர்வு, எந்தநேரத்தில் எதைக் கதைக்க வேண்டும் என்ற பக்குவம், பெற்றோர் முதியோர் சொல் கேட்டல், மன்னிக்கும் பண்பு இவற்றை வாழ்வில் கைக்கொள்வதன் மூலம் குடும்ப வன்முறைகளிலிருந்து விலகிச் செல்லலாம். இவ்வாறு விலகிச் செல்வதன் மூலம் மகிழ்வான, ஆரோக்கியமான, நேர்த்தியான, பிணக்கற்ற, வன்முறையற்ற நீண்ட வாழ்வை வாழலாம்.




## சிங்கம்

(உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் சிங்க ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிப் பார்த்தோம். சிங்கராசி குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.)

**விவசாயிகள்**

பயிர் விளைச்சல் சிறப்பாக இருந்தாலும், புழு பூச்சிகளின் தொல்லைகளால் வீண் விரயங்கள் அதிகரிக்கும். எதிர்பாராது ஏற்படக்கூடிய செலவுகளை சமாளிக்க கடன்வாங்க வேண்டிவரும். ஓகஸ்ட் மாதம் முதல் உங்களுக்குள் இருந்த, பிரச்சினைகள் யாவும் விலகி இலாபம் பெருகும். உழைப்பிற்கேற்ற அனுகூலமான பயன்களை அடையமுடியும். நிம்மதியும், மகிழ்ச்சியும் உண்டாகும்.

**பெண்கள்**

உடல் ஆரோக்கியம் ஓரளவுக்குச் சிறப்பாக இருக்கும். சுபகாரியங்களில் ஆண்டின் முற்பாதியில் தடைகள் நிலவினாலும், ஓகஸ்ட் மாதம் முதல் கைகூடி மகிழ்ச்சியளிக்கும். பணவரவுகள் சிறப்பாக அமைந்து குடும்பத் தேவைகளும் பூர்த்தியாகும். நெருங்கியவர்களால் சாதகமான பயன்கள் உண்டாகும். பொன் பொருள் சேரும். சேமிக்க முடியும்.

**மாணவ- மாணவியர்**

கல்வியில் சற்று அதிக ஈடுபாடுடன் செயற்பட்டால் அதிக மதிப்பெண்களைப் பெறமுடியும். உடன் பழகும் மாணவர்களிடம் சற்று கவனமுடன் நடந்துகொள்வது நல்லது. அரசு வழியில் எதிர்பாராத உதவிகள் கிடைக்கும். தேவையற்ற அலைச்சல்கள், உடல் நலத்தில் சோர்வு ஏற்படும். எதிலும் சற்று கவனம் தேவை.

**மாதப்பலன் (ஜனவரி)**

ஜென்ம ராசிக்கு முயற்சி ஸ்தானமான 3-ஆம் வீட்டில் செவ்வாய் சஞ்சரிப்பதும், மாத பிற்பாதியில் ருண ரோக ஸ்தானமான 6-ஆம் வீட்டில் சூரியன் சஞ்சாரம் செய்யவிருப்பதும் சாதகமான அமைப்பாகும். உங்களுக்குள்ள மறைமுக எதிர்ப்புகளனைத்தும் விலகி முன்னேற்றமான நிலை ஏற்படும். பணம் பலவழிகளில் தேடிவரும். தடைப்பட்ட சுபகாரியங்கள் கைகூடி மகிழ்ச்சியளிக்கும். கொடுக்கல்- வாங்கலில் இருந்த பிரச்சினைகள் விலகி முன்னேற்றமான நிலையும் இலாபங்களும் அமையும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகிட்டும். விநாயகரை வழிபடவும்.

**பெப்ரவரி**

முயற்சி ஸ்தானமான 3-ஆம் வீட்டில் செவ்வாய் சஞ்சரிப்பதும், பஞ்சம ஸ்தானத்தில் புதன், மாத முற்பாதியில் ருண ரோக ஸ்தானமான 6-ஆம் வீட்டில் சூரியன் சஞ்சாரம் செய்வதும் சாதகமான அமைப்பாகும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றி, பொன், பொருள் சேரும். சிலருக்கு அசையா சொத்துக்கள் வாங்கும் யோகம் உண்டாகும். நெருங்கியவர்களிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் உண்டாகக்கூடும் என்பதால் பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிக்கவும். உடல் ஆரோக்கியத்தில் உஷ்ண சம்பந்தப்பட்ட பாதிப்புகள் ஏற்படும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த உயர்வுகளை அடைவார்கள்.

**மார்ச்**

மாதக்கோளான சூரியன் சாதகமின்றி சஞ்சரிப்பதும், சுக ஸ்தானமான 4இல் சனி, செவ்வாய் சஞ்சாரம் செய்வதும் சாதகமற்ற அமைப்பாகும். குடும்பத்தில் சிறுசிறு கருத்து வேறுபாடுகள் உண்டாகும். முன்கோபத்தை குறைத்துக்கொண்டு பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது உத்தமம். தொழில், வியாபாரம் செய்பவர்களும் கூட்டாளிகளை அனுசரித்து நடப்பது மூலம் வீண் பிரச்சினைகளைக் குறைத்துக்கொள்ள முடியும். சுபகாரிய முயற்சிகளில் தடைகளுக்குப்பின் வெற்றி கிட்டும். தேவையற்ற பயணங்களால் அலைச்சல், பதற்றம் அதிகரிக்கும். சிவ வழிபாடு, முருக வழிபாடு செய்வது உத்தமம்.

**ஏப்ரல்**

மாதக்கோளான சூரியன் 8இல் சாதகமின்றி சஞ்சரிப்பதும், சுக ஸ்தானமான 4இல் சனி, செவ்வாய் சஞ்சாரம் செய்வதும் உற்றார்- உறவினர்களிடையே கருத்து வேறுபாடுகளை ஏற்படுத்தும். எடுக்கும் காரியங்களில் எதிர்நீச்சல் போட்டே முன்னேற வேண்டியிருக்கும். பணவரவுகள் ஓரளவுக்குச் சிறப்பாக இருந்தாலும் வரவுக்கு மீறிய செலவுகளும் உண்டாகும். கொடுக்கல்- வாங்கலில் கவனமுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் ஓரளவுக்கு இலாபம் உண்டாகும். தேவையற்ற பயணங்களைத் தவிர்த்துவிடுவது நல்லது.

**மே**

சுக ஸ்தானமான 4இல் சனி, செவ்வாய் சஞ்சாரம் செய்வதும் அனுகூலமற்ற அமைப்பு என்றாலும் மாதக்கோளான சூரியன் சாதகமாக சஞ்சரிப்பதால் எதையும் சமாளிக்கும் ஆற்றல் உண்டாகும். எதிர்பாராத பயணங்களால் அலைச்சல், பதற்றம், ஆரோக்கிய பாதிப்புகள் உண்டாகும். தொழில், வியாபாரம் செய்பவர்களுக்கு இலாபங்கள் அமையும். சுபகாரிய முயற்சிகளில் தடைகள் நிலவும். எதிலும் சிந்தித்துச் செயற்பட்டால் நற்பயன் அமையும். உத்தியோகத்திலிருப்பவர்கள் தேவையற்ற பிரச்சினைகளை சந்திக்க வேண்டியிருக்கும். கொடுக்கல்- வாங்கலில் பெரிய தொகைகளை ஈடுபடுத்தாதிருப்பது நல்லது. முருகனை வழிபடுவது உத்தமம்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவப்புலவர்
அம்பலவாணர் இராஜரட்ணம்

# அறிவியலும் அழிவியலும்

*நேற்றைய தொடர்ச்சி....*

நாடுகளுக்கிடையே போர் நடைபெறும் பொழுது கத்தி, வாள், ஈட்டி, அம்பு போன்றவைகளே பயன்படுத்தப்பட்டன. ஆகையால் ஒரு வீரனைக் கொல்வதற்கு நேருக்குநேர் நின்று சண்டை பிடிக்க வேண்டியிருந்தது. இதனால் அழிவுகள் பெரும்பாலும் குறைவாகவே இருந்தன. ஒரு கட்டடத்தை அழிப்பதென்றால் அதன் முன்னே நின்று பிக்கான், கோடரி, அலவாங்கு போன்றவைகளைப் பாவித்தே அழிக்க முடிந்தது.

அறிவியல் வளர வளர இந்தக் காலத்தில் பெரும்மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. விஞ்ஞானிகளின் இடைவிடா முயற்சியால் பல விதமான கண்டுபிடிப்புக்கள் கண்டுபிடிக்கப்பட்டு அதைத் தொடர்ந்து பல பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்ட வண்ணமே இருக்கின்றன. இவைகளில் பல செயற்பாடுகள் மனிதனுக்கு 100 வீதம் நன்மையளிப்பது போலத் தோன்றினாலும் அவைகளின் நன்மை தீமைகளை ஆராயும் பொழுது ஐம்பது வீதமே நன்மையளிக்கின்றன. ஐம்பது வீதம் தீமையளிக்கின்றன.

உதாரணமாகச் சொல்லப்போனால் நீராவியந்திரம் கண்டுபிடிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து டீசல் இயந்திரங்கள் என்பவைகளின் கண்டுபிடிப்புக்களால் பயணங்கள் இலகுவாகவும் துரிதமாகவும் இருந்தாலும் அவைகளால் வெளிவிடப்படும் தீமையான வாயுக்கள் மனிதனுக்கு எவ்வளவோ தீங்கை விளைவிக்கக் கூடியன. உயிர்கொல்லி நோய்களும் சுவாச நோய்களும்ஏற்பட்டுமனித ஆயுளைக்குறைக்கின்றன. விவசாயத்துக்கு எந்திரங்கள் பயன்படுத்தப்பட்டு கூடிய விரைவில் அறுவடை செய்யப்பட்டாலும் ஒரு சிலருக்கே கூடிய நன்மை தருகிறது. பல மனிதர்களின் வேலைவாய்ப் புக்கள் குறைவடைந்து அன்றாட சீவியத்துக்கே கஷ்ரப்பட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

அடுத்ததாக மின்சாரத்தை நோக்குவோமானால் ஓர் ஆழியை அழுத்தியவுடன் 15 நிமிடங்களில் 5 கிலோ அரிசி இயந்திரத்தின் மூலம் மாவாக்கப்படுகிறது. இதன் மூலம் நேரவிரயம் குறைக்கப்படுவது உண்மைதான் என்றாலும் இந்தச் செயல் இயந்திரத்துக்கு உடற்பயிற்சியே தவிர மனிதனுக்கல்ல. மனிதனைச் சோம்பேறி ஆக்கி நோயாளியாக்குகின்றது. மின்சாரத்தில்ஒருசிறுதவறுநடந்தால்கூட எத்தனையோ தொடர்மாடிக் கட்டடங்கள் ஒரு சில மணி நேரங்களில் முற்றாக அழிந்துவிடுகின்றன. பல உயிர்களையும் பலி எடுக்கிறது.

தொலைபேசி வசதியால் ஒரு சில விநாடிகளுக்குள் பல மைல்கள் தொலைவிலுள்ள இடங்களுக்கு செய்திகள் அனுப்பப்படுகின்றன. இது மனிதனுக்கு நன்மையளிக்கக் கூடிய விடயமாக இருந்தபோதிலும் இவற்றின் மூலமே பெரும் கொலைகள், களவுகள், வங்கிக் கொள்ளைகள், வாகனக் கொள்ளைகள் நடைபெறுவது கவலையளிக்கக் கூடியதாக இருக்கிறது. தற்பொழுது அதிகமான பாவனையிலுள்ள கையடக்கத் தொலைபேசிமூலம் வெளியிடப்படும் அலைகளால் தலை சம்பந்தமான நோய்கள் ஏற்படுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.

வானொலியை ஓரளவு நன்மை பயக்கக்கூடிய பொருளாக கருதும் அதேவேளை தொலைக்காட்சி, கணினி போன்றவைகள் பல நன்மைகளை அளித்தாலும் அவ்வளவுக்கவ்வளவு தீமைகளையும் அளிக்கின்றன. தொலைக்காட்சியில்தினம்தோறும் காட்டப்படும் சினிமாப்படங்கள், தொடர் நாடகங்களால் குடும்பத்தில் உள்ள அனேகம்பேரின் வேலைகள், கல்வி நிலைகள் பாதிக்கப்படுகின்றன. கணினி, கணினி விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்களில் பலர் தங்கள் உணவைப் பற்றி அக்கறைகாட்டமாட்டார்கள். நேரவிரயத்தைப் பற்றிக் கவலைப் படமாட்டார்கள். மாணவர்களது கல்வி நிலையும் பாதிப்படைகிறது. சினிமா, தொலைக்காட்சி நாடகங்கள்மனிதசமுதாயத்தின் கலாசாரத்தையும், கற்பையும் அடியோடு அழித்து விடுவது மாத்திரமல்ல மனிதன் கெட்டுப்போவதற்கும் ஆதாரமாக இருக்கின்றன. உதாரணமாக அந்தக் காட்சிகளில் வஞ்சகம், சூது, பழிவாங்கல், கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற காட்சிகள் யாவும் ஏதோவொரு வகையில் இடம்பெறும். இதைத் தினம் தோறும் பார்க்கும் மனிதர்களில் இவ்வெண்ணங்களே அடிக்கடி தோன்றும். ஏனெனில் கண்ணால் பார்ப்பதும் காதால் கேட்பதும் எமது மூளையில் நன்கு பதியப்படுகின்றன. அதுவும் தினந்தோறும் பார்த்தால், கேட்டால் என்ன நடக்கும் அதிகமாகப் பதியப்படுமல்லவா? இந்த எண்ணங்களால்தான் நாடுகளில் தினந்தோறும் குற்றச் செயல்கள் நடைபெற்ற வண்ணமிருக்கின்றன. தினசரிப் பத்திரிகைகளைப் பார்ப்போமானால் இவைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

வெடிமருந்தைக் கண்டுபிடித்த மனிதன் படிப்படியாக ஆராய்ச்சிகள் செய்து பீரங்கிக் குண்டுகள் அணுகுண்டுகள் என்பவற்றைக் கண்டுபிடித்தான். இதனால் உலகின் பல்வேறு நாடுகளுக்கிடையில் ஏற்படும் போர்களினால் பல கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ள எதிரிகளின் வாகனங்களையோ கப்பல்களையோ விமானங்களையோ கட்டடங்களையோ சில விநாடிகளில் அழித்துவிட முடியக் கூடியதாக இருக்கிறது. இதை நன்மையான கண்டுபிடிப்பு என்று கூறலாமா? ஒரு காரியத்தைச் சாதிக்க முன்னைவிட பல நூறாயிரம் மடங்கு அழிவை விலை கொடுக்க வேண்டியிருக்கின்றது.

இந்தக் கால மனிதன் பண ஆசையால் மற்ற மனிதர்களுக்கு என்ன தீங்கு நடந்தாலும் பரவாயில்லை தனக்குப் பணம் வந்தால் போதும் என்ற மனப்பாங்கில் இரசாயன உரங்கள் பாவித்து அதிக விளைச்சல்களைத் தரும் உணவுப் பயிர்களை வளர்த்து அதிக பயன்களைப்பெற்று அதிக பணத்தைச் சம்பாதிக்கின்றான். இவைகள் மனித உடலுக்கு தீங்கை விளைவித்து அவனது ஆயுளைக் குறைக்கின்றன. வாழைக்குலையில் வாழைப் பொத்தியை அகற்றிவிட்டு அந்தத் தண்டில் யூரியா போன்ற இரசாயனக் கலவைகளை பொலித்தீன் பைகளில் போட்டுக் கட்டி விடுவார்கள். 3,4 மாதங்களின் பின் அந்தக்குலை வழமைக்கு மாறாக பெரிய குலையாக பெரிய பழங்களுடன் காட்சியளிக்கும். நல்லவிலை போகும். ஆனால் அதைச் சாப்பிடுபவர்கள் பணத்தைக் கொடுத்து நோயை விலைக்கு வாங்கியவர்களாகக் கருதப்படுவார்கள். இதே பாணியில் பழங்கள் அநேக நாள்கள் பழுதடையாமலிருக்க ஊசி மூலம் இரசாயன மருந்துகளைச் செலுத்துகிறார்கள். அல்லது கல்சியம் காபைட் என்னும் இரசாயன மருந்தை பழங்கள் மேல் வீசுகிறார்கள். அப்பிள் போன்ற பழங்களுக்கு மெழுகு பூசுகிறார்கள். மீன், இறைச்சி வகைகள் பழுதடையாமல் இருக்க போமலின் என்னும் மருந்தை ஊசி மூலம் உட்செலுத்தி விடுவார்கள். இந்த மருந்து இறந்தஉடலைபலநாள்களுக்குப் பழுதாகாமல் வைக்க அடிக்கப்படும் நஞ்சு மருந்தாகும். முற்றாத காய்களுக்கு கல்சியம் காபைட் அடித்து கனிய வைக்கிறார்கள். இவை இலகுவில் கிடைப்பது மாத்திரமல்ல செலவும் குறைவானதே.

இந்தக் காலத்தில் நீரிழிவு நோய் எட்டு மனிதருள் ஒருவருக்கு என்ற வீதத்தில் ஏற்படுவதை ஆராய்ச்சிகள் கூறுகின்றன. சிறு நீரகக் கோளாறு பலரைப் பாதிக்கின்றது. வயிற்றுப் புண் பலரிடம் காணப்படுகிறது. இளவயதில் இரத்தக் கொதிப்பு, மாரடைப்பு, புற்றுநோய், சுவாசக் கோளாறுகள், பார்வைக் கோளாறுகள் இப்படிப் பல நோய்களால் மனிதர்கள் தினம் தினம் வருந்துகிறார்கள். வைத்திய சாலைகள் பெருக்கிக்கொண்டே போகின்றன. அதேவேளைமயானபூமிகளும்பெருகிக்கொண்டே போகின்றன.


இவைகள் யாவற்றையும் சீர்தூக்கி பார்க்கும்போது அறிவியலால் அழிவியலும் ஏற்படுகின்றது. அதாவது ஐம்பது வீதம் நன்மையும் ஐம்பது வீதம் தீமையும் ஏற்படுகின்றது. ஒன்றில் இருந்து ஒன்றைக் கழித்துப் பார்த்தால் கிடைப்பது சூனியமே. அந்தக்கால மனிதன் அறிவியல் குன்றி – நீடிய காலம் வாழ்ந்தான் இந்தக் கால மனிதன் அறிவியல் கூடி குறுகிய காலத்துக்குள் அழிந்தொழிகின்றான்!

"கணினி, கணினி விளையாட்டுக்களில் ஈடுபடுபவர்களில் பலர் தங்கள் உணவைப் பற்றி அக்கறை காட்டமாட்டார்கள். நேரவிரயத்தைப் பற்றிக் கவலைப் படமாட்டார்கள். மாணவர்களது கல்வி நிலையும் பாதிப்படைகிறது. சினிமா, தொலைக்காட்சி நாடகங்கள் மனித சமுதாயத்தின் கலாசாரத்தையும், கற்பையும் அடியோடு அழித்து விடுவது மாத்திரமல்ல மனிதன் கெட்டுப் போவதற்கும் ஆதாரமாக இருக்கின்றன. உதாரணமாக அந்தக் காட்சிகளில் வஞ்சகம், சூது, பழி வாங்கல், கொலை, கொள்ளை, கற்பழிப்பு போன்ற காட்சிகள் யாவும் ஏதோவொரு வகையில் இடம் வெறும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வர்ணம் தீட்டலாம் வாங்க!



## தாமரை

காலையில் மலரும் தாமரை!
குளத்தில் இருக்கும் தாமரை!
அருகில் அழைக்கும் நம்மை
அழகாய் இருக்கும் தாமரை!

கல்விக் கரசி கலைவாணி!
கனிவாய் இருப்பது வெண் தாமரை
செல்வம் கொடுக்கும் லட்சுமி!
சிறப்பாய் அமர்வது செந்தாமரை!

வீசும்தென்றல் காற்று
வருமே அதனைப் பார்த்து
தேசிய மலர்தான் தாமரை!
துதிசெய் மனமே நீயதை!



## வரலாற்றில் இன்றைய தினம்

1677 – முதலாவது மருத்துவப் பிரசுரம் (சின்னமுத்து தொடர்பான கையேடு) அமெரிக்க பொஸ்ரனில் வெளியீடு.
1789 – டபிள்யூ.எச்.பிறவுணினால் அமெரிக்காவில் முதலாவது நாவல் வெளியீடு (பவர் ஒப் சிம்பதி)
1793 – போலந்தைப் பிரிக்கும் பிரிவினை ஒப்பந்தத்தில் புருஸ்சியாவும் ராஷ்யாவும் கைச்சாத்து.
1813 – ஹவாயில் அன்னாசிப்பழம் அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.
1827 – 'பிறீடம் ஜேர்னல்' என்ற கறுப்பினத்தவரது முதலாவது பத்திரிகை பிரசுரம்
1910 – பிரித்தானிய – ரஷ்யப் படைகள் பேர்சியாவுள் பிரவேசம்
1921 – இத்தாலிய கம்யூனிஸ்ட் கட்சி லிவர்னோவில் தொடங்கப்பட்டது.
1941 – முதலாவது யூத எதிர் நடவடிக்கை பல்கேரியாவில்
1941 – கடல் நீரிலிருந்து வர்த்தக ரீதியில் மக்னீசியம் மூலகம் பிரித்தெடுப்பு.
1941 – பிரித்தானிய கம்யூனிஸ்ட் பத்திரிகை 'டெயிலி வேக்கர்' தடைசெய்யப்பட்டது.
1965 – ஈரானிய பிரதமர் ஹசன் அலி மன்சூர் 17 வயதுடைய பதாயன் இஸ்லாம் உறுப்பினரான மொகமட் பக்காரியால் படுகாலை செய்யப்பட்டார்.
1970 – பான் ஆம் 747 விமானம் நியூயோர்க் – லண்டன் இடையே கன்னிப் பறப்பு.
1972 – இந்தியாவின் திரிபுரா முழு அளவிலான மாநிலமானது.
1976 – சுப்பர்சோனிக் கொன்கோர்ட் விமானத்தில் வர்த்தக ரீதியிலான முதலாவது பறப்பு. பிரிட்டிஷ் பிரான்ஸ் நாடுகளால் மேற் கொள்ளப்பட்டது.
1988 – 30ஆயிரம் அமெரிக்க – வியட்நாம் குழந்தைகளைக் குடியேற்ற அமெரிக்க சம்மதம்.
1998 – பாப்பரசர் இரண்டாம் ஜோன் போல் கியூபா சென்றார்.
1999 – 4.300 கிலோகிராம் கொக்கெயின் போதைப் பொருளுடன் கப்பல் ஒன்றை அமெரிக்க கரையோரப் பாதுகாப்பு அணியினர் இடைமறிததனர். வரலாற்றிலேயே பெரிய போதைப்பொருள் கடத்தல் இதுவாகும்.
1994 – றம்பாவ குண்டுவடிப்பு சம்பவம் கொல்லப்பட்டவர்களுக்கு ஒரு லட்சம் ரூபா நட்ட ஈடு.
1995 – பாப்பரசர் கொழும்பிலிருந்து மாலை புறப்பட்டார்.
2008 – யாழ். பல்கலைக்கழக வளாகத்துக்குள் சுடப்பட்டு இளைஞன் ஒருவர் சாவு.
2008 – மட்டக்களப்பு உள்ளூராட்சித் தேர்தலுக்கு இடைக்காலத் தடை விதிக்க தமிழ் தேசியக் கூட்டமைப்பு சமர்ப்பித்த மனு உயர் நீதி மன்றால் நிராகரிப்பு.
2008 – இன்னும் இரண்டு வாரங்களில் மடுவைக் கைப்பற்ற இராணுவம் கங்கணம். எனஇக்பால் அதாஸ் சண்டே ரைம்ஸில் கட்டுரை.
2013 – நாட்டின் கல்வித்துறை சிரியா போன்றது. சுகாதாரத்துறையோ லிபியா போன்றது என ரணில் விக்கிரமசிங்கா தெரிவிப்பு.

## பிடிவாதமும் பெரும் நட்டமும்

இராசப்பன் ஒரு மர வியாபாரி. அவனுக்குக் காட்டிலிருந்து மரங்களை ஏற்றிக் கொண்டு வரும் ஒப்பந்தகாரர் காளியப்பன் நெருங்கிய நண்பன். நெடுநாளைய நண்பன்.

காளியப்பன், காட்டிலிருந்து ஆற்றுவெள்ளம் மூலமாக அனுப்பப்படும் மரங்களைத் தண்ணீரில் இருந்து கரைக்கு இழுக்கவும், கரையிலிருந்து வண்டிகளில் மரத்தை ஏற்றி வைக்கவும் யானைகளைப் பயன்படுத்தி வந்தான்.

இராசப்பனுக்கு ஒரே மகள். மகளுக்குத் திருமண ஏற்பாடு செய்தான். மணநாளன்று ஊர்வலத்தில் யானையை வந்தால் நன்றாக இருக்கும் என ஆசைப்பட்டான் இராசப்பன்.

தன் நண்பன் காளியப்பனைச் சந்தித்துத் தன் ஆசையை வெளியிட்டான் இராசப்பன். "உனக்கில்லாத யானையா?" என்று உடனே யானைப்பாகனோடு ஒரு யானையை அலங்கரித்து அனுப்பி வைத்தான் காளியப் பன்.

ஊர்வலத்தில் கலந்து கொண்ட யானை திடீரென்று மயக்கத்தோடு கீழே சாய்ந்தது. சிறிது நேரத்தில் இறந்தும் விட்டது. திருமணத்துக்கு வந்திருந்த காளியப்பனிடம் தன் வருத்தத்தைத் தெரிவித்தான் இராசப்பன். இறந்த யானைக்குப் பதிலாகப் பணத்தையோ வேறு யானையையோ வாங்கித் தருவதாகக் கூறினார் இராசப்பன்.

காளியப்பன் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டான். "நான் கொடுத்து யானையே எனக்குவேண்டும். அல்லது உன் சொத்து முழுவதும் எனக்கு எழுதித்தரவேண்டும்" என்று சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சதி செய்தான் காளியப் பன்.

வழக்கு நீதிமன்றத்துக்குச் சென்றது. நீதிபதி விசாரித்தார். காளியப்பனுக்கு எவ்வளவோ சமாதானம் சொன்னார், நீதிபதி. காளியப்பன் கேட்க மறுத்துவிட்டான். "எனக்கு என் யானைதான் வேண்டும்" எனப் பிடிவாதமாகப் பேசினான்.

"அடுத்த வாரம் இதே கிழமையில் இதே நேரத்தில் மன்றுக்கு நீங்கள் இருவரும் வரவேண்டும்" அப்போது தீர்ப்பு வழங்குகிறேன்" என்றார் நீதிபதி. இருவரும் சென்றனர்.

நீதிபதி சொன்ன குறிப்பிட்ட நாள் வந்தது. நீதி மன் றத் துக்கு காளியப்பன் வந்தான். இராசப்பன் வரவில்லை. நீதிபதி கோபத்துடன் காளியப் பனைப் பார்த்து "நீங்கள் சென்று இராசப்பனை அழைத்து வாருங்கள்" எனக் கூறி அனுப்பினார்.

இராசப்பனின் கடைக்குச் சென்றான் காளியப்பன். இராசப்பன் அங்கு இல்லை. வீட்டில் இருப்பதாகக் கூறினார்கள். வீட்டுக்குச் சென்று விசாரித்தபோது அறைக்குள் இருப்பதாகக் கூறினார்கள்.

அறை வாசலில் நின்று 'இராசப்பா' 'இராசப்பா' என்று அழைத்தான் காளியப்பன். பதில் இல்லை. லேசாகத் திறந்திருந்த கதவைத் தள்ளினான். சடார் படார் எனச் சத்தம் வந்தது. உள்ளே இருந்த இராசப்பன் குய்யோ முறையோ என வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டான். "எனது முன்னோர்கள் வைத்திருந்த பானைகளை அவர்கள் நினைவாக வைத்திருந்தேன். அதை உடைத்து விட்டீர்களே!" என்று அழுதான்.

"பானைகள்தானே உடைந்து விட்டன? புதுப்பானைகளை வாங்கித் தந்து விடுகிறேன்" என்றான் காளியப்பன்.

"எனக்குப் புதுப் பானைகள் வேண்டாம். பழைய பானைகள்தான் வேண்டும்" என்றான் இராசப்பன்.

இருவரும் நீதிமன்றம் சென்றார்கள்.



நீதிபதியிடம் இராசப்பன் முறையிட்டான். "ஐயா என் முன்னோர்கள் நினைவாக வைத்திருந்த பழைய பானைகளை உடைத்துவிட்டான். எனக்கு இவன் உடைத்த பானைகளையே திரும்பத் தரச் சொல்லுங்கள்" எனக் கூறினான்.

"உடைந்துவிட்ட பானைகளை எப்படி ஐயா திரும்பத் தர முடியும்" என்றான் காளியப்பன்.

"இறந்துவிட்ட யானையை மட்டும் அவர் எப்படித் தர முடியும்?' என்றார் நீதிபதி.

காளியப்பன் பதிலே பேச முடியவில்லை.

"உமது யானைக்கு அவரது பானைக்கும் சரியாகப் போய்விட்டது. நீங்கள் இருவரும் போகலாம்" என்று தீர்ப்பளித்தார் நீதிபதி.

தனது பேராசையால் ஏற்பட்ட பெரும் நஷ்டத்தை எண்ணி வருந்தியவாறு சென்றான் காளியப்பன். நீதிபதியின் சமயோசித யோசனையை எண்ணி வியந்த இராசப்பன் அவரை மனமாரப் பாராட்டினான். குதர்க்கமான போக்கு எந்தவிதப் பயனையும் தராது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய் விலை குறைவடையுமா?

ஈரான் தனது அணுசக்திச் செயற்பாடுகளை மட்டுப்படுத்தியுள்ளது என்பதை சர்வதேச அணுசக்திக் கண்காணிப்பு அமைப்பு உறுதிசெய்ததையடுத்து ஈரான் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளை நீக்குவதாக அமெரிக்காவும் ஐரோப்பிய ஒன்றியமும் அறிவித்துள்ளன. தடைநீக்கம் காரணமாக, ஈரானின் மசகு எண்ணெய் உற்பத்தி நாளொன்றுக்கு 5 லட்சம் பீப்பாய்களாக அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே ஈரானிடம் விற்பனைக்குத் தயாரான நிலையில் கணிசமான அளவு மசகு எண்ணெய் இருப்பில் இருப்பதாகக் கூறப்படுகிறது. தடைநீக்கத்தையடுத்து ஈரான் மசகு எண்ணெய் உற்பத்தியை அதிகரிப்பதாலும் விற்பனைக்குத் தயாரான நிலையில் இருப்பில் உள்ள மசகு எண்ணெயை விற்பனைசெய்ய இருப்பதாலும் நீண்ட காலத்துக்குப் பின்னர் உலக சந்தையில் மசகு எண்ணெய் விலையில் பெரிய வீழ்ச்சி ஏற்படுவதற்கான சாத்தியம் இருந்துவருகிறது. ஆகவே ஈரானிடமிருந்து சலுகையடிப்படையில் மசகு எண்ணெயை இறக்குமதி செய்ய இலங்கை நடவடிக்கை எடுக்கவேண்டும். கடந்த தடவை போலன்றி எண்ணெய் விலைக்குறைப்பால் ஏற்படக்கூடிய பலாபயன்கள் மக்களை நேரடியாகச் சென்றடையக்கூடியதான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.


பொருளாதாரத் தடை நீக்கப்பட்டதால் மசகு எண்ணெய் விற்பனை உள்ளிட்ட சர்வதேச வர்த்தகத்தில் மீண்டும் செயற்படுவதற்கான வாய்ப்பு ஈரானுக்கு ஏற்பட்டுள்ளது. ஈரானின் மசகு எண்ணெய் விற்பனை மூலம் பெறப்பட்ட கோடிக் கணக்கான டொலர் பணம் பொருளாதாரத் தடை காரணமாக சர்வதேச வங்கிகளில் முடக்கி வைக்கப்பட்டுள்ளது. தற்போது ஈரான் அவற்றை பயன்படுத்திக்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, தொடர்ச்சியாக நடைபெற்ற பேச்சுகளில் ஏற்பட்ட இணக்கம் காரணமாக பொருளாதாரத் தடை நீக்கப்பட்டமை ஈரானின் ஜனாதிபதி ஹஸன் ரௌஹானிக்கு கிடைத்த பெரும் வெற்றி என்றே கூறவேண்டும். ஈரான் ஜனாதிபதி ஈரானிய நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில், ஈரானுக்கும் உலக நாடுகளுக்கும் இடையிலான உறவில் புதிய அத்தியாயம் திறக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார். 1979இல் மன்னர் ஷாவின் ஆட்சி கவிழ்க்கப்பட்ட பின்னர் ஈரானுக்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையில் இடம்பெற்றுவந்த பனிப்போர், பொருளாதாரத் தடை நீக்கம் காரணமாக தற்பொழுது முடிவுக்கு வந்துள்ளது.

ஈரான் உலகிலேயே நான்காவது பெரிய எண்ணெய் இருப்புக் கொண்ட நாடாகும். இலங்கையும் ஈரானும் நீண்டகாலமாக கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்டு வருகின்றன. இலங்கை கடன் அடிப்படையிலும் ஈரானிடமிருந்து எண்ணெயை இறக்குமதி செய்துள்ளது. ஆகவே, தடை நீக்கம் காரணமாக ஈரானிலிருந்து சலுகைகளின் அடிப்படையில் இலங்கை எண்ணெயை இறக்குமதி செய்வதற்கான வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஈரானிலிருந்து தாரையும் சலுகை அடிப்படையில் இலங்கை இறக்குமதி செய்யமுடியும். எண்ணெய் உற்பத்தி நாடுகள் தற்போது கேள்வியை விட 20முதல் 25 லட்சம் பீப்பாய்களை நாளொன்றுக்கு உற்பத்தி செய்கின்றன.




அதேசமயம், அமெரிக்காவின் எறிகணை நிறுவனம் அதிகளவில் எண்ணெயை சந்தைக்கு விட்டுள்ளது. ஆகவே, எண்ணெய் விலை குறையும்போது இலங்கை அரசு எண்ணெய் விலையை குறைப்பதன் மூலம் நாட்டு மக்களின் பொருளாதாரச் சுமையை ஓரளவு குறைக்க முடியும்.

கடந்த ஆட்சிக்காலத்தில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் எண்ணெய்க்கு இலங்கையில் அதிக இலாபம் வைக்கப்பட்டு கூடுதல் விலை நிர்ணயிக்கப்பட்டது. ஜே.வி.பி. இது குறித்து அடிக்கடி கடந்த ஆட்சியாளர்கள் மீது கண்டனம் தெரிவித்துவந்தமை நினைவில் இருக்கலாம். ஆகவே, முன்னைய ஆட்சியாளர்களைப்போன்று அல்லாமல் உலக சந்தையில் பீப்பாய் எண்ணெயின் விலை 28 டொலர்களாக வீழ்ச்சிக் கண்டிருப்பதால் அதற்கேற்ப இலங்கையில் எண்ணெயின் விலை கணிசமான அளவு குறைக்கப்படவேண்டும்.



# பணம் வாழ்க்கைக்கு அவசியம்

(தொடர்ச்சி)

பயனற்றது. தேவையில்லாதது என்று கழிக்கப்பட்ட பொருளை எடுத்து அதிலே சிந்தனையைத் தீட்டிச் செயல் வடிவம் அமைத்து வெற்றி பெற முடியும். எங்கும் காணப்பட்ட காளானைப் பற்றிக் கவனத்தைச் செலுத்தாமல் இருந்தாலும், அமெரிக்கர்கள் அதனை ஆராய்ந்ததன் பயன் காளானைக் கொண்டு கடு நோய்க்கு மருந்தாக்க முடியும் என்று கண்டுபிடித்தார்கள்.

ஆசையின் சக்தி தற்காலிகமானது; தொல்லைகளைத் தாங்கிக் கொள்ளும் வல்லமை அதற்கில்லை. தியாகம் புரியும் தன்மையில்லாதது. ஆனால் பற்று அப்படியல்ல; பற்றுத் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளும். தியாகம் புரியும். செல்வத்தில் வெறும் ஆசை மட்டும் கொள்ளாமல் பற்றும் கொள்ள வேண்டும்.

அப்பொழுதுதான் அச்செல்வத்தை அடைவதற்கு என்னென்ன தொல்லைகள் ஏற்படுகின்றனவோ, அவைகளைத் தாங்கிக் கொள்ளக்கூடிய சக்தி எம்மிடம் ஊற்றெடுத்துப் பெருக்கும். ஓயா உழைப்பையே தியாகம் புரியக்கூடிய நிலைமை ஏற்பட்டாலும் பற்றைவிட்டு விடக்கூடாது.

பற்று என்பது வெறும் உணர்ச்சி மட்டுமல்ல. அது மூளையுடன் நரம்புகளும் கூடிப்பிறக்கும் ஒரு வகைச் செயலுணர்ச்சி. இந்தப்பற்று என்பது தன்னில் தானே உண்டாக்கும் ஆசைவேட்கையை வளர்த்துக்கொண்டு முன்பு கூறப்பட்ட விடயங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டு வந்தால் பற்றுத்தானாகவே அழுத்தமாகி விடும்.

சிந்தனையில் ஒன்றன்பின் ஒன்றாக உந்தி எழும் உணர்ச்சிகளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து எல்லா உணர்ச்சிகளுமே ஒன்றுக்கு ஒன்று இணைக்கப்படும் பொழுது பற்று அதிலிருந்துதான் உருவாகிறது. பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி அடுப்பின் மேல் வைத்துக் கொதிக்க வைத்ததும் தண்ணீர் சூடேறி அதிலிருந்து சுருண்டு செல்லும் புகை போன்ற வெண்மையாகச் செல்லும் பொருளைக் கண்டு அதைச் சோதனை செய்து பார்த்த பின்பு நீராவி என்று கண்டார் ஸ்டிவென்சன்.

ஆசையை வளர்த்துக் கொண்ட பிறகு பற்று ஏற்பட்டு எம்மை ஒரு பணக்காரனாக்கும் வழிகளுக்கு இழுத்துச் செல்கிறது. எம்மை ஒரு போதும் கைவிடுவதில்லை. நாம் செல்வந்தனாகும் வரையிலும் பற்று எம்மை விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டு செயலாற்றல் கொண்டவராக மாற்றிச் செல்வந்தராக்கி விடும். பற்று என்பது சிந்தனை நாடிகளுக்கு ஜீவனையும், வல்லமையையும், செயலாற்றும் திறனையும் வழங்கக்கூடிய நித்திய அமுதம். பற்று செல்வந்தனாக்கும்.

எல்லா முயற்சிகளுக்கும் காரணமாகும். ஓர் ஆரம்ப முனை பற்றுதான். எல்லாப் புதுமைகளுக்கும் ரகசியங்களுக்கும் அடிப்படை உணர்ச்சி; இது அறிவிலிருந்து உண்டாக்கும் எண்ண அலைகளுக்கு வல்லமை அளிக்கக் கூடிய மூல சக்தி.

சகிப்புத்தன்மைதான் பணக்காரராக முயன்று கொண்டிருக்கும் எமக்கு மிகவும் அவசியம். பத்து மாதம் வரை சகிப்புத்தன்மையுடன் பொறுமையாக இருந்தால் தான் தாயானவள் பிள்ளைக்கனியமுதைப் பெற்று மகிழ முடியும். கொக்கு கூட மீன் உண்ண காத்துக்கொண்டிருக்கும். எண்ணத்தையும் பலமுறை விதைக்க வேண்டும். ஒரே ஓர் எண்ணம் எழுந்து அதிர்ச்சியடையும் பொழுது அது பலவிதமான மாற்ற எண்ணங்களையும் தானாகவே எழுப்பி இழுத்துக் கொள்ளும்.

மனிதன் மன்னனாக, மகானாக, மாமேதையாக மாறுவதற்கு அவனது மனோ ஆசையும் அவன் அன்றாடம் எண்ணி சிந்தித்துப் பழகி எடுத்துக் கொள்ளும் முயற்சிகளும் தான் காரணம் என்கிறார்-தாமஸ்கிட். வாழ்க்கையில் பணத்தைப் பெறுவதற்கு எம்மிடம் திறமை உள்ளது. அதனை வளர்த்துக்கொண்டு, ஓயாத உழைப்பும் சேர்ந்தால் வெற்றி நிச்சயம்.

எமக்கு அவசியமாகத் தேவைப்படுவது ஒருமுகக் குறிக்கோள்: எம்முடைய நாட்டமெல்லாம் விரும்பும் பொருள் மீது இருக்க வேண்டும். மனமெல்லாம், நினைவெல்லாம் விரும்பும் பணத்தின் மீதே மயங்கி அதனையே எண்ணிக் கொண்டிருக்க வேண்டும். ஆசையின் வேகத்தால் சிந்திக்கும் நரம்புகள் உந்தும். மூளையைக் கிளறும். இந்தப் போராட்டம் ஓயாது. காரணம் உள்ளத்தில் ஆசை தணிவதில்லை.

(தொடரும்....)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆர்யாவுக்கு கைகொடுக்கும் ஹீரோ

கடந்த ஆண்டு ஆர்யா நடிப்பில் புறம்போக்கு, வாசுவும் சரவணனும் ஒன்னா படிச்சவங்க, யட்சன், இஞ்சி இடுப்பழகி என 4 படங்கள் ரிலீஸ் ஆனது. 4 படமும் தோல்வியாக அமைந்தது. "கடந்த ஆண்டு தோல்விப் படங்களாக அமைந்திருந்தாலும் இந்த ஆண்டு வெற்றிப் படங்கள் தருவேன்" என்கிறார் ஆர்யா. ஹிட் தந்தால் தான் ஹீரோ மவுசும் உயரும். இது ஆர்யாவிடம் மைனஸாக இருப்பதால் அவரை அணுக தயாரிப்பாளர்கள் தயக்கம் காட்டுகின்றனர். தற்போது நடித்து வரும் "பெங்களூரு நாட்கள்" படம் மட்டுமே ஆர்யாவுக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை. வரிசை யாக அவருக்கு தோல்விப் படங்களே வந்த போதும் அவருக்கு நட்பு வட்டாரம் பெரியது.

ஜீவா நடித்த "சீவா மனசுல சக்தி" படத்தில் ஆர்யா நடித்தார். விசுவாசமும், நண்பர் என்ற முறையிலும் ஆர்யாவுக்கு கைகொடுக்க முன்வந்திருக்கிறார் ஜீவா. தனது பட நிறுவனம் சார்பில் ஆர்யாவைக் ஹீரோவாக வைத்து புதிய படம் தயாரிக்கிறார்.



மஞ்சப்பை இயக்குநர் ராகவன் இயக்குகிறார். இன்னும் பெயரிடப்படாத இந்தப்படம் "போண்மை" படம் போல இருக்கும் என்கிறது பட வட்டாரம். இந்த 2 படத்தில் வெற்றிக் கனியைப் பறித்தால் தான் ஆர்யாவின் எதிர்காலம் ஜொலிஜொலிப்புடன் பிரகாசிக்கும் என்றும் தெரிவிக்கின்றனர்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** உடல்நலனில் கவனம் செலுத்து வீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய உத்தி மூலம் வருமானம் உயரும். பெண்கள், வீட்டுச் செலவுக்காகக் கடன் வாங்குவர். மாணவர்கள் அக்கறையுடன் படிப்பர்.

**இடபம்:** வாழ்க்கைத் தரம் உயரும். தொழிலில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். உறவினர் வருகையால், குடும்ப மகிழ்ச்சி கூடும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**மிதுனம்:** உங்களின் செயலைப் பிறர் குறை சொல்வர். தொழில், வியாபாரத்தில் நிர்வாகச் செலவு அதிகரிக்கும். உடல் நலனுக்காக மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம்.

**கடகம்:** நற்செயலில் ஈடுபட்டு பாராட்டு பெறுவீர்கள். தொழில், வியாபார விடயமாக வெளியூர் செல்ல நேரிடும். இலாபம் உயரும். உறவினரால் உதவி கிடைக்கும். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

**சிங்கம்:** எதிரியின் முயற்சி பலம் இழந்து போகும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறக்கும். தொழில், வியாபாரத்தில் இலாபம் திருப்திகர மாகும். கடனில் ஒரு பகுதியைச் செலுத்து வீர்கள்.

**கன்னி:** பெரிய மனிதர்களின் அறிமுகம் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் புதிய வாய்ப்பு மூலம் வருமானம் அதிகரிக்கும். உற வினரால் உதவியுண்டு. பிள்ளைகளுக்காக தாராளமாகப் பணம் செலவழிப்பீர்கள்.

**துலாம்:** கௌரவம் மிக்க மனிதராகத் திகழ் வீர்கள். தொழிலில் இருந்த சிரமமான சூழ்நிலை விலகும். இலாபம் சீராகும். பூர்விகச் சொத்து மூலம் வருமானம் கிடைக்கும். உடல்நலனில் அக்கறை உண்டாகும்.

**விருச்சிகம்:** உறவினர்களின் ஆதரவு பல மாக கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் மூல தனத்தை அதிகப்படுத்துவீர்கள். நிலுவைப் பணம் எளிதில் கிடைக்கும் பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.

**தனுசு:** மனதில் புத்துணர்வு மேலோங்கும். பெற்றோர் உடல்நலனில் கவனம் தேவை. தொழில், வியாபாரத்தில் தாராள வளர்ச்சி உருவாகும். வருமானம் உயரும். குடும்பத்தின ரின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** தன்மானத்துக்குச் சோதனை வரலாம். நேர்மை பின்பற்றுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். இலாபம் சுமார். பிள்ளைகளின் செயற்பாடு ஆறுதல் அளிக்கும்.

**கும்பம்:** அன்றாடப் பணிகளில் குளறுபடி நேரலாம். தொழில், வியாபாரத்தில் வருமானம் சுமாராக இருக்கும். மாமன், மைத்துனரால் உதவி கிடைக்கும். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றுவது நல்லது.

**மீனம்:** நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். வீடு, வாகன வகை யில் செலவு ஏற்படும். மாணவர்கள் ஆர்வமுடன் படிப்பர்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | 3 | 2 | 1 | | | |
| | 1 | 8 | 6 | | | | | |
| | 6 | | | | | | 1 | 7 |
| | | | | 8 | | 3 | | |
| 4 | | | 1 | | 7 | | | 5 |
| | | 5 | | 9 | | | | |
| 6 | 2 | | | | | | 3 | |
| | | | | | 2 | 8 | 6 | |
| | | | 5 | 1 | 6 | | 9 | |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 4 | 5 | 9 | 7 | 6 | 1 | 3 |
| 5 | 1 | 9 | 3 | 6 | 8 | 4 | 7 | 2 |
| 3 | 7 | 6 | 2 | 1 | 4 | 5 | 9 | 8 |
| 4 | 8 | 7 | 9 | 5 | 1 | 3 | 2 | 6 |
| 1 | 6 | 3 | 4 | 7 | 2 | 8 | 5 | 9 |
| 2 | 9 | 5 | 8 | 3 | 6 | 1 | 4 | 7 |
| 7 | 4 | 2 | 6 | 8 | 5 | 9 | 3 | 1 |
| 6 | 3 | 1 | 7 | 4 | 9 | 2 | 8 | 5 |
| 9 | 5 | 8 | 1 | 2 | 3 | 7 | 6 | 4 |

சுடோக்குஒருஎண்விளையாட்டு.தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்கு படுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரை களையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவேநிரப்பப்பட்டிருக்கும்.தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றி கரமாகப் பாவனைக்கு விட்டது... 2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

**I'm Waiting 4 BigDay** @smg_s

சுதந்திரம் வேண்டும் என்றவர்கள் தான் கூட்டுக்குடும்பத்தை உடைத்த முதல் துரோகிகள்...! அப்போதே உடைந்து போனது அனைத்தும்...!

விக்டர் Talks and 2 others follow

**✎ரைட்டர் ஓராங்குடான்** @tamizhank

ஆண் தன்னுடைய உருவ அமைப்பையோ அல்லது குணங்களையோ ஒரு பெண் ஏற்க வைக்க முயற்சிக்கலாம். ஆனால் திணிக்க கூடாது. வேறு ஒரு பெண்ணை நாட வேண்டும்.



**பேஸ் புக்கில் பிடித்தவை...**

சந்தோசம் இருக்கும் இடத்தில் வாழ நினைப்பதை விட, நீ இருக்கும் இடத்தில் சந்தோசத்தை உண்டாக்கு உன் வாழ்க்கையில் நிறைவு இருக்கும்.



கட்டு அவுத்து விடுங்கடா

இனிமேல் திருடமாட்டேன்



# இறந்தவன் சொர்க்கத்துக்கு

படித்ததில் பிடித்தது



இறந்த ஒருவன் சொர்க்கத்துக்குச் செல்கிறான். அங்கே ஒரு பெரிய சுவரில் நிறைய கடிகாரங்கள் தொங்க விடப்பட்டிருப்பதைப் பார்க்கிறான்.

**இறந்தவன்:** ஏன் இந்தக் கடிகாரங்கள் இங்கே தொங்க விடப்பட்டுள்ளன ?

**எமன்:** இவை பொய்க் கடிகாரம். பூமியில் உள்ள ஒவ்வொருவருக்கும் இங்கே கடிகாரம் உண்டு, அவர்கள் கூறும் பொய்களுக்கேற்ப இவை சுழலும்.

**இறந்தவன்:** (ஒரு கடிகாரத்தை காட்டி) இது சுழலவில்லையே, இது யாருடைய கடிகாரம்??

**எமன்:** இது அன்னை தெரசாவின் கடிகாரம். அவர்கள் பொய் பேசாத காரணத்தால் கடிகாரம் எங்களால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

**இறந்தவன்:** அப்படியானால் எங்கள் நாட்டு அரசியல்வாதிகளின் கடிகாரங்கள் எங்கே தொங்கவிடப்பட்டுள்ளன?

**எமன்:** ஓ அவையா..!! அவை எங்கள் அலுவலகங்களில் மின்விசிறிகளுக்குப் பதிலாக தொங்கவிடப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## இது புதுசு பவர் பாங்

பவர் பாங் எனப்படும் இந்த சாதனம் நடமாடும் மின் சார்ஜ் கருவியாகும். போன், ஐ பாட் மற்றும் இதர பொருள்களைச் சார்ஜ் செய்யக் கூடியது. வீட்டில் இதனை சார்ஜ் செய்து விட்டு, எடுத்துச் செல்லலாம். செல்லும் இடம் எல்லாம் எமது கருவிகளை சார்ஜ் செய்து கொள்ளலாம். இந்த நடமாடும் சாஜர் கருவியில் சிலவற்றில் ரோர்ச் லைட்டும் காணப்படுகிறது. இது 1500 - 2000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.



## பருப்பு முறுக்கு

**தேவையானவை:**
பச்சரிசி மா - 4 கப்
வேகவைத்த சிறு பருப்பு - 1 கப்
ஓமம் - 1 கரண்டி
எண்ணெய் - 2 கரண்டி
எள்ளு - 2 கரண்டி
பெருங்காயம் - ஒரு சிட்டிகை
பச்சை மிளகாய் பேஸ்ட் - 1 கரண்டி
எண்ணெய், உப்பு - தேவைக்கு,
மஞ்சள் - ஒரு சிட்டிகை.

**செய்முறை:**
சிறு பருப்பை ஒன்றரை கப் தண்ணீரில் போட்டு வேகவைத்து, மசித்துக் கொள்ளவும். அத்துடன் மஞ்சள், பெருங்காயம், பச்சை மிளகாய் விழுது, தேவையான உப்பு, அரிசி மா, எள்ளு, ஓமம் 2 மேசை கரண்டி எண்ணெயை சேர்த்து தேவையான தண்ணீருடன் கலந்து முறுக்கு மா பதமாக பிசைந்து, முறுக்கு அச்சில் போட்டு மிதமான காய்ந்த எண்ணெயில் முறுக்காக பிழிந்து எடுக்கவும். சிறிது ஆறிய பின் டப்பாவில் போட்டு வைக்கவும். மிகவும் கரகரப்பாக இருக்கும்.

சமைப்போம் வாங்க

## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்



| | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி | கிளிநொச்சி | கொடிகாமம் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 80 | 60 | 80 | 60 | 60 | 40 | 40 |
| கத்தரி | 140 | 140 | 140 | 180 | 120 | 120 | 100 | 90-100 |
| கரட் | 200 | 180 | 180–350 | 180 | 200–360 | 320 | 180 | 120 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 60 | 30 | 40 |
| பயிற்றை | 220 | 140 | 150 | 160 | 200 | 140 | 100 | 120 |
| பாகல் | 150 | 160 | 150 | 140 | 140 | 160 | 150 | 150 |
| கருணைக்கிழங்கு | 80 | 80 | 80 | 80 | 70 | 120 | 60 | 70-80 |
| பெ.வெங்காயம் | 90 | 80 | 80 | 80 | 90 | 90 | 70 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 120 | 120 | 120 | 140 | 110 | 80–100 |
| பூசணி | 60 | 50 | 60 | 70 | 60 | 60 | 40 | 50 |
| தக்காளி | 80 | 80 | 70 | 70 | 70 | 60 | 55 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 60 | 60 | 30 | 50 | 40 |
| கீரை | 40 | 30 | 40 | 20 | 25 | 40 | 35 | 35 |
| பொன்னாங்கானி | 40 | 40 | 30 | 40 | 30 | 30 | 10 | 12 |
| பச்சை மிளகாய் | 400 | 350 | 350 | 260 | 360 | 600 | 270 | 400 |
| புடோல் | 120 | 120 | 80 | 80 | 80 | 120 | 70 | 80 |
| கோவா | 120 | 160 | 120 | 120 | 130 | 160 | 80 | 100 |
| வெண்டி | 180 | 120 | 120 | 120 | 140 | 120 | 90 | 120 |
| போஞ்சி | 200 | 200 | 180 | 180 | 220 | 260 | – | 220 |
| லீக்ஸ் | 140 | 140 | 120 | 120 | 130 | 120 | 130 | 130 |
| தேங்காய் | 50 | 30 | 50 | 50 | 50 | 40 | 30–45 | 30 |
| உருளைக்கிழங்கு | 80 | 70 | 70 | 70 | 80 | 60 | 50 | 120 |
| தேசிக்காய் | 100 | 80 | 120 | 120 | 100 | 40 | 60 | 50 |
| வல்லாரை | 30 | 20 | 10 | 20 | 20 | 20 | 20 | 10 |
| கறிமிளகாய் | 250 | 320 | 300 | 250 | 220 | 400 | 230 | 300 |
| இராசவள்ளி | 150 | 120 | 160 | 120 | 160 | 120 | 110 | 100 |



## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்



| | யாழ்ப்பாணம் | மன்னார் | கிளிநொச்சி | [illegible] | பருத்தித்துறை | சாவகச்சேரி | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 800-1000 | 700 | 600 | 700 | 500 |
| நண்டு | 250 | 400 | 400 | 400 | 400 | 350 | – |
| கணவாய் | 600 | 600 | 500 | 400 | 600 | 700 | – |
| பாரை | 450 | 600 | 400 | 600 | 500 | 450 | 420 |
| சுறா | 300 | 600 | 600 | 800 | 600 | 600 | – |
| சீலா | 250 | 400 | 400 | 500 | 400 | 300 | 400 |
| விளை | 500 | 500 | 400 | 600 | 450 | 500 | 400 |
| முரல் | 250 | 400 | 300 | 400 | 300 | 400 | 400 |
| கும்பிளா | 300 | 350 | 300 | 500 | 400 | 350 | 350 |
| கிழாக்கன் | 400 | 800 | – | – | 500 | – | – |
| ஓரா | 300 | 400 | 250 | – | 400 | – | 350 |
| திரளி | 200 | 350 | 200 | 300 | 300 | 300 | 300 |
| நகரை | 150 | 250 | 200 | 250 | 300 | 300 | 350 |
| சூடை | 130 | 150 | 100 | 200 | 200 | 150 | – |
| ஒட்டி | 200 | 250 | 100 | 200 | 300 | 150 | 200 |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 300 | 200 | 130 |
| மதனம் | 250 | 200 | 180 | 300 | 250 | 300 | 200 |
| கொய் | 100 | 150 | 500 | 100 | 100 | 100 | – |
| பாலை | 100 | 150 | 250 | 400 | 400 | 400 | – |
| வாழை | 150 | 150 | 200 | 300 | 300 | 300 | 200 |

## சமையலறைக் குறிப்புகள்

✱ தேயிலைத்தூள் வைத்திருக்கும் போத்தலில் உபயோகித்த ஏலக்காய்த் தோல்களை போட்டு வைத்திருந்தால் தேயிலை, ஏலக்காய் மணத்தோடு சுவையாக இருக்கும்.

✱ மழை, குளிர் காலங்களில் வடகம் நமத்துப் போய் நன்றாகப் பொரியாது. வெறும் சட்டியை அடுப்பில் வைத்துச் சூடேற்றி, அதில் வடகத்தைப் போட்டு, சற்றுப் புரட்டி எடுத்து விட்டு, எண்ணெயில் பொரித்தால் நன்றாகப் பொரியும்.

✱ வெங்காய ஊத்தப்பம் செய்யும் போது தோசை இருபுறமும் வெந்து இருந்தால் தான் சுவையாக இருக்கும். தோசையின் நடுப்பகுதியில் சிறு ஓட்டை போட்டு எண்ணெய் ஊற்றினால் விரைவில் வெந்தும், சுவையாகவும் இருக்கும்.

✱ தோசைக்கு ஊறவைக்கும் போது ஒரு கிலோ வுக்கு 50 கிராம் வேர்க்கடலை, 50 கிராம் பட்டாணி சேர்த்து ஊற வைத்து அரைத்து மாவுடன் கலந்து தோசை வார்த்தால் நிறமான, சுவை அதிகமான, சத்து நிறைந்த தோசை தயார்.

✱ சமைத்த சாதம் மிஞ்சிப் போய் விட்டால், அதைப் போல் இரண்டு பங்கு தண்ணீரைக் கொதிக்க வைத்து, அதில் பழைய சாதத்தைக் கொட்டி, ஒரு கொதி வந்ததும் இறக்கி வடித்து விடவும். பின்னர் மறுபடியும் 5 நிமிடம் வடித்த சாதத்தை அடுப்பில் வைத்து இறக்கினால் நீர்ப்பசை அகன்று புதிதாகச் சமைத்ததைப் போல் இருக்கும்.

வீட்டில் ஜாம் தயாரிக்க விரும்பினால் சரியாகப் பழுக்காத பழங்களையே பயன்படுத்த வேண்டும். அப்போது தான் ஜாம் நீண்ட நாளகளுக்குக் கெடாமல் இருக்கும்.

✱ குக்கரில் பருப்பை சமைக்கும் போது, ஒரு கரண்டி மஞ்சள் தூளையும், ஒரு கரண்டி நெய்யையும் அதற்குள் சேர்த்து விடுங்கள். அதிலிருந்து வரும் மணத்துக்கே அனைவரும் ஒரு பிடி பிடித்து விடுவார்கள்.

✱ நன்றாகக் காய்ந்து போன பாண், பனிஸ் போன்றவைகளை எடுத்துத் தண்ணீர் கலந்து பிசைந்து விடுங்கள். நறுக்கிய பச்சை மிளகாய், இஞ்சி, வெங்காயம், பூண்டு போன்றவற்றுடன் கொஞ்சம் உப்பை சேர்த்து மாவாக ஆக்கி விடுங்கள். கொஞ்சம் எண்ணெயை சுட வைத்து இந் தக் கலவையை வடை சுடுவது போல் போட்டு பொன்னிறமாகும் வரை பொரித்து விடுங்கள். பஜ்ஜிகளுக்கு போட்டியாக சூப்பர் சுவையாக இருக்கும்.

✱ வாழைத் தண்டுகள், கீரைத் தண்டு கள் மற்றும் கொத்துமல்லி கெடாமல் இருக்க அவற்றை அலுமினியம் காகிதத்தில் சுற்றி வைக்கலாம்.

✱ உருளைக் கிழங்குகளை பிளாஸ்டிக் கவர்களில் போட்டு வைக்கக்கூடாது. ஏனெனில் அதிலுள்ள ஈரத்தன்மையால் கிழங்கு அழுகி விடும் வாய்ப்பு இருக்கிறது.



**நாளை**
தை-08
வெள்ளிக்கிழமை 22.01.2016
திதி: திரயோதசி மு.ப.8.56
நட்சத்திரம்: திருவாதிரை மு.இ.08.50
ராகுகாலம்: 11.05-12.35 வரை
சுபநேரம்: 06.35-08.05 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்

## விரைவில் வெளியாகிறது மோட்டோ எக்ஸ் போர்ஸ்



மோட்டோரோலா நிறுவனத்தின் அடுத்த படைப்பான மோட்டோ எக்ஸ் போர்ஸ் தொடுதிரை கைபேசி விரைவில் சந்தையில் வெளியிடப்படும் என அந்த நிறுவனம் தனது டுவிட்டர் பக்கத்தில் செய்தி வெளியிட்டுள்ளது.

5.4 அங்குல எச்டி தொடுதிரையுடன் வெளியாகவும் இந்தக் கைபேசி, 2560 X 1440 பிக்சல் தீர்மானம் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

810 அக்டோ கோர் ப்ராசசர் மூலம் இயக்கப்படும் இந்தக் கைபேசி, மைக்ரோ எஸ்டி அட்டை வழியாக, 32ஜிபி விரிவாகக்கூடிய சேமிப்பு மற்றும் 3ஜிபி நினைவகம் உள்ளடங்கிய சேமிப்பு கொண்டது.

5 மெகாபிக்சல் கொண்ட முன்புற கமரா மற்றும் 21 மெகாபிக்சல் கொண்ட பின்புற கமரா வசதி கொண்டதாக இந்தக் கைபேசி உருவாக்கப்பட்டுள்ளது.

## லை–பியுடன் இனி ஐபோன்



அப்பிள் நிறுவனத்தால் அறிமுகம் செய்யப்பட்டு வரும் ஐபோன்களுக்கு மக்கள் மத்தியில் தனியான வரவேற்பு உள்ளமை தெரிந்ததே.

இதற்கு காரணம் சிறந்த தொழில்நுட்பமும், புதிய வசதிகளை உள்ளடக்கியதாக அறிமுகம் செய்தலும் ஆகும். இதன் தொடர்ச்சியாக எதிர்காலத்தில் அறிமுகமாகவுள்ள ஐபோன்களில் அதிவேக இணைய இணைப்பு தொழில்நுட்பமான லை–பி வசதியை உள்ளடக்கியதாக அறிமுகம் செய்யவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இத் தொழில்நுட்பமானது ஐஎஸ்.ஓ. 9.1 மற்றும் அதற்கு பின்னர் அறிமுகமாகும் இயங்குதளங்களில் செயற்படக்கூடியதாக இருப்பதுடன், இத்தொழில்நுட்பத்தின் ஊடாக செக்கனுக்கு 224 ஜிகாபைட் வேகத்தில் தரவுகளை பரிமாற்றம் செய்ய முடியும்.

## யூடியூப்புக்கு தடை நீக்கம்




காணொலி பகிரும் தளங்களில் தொடர்ந்தும் முன்னணியில் திகழும் யூடியூப் தளத்துக்கான தடையை பாகிஸ்தான் நீக்கியுள்ளது.

இஸ்லாமியர்களுக்கு எதிரான காணொலி ஒன்று பதிவேற்றம் செய்யப்பட்டிருந்த நிலையில் அதனை நீக்குமாறு அமெரிக்க நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கியிருந்தது.

எனினும் அதனை தாய் நிறுவனமான கூகுள் நிறுவனம் நீக்க மறுத்ததை தொடர்ந்து யூடியூப் தளமானது 2013 ஆம் ஆண்டு பாகிஸ்தானிய அரசால் தடைசெய்யப்பட்டிருந்தது. இந்தநிலையில் தற்போது கூகுள் நிறுவனம் பாகிஸ்தான் அரசுடன் இணைந்து தற்போது அந் நாட்டு மொழியில் மட்டும் தொழிற்படக் கூடிய விசேட யூடியூப் பக்கத்தை வடிவமைத்து சேவையை வழங்கவுள்ளது.



# ஆர்பிக்கோ வழங்கும் ரக்ஸி சேவை

ஆர்பிகோ விற்பனைத் தொடரில், பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக வரும் வாடிக்கையாளர்களுக்கு, ரக்ஸி சேவையை வழங்கும் விசேடத் திட்டமொன்றை, ஆர்பிக்கோ ஆரம்பித்துள்ளது.

இலங்கையிலுள்ள சுப்பர் மார்கெட்டுகளுள், ஆர்பிக்கோவே இந்தச் சேவையை முதல் முதலாக அறிமுகம் செய்துள்ளது. இச் சேவையின் முதற்கட்டமாக ஹைட் பார்க் கோர்னர், தெஹிவளை, பத்தரமுல்ல மற்றும் வத்தளை ஆகிய நான்கு ஆர்பிகோ சுப்பர் சென்டர்களில், மின்சாரத்தில் இயங்கும் 10 நிசன் லீவ் கார்கள் வாடகைச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

பிரத்தியேகமான ஆர்பிக்கோ வர்ணத்தில், சௌகரியமானதும் பாதுகாப்பானதும், சுற்றாடல் சாதகமானதுமான சவாரியானது, வீட்டுக்குச் செல்லும் வாடிக்கையாளர்களுக்கு கிலோ மீற்றருக்கு 40 ரூபா என்ற அடிப்படையில் கட்டணத்தை அறவிடுவதாக நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த புதியச் சேவையானது, வாடிக்கையாளர்கள் வரவேற்கும் மேலதிக வசதியாகும் என்று றிச்சார்ட் பீரிஸ் நிலையத்தின் சந்தைப்படுத்தல் முகாமையாளர், மினோத் டீ சில்வா தெரிவித்துள்ளார்.

ஆர்பிக்கோ விற்பனைத் தொடர் நிலையங்களில் தற்போது 17 ஆர்பிகோ சுப்பர் சென்ரர்கள், 18 காட்சி அறைகள், 21 நாளாந்த மினி சுப்பர் மார்க்கெட்டுகள் ஆகியன அடங்கியுள்ளன. நிறுவனத்தின் முதன்மை விற்பனை நிலையங்களான ஆர்பிகோ சுப்பர்சென்டர்கள், வசதியான வாகனத் தரிப்பிடங்கள், சிட்டை கொடுப்பனவுகள், வங்கி வசதிகள், வாழ்க்கைத் தேவைகள், வீட்டுபாவனைப்பொருள்கள். மின்னியல் உபகரணங்கள் ஆகியவற்றிலிருந்து சமையலறைப் பொருள்கள், தளபாடங்கள் வரையிலான பொருள்களை உள்ளடக்கிய நாட்டில் மிகவும் சௌகரியமான பொருள் கொள்வனவு நிலையங்களாக விளங்குகின்றன. (த)

# கொழும்பு சர்வதேச நிதி மையம்

உத்தேசிக்கப்பட்டுள்ள கொழும்பு சர்வதேச நிதி மையம், ஏப்ரல் மாதத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்படும் என்று நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

நாட்டில் தற்போது செயற்பாட்டில் இல்லாத ஏழு சர்வதேச வங்கிகள், இந்த மையத்தில் தமது கிளைகளை நிறுவி செயற்பாடுகளை முன்னெடுக்க ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளதாகவும் இவற்றில் மத்திய கிழக்கு, ஜப்பான் மற்றும் கொரியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த வங்கிகள் உள்ளடங்கியுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இவற்றுக்கு மேலதிகமாக 50 வங்கிகள் இந்த மையத்தில் தமது கிளைகளை அங்குரார்ப்பணம் செய்யத் திட்டமிட்டுள்ளதுடன், 37 உள்நாட்டு வங்கிகளும் தமது கிளைகளை அங்குரார்ப்பணம் செய்யவுள்ளன.

இந்த மையத்தில் நிறுவப்படவுள்ள வங்கிகளின் மூலமாக அனுமதிக்கட்டணத்தை அரசு பெற்றுக் கொள்ளவுள்ளதுடன், இந்தப் பெறுமதி குறித்த விவரங்கள் இதுவரையில் வெளியிடப்படவில்லை.

இந்த மையத்தின் மூலமாக நாட்டில் நிபுணத்துவம் வாய்ந்த மேலதிக தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்த முடியும் என்பதுடன், பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையிலும் அமைந்திருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (த)

# இலங்கை வங்கியின் புதுவருட கொண்டாட்டம்



இலங்கை வங்கியின் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி றொனால்ட் சி.பெரேராவின் தலைமைத்துவத்தில், பொது முகாமையாளர் டி.எம். குணசேகரவின் ஏற்பாட்டில், இலங்கை வங்கி புது வருடத்தை சமய அனுஷ்டானங்களுடன் ஆரம்பித்திருந்தது.

வங்கியின் தலைமையகத்தில் இந்த வைபவங்கள் நடைபெற்றதுடன், இந்நிகழ்வுகளில் வங்கியின் பணிப்பாளர்கள், கூட்டாண்மை மற்றும் நிறைவேற்று முகாமைத்துவ அதிகாரிகள் மற்றும் வாடிக்கையாளர்கள், நலன் விரும்பிகள் என்று பலர் பங்கேற்றிருந்தனர்.

இந்நிகழ்வின் போது உரையாற்றிய இலங்கை வங்கியின் தலைவர், எமது வங்கி இந்த புதிய ஆண்டில் டிஜிற்றல் நுட்பங்களைப் பின்பற்றி புதிய வழியில் செல்லும் என்று தெரிவித்தார்.

மேலும் வாடிக்கையாளர் [illegible]மதி [illegible] இதற்கமைய ஒவ்வொரு வாடிக்கையாளர் சேவை நிலையங்களிலும் உயர் தரம் வாய்ந்த வாடிக்கையாளர் சேவையை வழங்குவதன் முக்கியத்துவம் பற்றியும் விளக்கமளித்திருந்தார்.

இலங்கை வங்கி தலைவரான ஜனாதிபதி சட்டத்தரணி றொனால்ட் சி. பெரேரா, கம்சோலோட்ஸ்டார் பிரதம நிதி அதிகாரி கீர்த்தி பண்டாரவிடம் நினைவுச்சின்னம் மொன்றையும் அன்பளிப்பு செய்துள்ளார். (த)

வணிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலிகளின்

சிறிசேன தெரிவித்துள்ளார்.

அத்திடிய மிகிந்து செத் மெதுற வில் நிர்மாணிக்கப்பட்ட நீச்சல் தடாகம் நேற்றுமுன்தினம் பிற்பகல் இராணுவச் சிப்பாய்களிடம் ஒப்படைக்கும் நிகழ்வின்போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

புதிய அரசு ஒரு போதும் தேசிய பாதுகாப்புக்கான தனது பொறுப்பைப் புறந்தள்ளுவதற்கோ தாமதப்படுத்துவதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. இதனை முன்னரிலும் பார்க்க மிகவும் வலுவான முறையில் நடைமுறைப்படுத்துவது எமது நோக்கமாகும்.

நாட்டுக்கு வெளியே உள்ள தமிழீழ விடுதலைப் புலிப் பயங்கரவாதிகள் எண்ணம், தமிழீழம் - தனிநாடு தொடர்பான கனவினை உடைத்தெறிவதற்கு, சர்வதேசத்தின் சகலவிதமான ஒத்துழைப்புக்களும் இன்று இலங்கைக்கு கிடைத்துள்ளன. நாட்டுக்கு தீங்கு விளைவிக்கும் - ஒருமைப்பாட்டிற்கு சவால் விடுக்கும் நாட்டுக்கு வெளியில் இருந்து செயற்படும் சகலவிதமான செயற்பாடுகளையும் இல்லாதொழிப்பதற்கு புதிய அரசு பாடுபடும்.

போரின் இறுதிப் பகுதியில் இடம்பெற்றதாக குற்றம் சுமத்தப்படும் சில சம்பவங்கள் காரணமாக இலங்கையின் பாதுகாப்புப் படைகளுக்கு வழங்கப்பட்ட பயிற்சி, சந்தர்ப்பங்கள், தொழில்நுட்ப உதவிகள் ஆகியவற்றைப் பெரும்பாலான உலக நாடுகள் நிறுத்தின. நான் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டபின், அந்த நாட்டு அரச தலைவர்களிடம் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்த வாய்ப்புக்கள் மீண்டும் இலங்கை பாதுகாப்புப் படைகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

இந்த நாட்டில் மீண்டும் போர் ஏற்படுவதைத் தவிர்த்து நாட்டில் நிலையான சமாதானத்தை நிலவச் செய்வதே அன்று போர்க்களத்தில் உயிரைத் தியாகம் செய்த, உடல் உறுப்புக்களை இழந்த அனைத்து இராணுவ வீரர்களுக்காகவும் அரசினால் வழங்கப்படும் அதி உயர்ந்த பாராட்டாகும்-என்றார்.

இந்த நிகழ்வில் இராணுவ வீரர்களுக்காகக் காணி உறுதிகள், பகுதியளவு பூர்த்தியடைந்த வீட்டு உரிமைப் பத்திரங்கள் ஆகியவற்றை ஜனாதிபதி வழங்கிவைத்தார். மிகிந்து செத் மதுறவில் மேற் பார்வைப் பயணம் மேற்கொண்ட ஜனாதிபதி, உடலுறுப்புக்களை இழந்த இராணுவ வீரர்களிடம் நலன் விசாரித்தார். (த-5)

## காணாமற்

வெளிவிவகார அமைச்சினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கை ஆட்சி, சட்டம், மனித உரிமைகள் செயற்குழுவில் பங்குகொள்ள இலங்கை வந்துள்ள ஐரோப்பிய ஒன்றியக்குழுவினர் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனை நேற்றுமுன்தினம் மாலை சந்தித்துக் கலந்துரையாடினர். கொழும்பில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது ஐரோப்பிய வெளிவிவகார நடவடிக்கை சேவையின் தலைவர், ஜி.எஸ்.பி.சேவை யின் உப தலைவர், ஜி.எஸ். பி. பிளஸ் ஒருங்கிணைப்பாளர் போன்றோருடன் ஐரோப்பிய வெளிவிவகார நடவடிக்கை சேவையின் மனித உரிமைகள் உத்தியோகத்தர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பு குறித்து எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் கருத்துத் தெரிவிக்கும்போது,

ஐரோப்பிய ஒன்றியக் குழுவினருடனான இந்தச் சந்திப்பு மிகவும் ஆக்கபூர்வமாக அமைந்திருந்தது. அசாதரண சூழலால் எமது தமிழ் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உரிய பரிகாரம் வழங்கப்பட வேண்டியது அவசியமாகும். அத்துடன் இவ்விதமான சம்பவங்கள் எதிர்காலத்தில் நடை பெறாதிருப்பது வழிவகுக்கப்பட வேண்டும்.

விசேடமாக காணாமற்போனோர் தொடர்பான பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வொன்று காணப்பட வேண்டும். அதேவேளை, தமிழ் அரசியல்கைதிகள் தாமதமின்றி விடுவிக்கப்பட வேண்டும்.

பொதுமக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிப்பத்தில் அரசு சில நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றபோதும், அவ்விதமான கருமங்கள் மேலும் விரிவுபடுத்தப்படுவதுடன் துரிதமான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இராணுவப் பிரசன்னத்தின் காரணமாக எமது மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றார்கள். குறிப்பாக பெண்கள் பல அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றார்கள். ஆகவே, இராணுவப் பிரசன்னத்தை குறைப்பது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 30ஆவது கூட்டத்தொடரில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். உண்மையான புரிந்துணர்வு ஏற்படுவதை உறுதிசெய்ய வேண்டியவது அவசியமாகும் என்று ஐரோப்பிய ஒன்றியக் குழுவினரிடம் தெரிவித்தோம்.

இதன்போது தற்போது ஏற்பட்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தை நழுவவிடக்கூடாது; நல்லிணக்கத்தை கட்டியெழுப்புதல், நிலையான சமாதானத்தை ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகளில அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்என ஐரோப்பிய ஒன்றியக் குழுவினர் கேட்டுக்கொண்டனர் - என்றார். (த-சி)

## முல்லைத்தீவுக்கு

முத்து முல்லைத்தீவுக்கு வருகை தரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் ஏற்பாட்டில் நாளைமறுதினம் முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரி வளாகத்தில் உழவர் விழா இடம்பெறவுள்ளது. இதில் சிறப்பு விருந்தினராக கவிஞர் வைரமுத்து கலந்துகொள்கிறார்.

உழவர்களைக் கௌரவப்படுத்தும் இந்த நிகழ்வில் சிறந்த வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கையாளர்கள், சிறந்த கால்நடைப் பண்ணையாளர்கள், சிறந்த கோழிப் பண்ணையாளர்களுக்கு விருதுகளும் வழங்கப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (வ-101)

**பனங்கிழங்கு விற்பனைக்குண்டு**

திருநெல்வேலி
தொடர்புகொள்ள வேண்டிய இல:
077 972 1154

**வீடு வாடகைக்குத் தேவை** தொடர்பு: 077 248 7316

நல்லூர் சூழலில் சிறிய குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவை.

**மணமகள் தேவை** தொடர்பு: 021 373 5189

யாழ். வயது 38 கிரகபாவம் 47. 2 இல் செவ்வாய். உத்தரம் 3 ஆம் பாதம் கன்னிராசி உயரம் 5' 3" சொந்த தொழில் புரியும் மணமகனுக்கு A/L படித்த தொழில் புரியும் மணமகள் தேவை.

**காணி விற்பனைக்கு**

கொக்குவில் தலையாழியில் 6 பரப்புக் காணிகள் (1½ பரப்பு வீதம் 4 துண்டுகள்) விற்பனைக்கு உண்டு.
தொ.பே: 0776033259
077 728 6061

Galaxy Star

வெற்றி வாரம் 027 திகதி 20.01.2016

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
03 16 30 47 58

அடுத்த ஞாயிற்றுக்கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 2,798,380/-

சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம்: 2728 திகதி 20.01.2016

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
25 42 61 69 E
போனஸ் இல. 39
சனிக்கிழமை ஜக்பொட் ரூ. 23,388,975/-

2016.01.23 ஆம் திகதி சனிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாவது பச்சை நிற டிக்கட்டுக்களாகும்.

**உடனடி வேலை வாய்ப்பு**

அலுவலக உதவியாளர் (பெண்) தகைமைகள்:-
01.G.C.E O/L அல்லது G.C.E. A/L 02. கணினி அறிவு அவசியம்
மேற்குறிப்பிட்ட தகை மை உடையவர்கள் தங்கள் சுயவிவரக் கோவையை கீழ் காண ப்படும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது தபால் முகவரிக்கோ 31.01.2016 ஆம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய முகவரி:- vijayalankaexport@gmail.com
அல்லது Vijayalanka Exports & Contracts Co.Pvt Ltd, Point Pedro Road, Puttur East, Puttur. தொலைபேசி:
021 205 8999 ,071 157 3116

**பதவி வெற்றிடம்**

- ரொட்டி தயாரிப்பாளர் (கொத்து)
- சிற்றுண்டி தயாரிப்பாளர் (றோல்ஸ், சமுசா மற்றும் ஏனையவை)
- உணவு தயாரிப்பாளர் Rice & Curry, Fried Rice
- இந்தியன் உணவு வகைகள் தயாரிப்பாளர் தோசை வகைகள், இட்லி, வடை
- காசாளர்
- சமையல் உதவியாளர்
- உணவு பரிமாறுபவர்.

தர்மினி ஹொட்டேல்
1037, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். T.P: 077 9872 808, 0770 782375

**பணியாளர் தேவை**

நெல்லியடியில் இயங்கும் நிறுவனத்துக்கு அனுபவம் வாய்ந்த கேக் ஐசிங் செய்ய தெரிந்தவர்கள் மற்றும் காசாளர் தேவை. ஆண் பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு:
T.P: 076 8373190

**விற்பனைக்கு**

மோட்டார் சைக்கிள்கள்
1. TVS PHOENIX - NPBAL-XXXX
2. TVS XL HEAVYDUTY - NPBCG-XXXX
3. YAMAHA FAZER - NPBBU-XXX

முச்சக்கர வண்டி (BAJAJ)
1. NPQI - XXXX (AUTO RE 2 STROKE)

தொடர்புகளுக்கு :
மேனகாந்
077 060 8074, 077 3644409.

TRADE FINANCE AND INVESTMENTS PLC
74, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 221 9997, 021 222 1898




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர்ச்சிகள்

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## அரசியல்

என்றும் தெரிவித்தார்.

உலகப் பொருளாதார மாநாட்டில் இலங்கை முதல் தடவையாக இந்த ஆண்டு கலந்து கொண்டுள்ளது.

50இற்கும் மேற்பட்ட நாடுகளின் தலைவர்கள், அமைச்சர்கள் கலந்து கொண்டுள்ள இந்த மாநாட்டிற்கு இந்த ஆண்டே இலங்கைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரதமர் மற்றும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க உள்ளிட்ட குழுவினர் இந்த மா நாட்டில் கலந்துகொண்டுள்ளனர்.

மாநாட்டின் பக்க நிகழ்வாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பல்வேறு சந்திப்புக்களிலும் நேற்று ஈடுபட்டார். காலையில் பிலிப்ஸ் லைட்டிங்ஸ் சொலுசன் நெதர்லாந்து நிறுவனத்தின் தலைமை அதிகாரி எரிக் ரொண்டோலட், டாட்டா குழுமத்தின் தலைவர் சைரஸ் மிஸ்ரி, மக்கென்ஸி அண்ட் கொம்பனியின் ஆசிய தலைவர் கெவின் நெடர் ஆகியோரைச் சந்தித்துப் பேசினார்.

பிற்பகலில், பக்ரெய்ன் பிரதமர் சேக் சல்மான் பின் கலிபா அல் கலிபா, சுவீடன் நாட்டு பிரதமர் ஸ்டெவன் லொவன், துருக்கிப் பிரதமர் அஃமட் டவுட்டொக்ளு ஆகியோரைச் சந்தித்து இரு தரப்பு விவகாரங்கள் குறித்துப் பேசினார். பொருளாதார ஒத்துழைப்புக் குறித்து இந்தச் சந்திப்புக்களில் ஆராயப்பட்டது.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார் ரணில் விக்கிரமசிங்க. நல்லிணக்க முயற்சிகள், பொறுப்புக்கூறல், அரசியல் கைதிகள் விடுதலை குறித்து செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார். இதற்குப் பதிலளித்த பிரதமர்,

இலங்கையில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என்றார். 'தமிழர்கள் அல்லது சிங்களவர்கள் என்று எவரும் அரசியல் கைதிகளாக இல்லை. இருக்கின்ற 209 கைதிகளில் சிலர் ஏற்கனவே தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள். அவர்களை விடுவிப்பதில் சட்டச் சிக்கல்கள் உள்ளன.

ஏனையவர்கள் தொடர்பில், சிறைச்சாலைகள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தலைமையில் ஆராயப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கையில் நீதி அமைச்சர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதி ஒருவரும் ஈடுபட்டுள்ளனர் என்றார் பிரதமர்.

அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச ஏற்கனவே தெரிவித்திருந்த நிலையிலும் அமைச்சர்கள் பலரும் இதனையே கூறிவந்த நிலையிலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உலக அரங்கில் தற்போது அரசியல் கைதிகள் எவரும் இல்லை; இருப்பவர்கள் தண்டனை விதிக்கப்பட்டவர்கள் என்று தெரிவித்திருக்கிறார்.

அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்றும் அவர்களை விடுவிப்பது தொடர்பில் அரசுடன் தொடர்ந்தும் கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறிவரும் நிலையில் பிரதமரின் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

*நல்லிணக்கம் குறித்த முயற்சிகள் ஆரம்பம்*

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன என்றும் பொறுப்புக் கூறல் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் நடவடிக்கை எடுத்து வருகிறார் என்றும் அவர் தெரிவித்தார். அதிகாரப் பகிர்வு, தேர்தல் மறுசீரமைப்பு குறித்து தமிழ்க் கட்சிகளுடனும் ஏனைய கட்சிகளுடனும் கலந்துரையாடல்கள் நடத்தப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொருளாதார சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சியாக நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றி இருப்பதாகவும் வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் ஒரு கூட்டு அரசு அமைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## மகிந்தவின்

தமக்கு எதுவும் தெரியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் அமைந்துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலை மையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரி விக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்த தாவது: –

மகிந்த ஆட்சியில் பலர் காணாமற்போயுள்ளார்கள். வெள்ளை வான்களிலும் பலர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர் என்றும் குற்றம் சுமத்தப்படுகின்றது. ஆனால், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் வெள்ளை வானிலா அல்லது வேறு நிற வானிலா கடத்தப்பட்டார்கள் என்பது தொடர்பில் எமக்கு எதுவும் தெரியாது. எனினும், காணாமல்போனவர்கள் பலர் இன்று ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்றனர். அவர்களது தகவல்களைப் பெற்றுக்கொள்ள மகிந்த அரசு சர்வதேசத்தின் உதவியை நாடியது. எனினும், நாட்டுசட்டதிட்டங்களுக்கு அமைய அதனை வழங்க சர்வதேச நாடுகள் மறுத்தன. மகிந்த ஆட்சியில் இடம்பெற்ற அனைத்துத் தவறுகளுக்கும் நாங்கள் பொறுப்புக்கூற முடியாது.

காணாமற்போனவர்கள் விவகாரம் தற்போது மீண்டும் அரசியல் பேசுபொருளாக மாறியுள்ளது. இது தொடர்பில் நல்லாட்சி அரசு விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும்.

மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்தில் நான் அமைச்சராக இருந்தவேளை, ஜெனிவாக் கூட்டத்தொடர் பலவற்றில் கலந்து கொண்டிருந்தேன். இந்தச் சந்தர்ப்பங்களில் வெள்ளை வான் பற்றியோ வேறு விடயங்கள் பற்றியோ இலங்கை அரசிடம் விசாரணை செய்யவில்லை. இலங்கையில் காணப்படும் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இலங்கை அரசை சர்வதேச சமூகத்தினர் வலியுறுத்தி வந்தனர்– என்றார். (த–சி)

## இழுவைப்

தில் இழுவை மடி மீன்பிடியில் தமிழ்நாட்டின் பலம்மிக்க அரசியல்வாதிகள் தொடர்புபட்டிருக்கிறார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையின் முதலீட்டு அமையம் நேற்று மாலை ஏற்பாடு செய்திருந்த முதலீட்டாளர்களுடனான கலந்துரையாடலின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி வந்த மீன்பிடியில் ஈடுபடு வது பெரும் பிரச்சினை என்று தெரிவித்த அவர், இலங்கைக் கடல் பகுதியில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்குமாறு இந்திய மீனவர்கள் கேட்கிறார்கள்.

எனினும் இழுவை மடி மீன்பிடியில் அவர்கள் ஈடுபடுவதால், அவர்களது கோரிக்கையை ஏற்க முடியவில்லை. அதனை அவர்கள் கைவிட்டால் அவர்களது ஏனைய கோரிக்கைகள் குறித்து சாதகமாகப் பரிசீலிக்க முடியும்.

ஆனால், இழுவை மடி மீன்பிடியில் தமிழகத்தின் பலமிக்க அரசியல்வாதிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பதால் அதனை நிறுத்த முடியவில்லை என்றார் பிரதமர். (உ)

## வடக்கு

மாகாண சபையின் அடுத்த அமர் வில் முன்வைக்கப்படவுள்ளது.

இதே நடவடிக்கை கிழக்கு மாகாணத்திலும் முன்னெடுக்கப்பட்டு, அதிகாரப் பகிர்வு யோச னையின் இறுதி வடிவம் – தீர் வுத் திட்டம், வடக்கு – கிழக்கு மாகாண சபைகள் இணைந்ததாக முன்வைக்கப்படவுள்ளது.

வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் – அமைச்சர்கள் – அவைத் தலைவர் மற்றும் முதலமைச்சர் இடையேயான சந்திப்பு நேற்று மாலை 5 மணிக்கு முதலமைச்சர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இந்தச் சந்திப்புக்கான அனுமதி முதலமைச்சரினால் நேற்று முன்தினம் மாலை வரை வழங்கப்பட்டிருக்கவில்லை. நேற்றுக் காலையே சகல உறுப்பினர்களுக்கும், அவசரக் கடிதம் முதலமைச்சரினால் அனுப்பி வைக்கப்பட்டு நேற்று மாலையே சந்திப்பு நடத்தப்பட்டது.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண சபையின் ஆளும் கட்சி உறுப்பினர்கள் – அமைச்சர்கள் கலந்துகொண்டனர். அமைச்சர் டெனீஸ்வரன் மற்றும் ஒரு சில உறுப்பினர்கள் மாத்திரம் தமது தனிப்பட்ட காரணங்களினால் கலந்து கொள்ளவில்லை. முதலமைச்சருடன் சேர்த்து 23 பேர் நேற்றைய கூட்டத்தில் பங்குபற்றினர்.

வினைத்திறனான மாகாண சபையாகச் செயற்படுதல் விடயம் முதலில் பேசப்பட்டது. இதன்போது முதலமைச்சர், எதிர்காலத்தில் எவ்வாறு வினைத்திறனான மாகாண சபையாகச் செயற்படலாம் என்பது தொடர்பான யோசனையை முன்வைத்தார். இதனைச் சகல உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டனர்.

அடுத்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்படுதல் விடயத்தில், முதலமைச்சர் தான் இப்போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே செயற்படுகின்றேன் எனவும், எதிர்காலத்திலும் அவ்வாறே செயற்படுவேன் எனவும் உறுதிமொழி வழங்கினார். இதனையும் சகலரும் ஏற்றுக்கொண்டனர்.

இறுதியாக, அதிகாரப் பகிர்வு விடயத்தில் வடக்கு மாகாண சபையின் பங்களிப்பு தொடர்பில் பேசப்பட்டது. அதிகாரப் பகிர்வை நடைமுறை ரீதியாக அனுபவித்துக் கொண்டிருக்கும் வடக்கு மாகாண முதலமைச்சரே, புதிய யோசனையை முன்வைப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. இதற்காக, வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையில் அதிகாரப் பகிர்வு யோசனை முன்வைக்கப்படவுள்ளது.

இதற்கு முன்னோடியாக, வடக்கு மாகாண சபையின் அடுத்த அமர்வில் – எதிர்வரும் 26 ஆம் திகதி – பேரவையில் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது. குறித்த பிரேரணைக்கு அமைவாக, அதிகாரப் பகிர்வு யோசனை தயாரிக்கும் நடவடிக்கைகள் முதலமைச்சர் தலைமையில் முன்னெடுக்கப்படவுள்ளது. (த–5)

## போர்க்குற்ற...

தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இலங்கை அரசு தமிழ் மக்களிற்கு அவர்களது நிலங்களை மீள வழங்குவதை இந்திய அரசு உறுதி செய்யும் எனவும் நம்புகின்றேன். இதன் மூலம் சம உரிமைகளும், கௌரவத்துடன் அமைதியாக வாழ்வதற்கான சந்தர்ப்பமும் உறுதி செய்யப்படும்.

இலங்கைக் கடற்படையினர் இந்திய மீனவர்கள் மீது தொடர்ச்சியாக தாக்குதல் நடத்தி வருவதையும் படகுகளைக் கைப்பற்றுவதையும் கண்டிக்கின்றேன். கச்சத்தீவை மீளப்பெறுவதன் மூலமும் மீனவர்களின் உரிமையை நிலைநாட்டுவதன் மூலமும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வை காணவேண்டும் – என்றார். (த–5)

## சுவிஸ்

ரணில் விக்கிரமசிங்க உலக நாடுகளின் முக்கியஸ்தர்கள் மற்றும் முக்கிய வர்த்தகர்கள் சிலருடன் நேற்று பேச்சுகளில் ஈடுபட்டார். இலங்கையில் பெரியளவான முதலீடுகளை மேற்கொள்ள வெகுவிரைவில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சர்வதேச வர்த்தகப் பிரதிநிதிகள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சுவீடன் பிரதமர் ஸ்ரீபன் லோப்வன் மற்றும் துருக்கி பிரதமர் அஹமட் டவுடொக்லுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையிலான சந் திப்பொன்றும் இடம்பெற்றுள்ளது. இதன்போது இலங்கைக்கும் மேற்படி நாடுகளுக்கு மிடையில் பொருளாதார உறவுகளைக் கட்டியெழுப்புவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது

இந்தச் சந்திப்பில் அமைச்சர் மலிக் சமரவிக்கிரம, மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன், சுவிற்சர்லாந்துக்கான இலங்கையின் தூதுவர் ரவிநாத் ஆரிய சிங்க, பிரதமரின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பிரதமரின் மேலதிக செயலாளர் சமன் அத்தாவுதஹெட்டி ஆகியோர் இலங்கையின் தூதுக் குழுவில் பங்கேற்றுள்ளனர். (த–சி)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
02
.
11
.
1960



மறைவு
22
.
12
.
2015

துரைராசா விஜயராசா

கடந்த 22.12.2015 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப விளக்கு துரைராசா விஜயராசா அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் எமது இல்லத்தில் இன்று (21.01. 2016) வியாழக்கிழமை நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

நெடியகாடு,
வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.

5ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
11
.
06
.
1953



மறைவு
30
.
01
.
2011

அமரர் கதிரவேலு குணசேகரம்

எங்கள் கண்கண்ட தெய்வமே அப்பா
ஒரு கணமும் எம்மைவிட்டுப் பிரியாத நீங்கள்
ஆண்டுகள் ஐந்தாகியும் ஏன் வரவில்லை எம்மிடம்
உங்கள் பிரிவாலே இங்கு வாடுகின்றோம் நாம்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
077 8894 334

குடும்பத்தினர்.

கண்ணீர் அஞ்சலி



கொடிகாமம் அ.த.க. பாடசாலை அதிபர்
திரு. பசுபதி தர்ம பூபதி அவர்களின் அன்புத் தாயார்.
திருமதி மேரி திரேசா பசுபதி
(ஓய்வு பெற்ற அதிபர்)

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சி பாடசாலை அதிபர்கள் சங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சர்வமதத் தலைவர்களின் பொங்கல் விழா இன்று

யாழ்ப்பாணம்,ஜன.21
இரத்தினபுரி சர்வமதத் தலைவர்களும், கிளிநொச்சி சர்வமதத் தலைவர்களும் இணைந்து ஏற்பாடு செய்த பொங்கல் விழா இன்று காலை 9 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெறவுள்ளது.
இந்த நிகழ்வில் இரத்தினபுரியில் இருந்து 30 சர்வமதத் தலைவர்கள் வந்து கலந்து கொள்ளவுள்ளதாகவும், பொங்கல் நிகழ்வைத் தொடர்ந்து சமாதான நல்லிணக்கத்துக்கான கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளதாகவும் குறித்த பொங்கல் விழா ஏற்பாட்டாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-ரி3-21)

## மரண அறிவித்தல்கள்

### ஐயங்கன் சாமுவேல்

பிறப்பு 16 . 09 . 1935



இறப்பு 20 . 01 . 2016

கோப்பாய் வடக்கு கோப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஐயங்கன் சாமுவேல் நேற்று (20.01.2016) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்.

077 9297 332

தகவல்:
பாஸ்கரன்
(மகன்)

### வாணர் சின்னத்தம்பி அலெக்ஸ்

(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிகாரி-யாழ்ப்பாணம், முன்னாள் இலங்கை 2ஆம் காலால் படைப்பிரிவின் அதிகாரி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் குன்னுப்பிட்டிய வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட வாணர் சின்னத்தம்பி அலெக்ஸ் அவர்கள் 17.01.2016 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஜோசப்பின் (மாணிக்கவாசகனின் புதல்வி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி-செல்லம்மா (வட்டுக்கோட்டை) தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான திருமதி. அன்னலட்சுமி ராஜாப்பிள்ளை (வட்டுக்கோட்டை, முன்னாள் ஆசிரியை யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) தேவராஜா, நவரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற **Dr**. இராஜாப்பிள்ளையின் (Retired Pathologise Jaffna Teaching Hospital) அன்பு மைத்துனரும், **Dr.R**.அகிலன், **Dr.R**.பரதன், **Dr.R**.வைதேகி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.


அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று (21.01.2016) வியாழக்கிழமை **A.F.** ரேமன் கத்தோலிக்க மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பி.ப 3.30 மணியளவில் கனத்தை ரோமன் கத்தோலிக்க சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்:

**Dr.R.வைதேகி (மருமகள்)**

### முருகேசு இரத்தினம்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் கைதடி அரச முதியோர் இல்லம்)



2 ஆம் ஒழுங்கை அரசடி வீதி, நல்லூரரைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கு நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இரத்தினம் 18.01.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - கதிராசி தம்பதியரின் அன்பு மகனும் மனோன்மணியின் அன்புக்கணவரும் இராசு, மார்க்கண்டு, கனகம்மா ஆகியோரின் அன்புச்சகோதரரும் அருளப்பு - ஞானம்மா தம்பதியினரின் மருமகனும் சசிக்குமார், யஸ்மின், ஆர்த்திகா, துவாரகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜோன்சன், பத்மினி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான யேசுராசா, மரியதாஸ்(மனோ) மற்றும் இராசமலர் ஆகியோரின் மைத்துனரும் ஜொலின், ஜெவ்ரின் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.01.2016) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்திலிருந்து முற்பகல் 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்பட்டு நீர்வேலி புனித பரலோக மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் நீர்வேலி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நீர்வேலி தெற்கு, நீர்வேலி. தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி றீசா யோசப்பின் பெல்த்மன்

மண்ணில் 16 . 12 . 1927



விண்ணில் 20 . 01 . 2016

யாழ்ப்பாணம் 4 ஆம் குறுக்குத்தெருவைப் பிறப்பிட மாகவும் பழைய பூங்கா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றீசா யோசப்பின் பெல்த்மன் நேற்று (20.01.2016) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றெஜீனா பச்சோ தம்பதிகளின் மூத்த மகளும் காலஞ்சென்ற தியோ பிலஸ் கிலைவ் பெல்த்மனின் அன்பு மனைவியும் காலஞ் சென்ற குறெம்ரன் மைக்கல் பெல்த்மன், பேளன் மத்யூஸ் பெல்த்மன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற பிரான்சிஸ் பச்சோ காலஞ்சென்ற எட்னா ஜான்ஸ், றீற்றா ஜான்ஸ், ஒஸ்மன் பச்சோ, வின்சன் பச்சோ ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற ஜான்ஸ் மற்றும் பபி ஜான்ஸ், லில்லிபேட், மாலா ஆகியோரின் அன்பு மைத்துனியும் றீற்றா பெல்த்மன், ஜலின் கிளாறா பெல்த்மன் ஆகியோரின் அன்பு மாமியாரும் யூஜின் நட்டாலி, எட்றிஞ் பெல்த்மன், மைக்கல் கவர் பெல்த்மன், சமிந்த பண்டார ஆகியோரின் பேர்த்தியும் யூட்டின் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.01.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா ஆசண கோயிலில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

### திருமதி மேரிதிரேசா பசுபதி

(ஓய்வு பெற்ற அதிபர்)



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், இல.17/1, மாட்டீன் லேன் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வு பெற்ற அதிபர் திருமதி மேரிதிரேசா பசுபதி அவர்கள் 18.01.2016 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிராம உத்தியோகத்தர் பசுபதி (லோறன்ஸ்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ரகுபதி (SLAS) சகுந்தலா மற்றும் தர்மபூபதி (அதிபர் - யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்) காலஞ்சென்றவர்களான நிர்மலா, ஜெயபதி மற்றும் பிரகலா (கனடா), ராஜபதி (ஆசிரியர் பாண்டியன் குளம் பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயும் றொஜனி (ஆசிரியை - சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயம்) புண்ணியலிங்கம் (கனடா), ஜெனற்பபியுலா (கிராம உத்தியோகத்தர் - யோகபுரம் கிழக்கு) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற வேதநாயகம் மேரி மாக்கிறட், மேரி ஞானப்பூ, மேரி அந்தோனியாப் பிள்ளை (பிரான்ஸ்), பற்றிக்தோமஸ் காலஞ்சென்ற மேரி அருளம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் தூயனா, டிலக்சனா, கவின், ஆன்ரூ (கனடா), அலன் (கனடா), சௌமியா (கனடா), ஸ்ரெபனி (கனடா), தருண், றினோஜன், யூலின் மெலானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான நாகேந்திரம், நடராசா மற்றும் பேரம்பலம் ஆகியோரின் மைத்துனியும் திரு திருமதி இராசநாயகம், திருமதி க.இராசம்மா (கனடா), திரு.கொ.மரியதாசன் ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (21.01.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு யாழ் புனித அடைக்கல அன்னை (O.L.R) ஆலயத்தில் நடைபெற்று பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா (பெரியகோயில்) சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 4189 469,
077 8172 231

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி ஈசுரபாதம் பரமேஸ்வரி



தோற்றம் 10.12.1943 — மறைவு 19.01.2016

கவுந்தில், கரவெட்டி மத்தி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈசுரபாதம் பரமேஸ்வரி 19.01.2016 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பார்வதி தம்பதியினரின் அன்பு மகளும் ஈசுரபாதம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி ,சிற்றம்பலம், கணேசபாய்க்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுகந்தி (ஆசிரியர் - கவுந்தில் முன் பள்ளி), ஜெயந்தி(U.K), கிரிசாந்தி, சிறிபாஸ்கரன் காலஞ்சென்ற சுதாகரன் மற்றும் தனபாலன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.01.2016) வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கவுந்தில்,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி றெஜினா மகேஸ்வரி



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி றெஜினா மகேஸ்வரி நேற்று (20.01. 2016) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மோசேஸ் - மரியம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பேதுரு - அருணோதயம் தம்பதியரின் அன்பு மருமகளும் யுவானியின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற யோசப், திருச்செல்வம், காலஞ்சென்ற புவனேஸ்வரி, லில்லிமலர், இராஜேஸ்வரி, றொபேட் ஆகியோரின் அன்புச் சகோதரியும் மிரியம் கொன்செப்ரா (ஆசிரியை - யா/கோட்டைக்காடு அ.த.க பாடசாலை), டெலஸ் கொன்ஸ்ரன்ரைன் (டெலஸ் புடைவையகம் - சுன்னாகம்), கிறிஸ்ரி வொலன்ரைன் (டல்லா புடைவையகம் - சுன்னாகம்), மிரியம் வொலன்ரீனா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், வவுனியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் இருதயநாதன் (பிரதி அதிபர் - யா/இளவாலை திருக்குடும்ப கன்னியர் மடப்பாடசாலை), மேரி கலிஸ்ரா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வீதி அபிவிருத்தித் திணைக்களம்), அதிசயமலர் (கணித பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் - மாகாணக்கல்வித் திணைக்களம், வடமாகாணம்), மோதிலால் (நிதி உதவியாளர் - நீர்ப்பாசன திணைக்களம், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆன்பௌலீனா, அன்று அனோஜ், அனிஸ் புளோறிடா, யனுஸ் டில்ஷன், ஷானஸ் கிறைஸ்ரா, றொஸ்மி செலானோ, பெலிக்ஸ் கொனஸ்ரா, கசோனா, அஸ்ரேனா ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.01.2016) வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
076 655 1185

ஐயனார் வீதி, சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதி டெஸ்ட்டிலும் ஸ்ரெயின் இல்லை



தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான நான்காவதும் இறுதியானதுமான டெஸ்ட் செஞ் சூரியனில் நாளை ஆரம்பமாகவுள்ளது. இந்த ஆட்டத்திலும் தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளரான ஸ்ரெயின் விளையாட மாட்டார் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை அவித்துள்ளது.

முடிவடைந்த முதல் மூன்று டெஸ்ட் ஆட்டங்களில், முதலாவதும் மூன்றாவதும் ஆட்டங்களில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. இரண்டாவது ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இதனால் நாளை ஆரம்பமாகும் இறுதி டெஸ்ட்டில் தென்னாபிரிக்கா வெற்றிபெற்றாலும் அந்த அணியால் தொடரைக் கைப்பற்ற முடியாது. மொத்தத்தில் கௌரவ வெற்றிக்காக தென்னாபிரிக்கா களமிறங்குகிறது.

இந்தத் தொடரின் முதலாவது ஆட்டத்தில் அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஸ்ரெயினுக்கு காயம் ஏற்பட்டது. இதனால் அவர் இரண்டாவது, மூன்றாவது டெஸ்ட் ஆட்டங்களில் பங்கேற்கவில்லை. இந்நிலையில் அவர் நான்காவது ஆட்டத்திலும் பங்கேற்கமாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது தென்னாபிரிக்காவுக்கு மேலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. (ம)

# வெள்ளையடிக்கும் முனைப்பில் ஆஸி. இந்தியா மீண்டும் ஓர் அபார போராட்டம்



இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் 25 ஓட்டங்களால் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா 5 ஆட்டங்கள் கொண்ட தொடரில் 4:0 என்று முன்னிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணியில் மீண்டும் இணைந்தார் வோர்ணர். வோர்ணர் - பின்ஞ் இணை சிறப்பான தொடக்கம் கொடுத்தது. ஆளுக்கொரு அரைச்சதம் கடக்க இலக்குச் சரிவில்லாமல் நூறு ஓட்டங்களை எட்டியது ஆஸ்திரே லியா. புவனேஸ்குமார், இசாந் சர்மா இருவரதும் பந்துப்பரி மாற்றங்களுக்கு வெளுத்து வாங்கப்பட்டது. ஆனால் யாதேவ், குர்கீரட் சிங் இருவரும் சராசரிக்கு ஏற்ப வீசிக்கொண்டிருந்தனர். 91 ஓட்டங்களுடன் இசாந் சர்மாவிடம் போல்ட் ஆனார் வோர்ணர். சதம் கடந் தார் பின்ஞ். 107 ஓட்டங்களுடன் யாதேவின் பந்தில் ஆட்ட மிழந்தார் பின்ஞ். ஆரம்ப வீரர்கள் இரு வரும் அதிகளவான ஓட்டங் களைப் பெற்றாலும் பெறப்பட்ட ஓட்டங்களுக்கு ஏற்ப பந்து களையும் வீணடித்திருந்தனர். சராசரியை அதிகமாக்கும் முனைப்பில் சிமித் அடித்தாடினார். 4 பவுண் டரிகள், 3 சிக்சர்கள் என 26 பந்தில் அரைச் சதம் கடந்தார். பெய்லி, மார்ஷ் இருவரும் பெரிதாக செயற்படவில்லை. பின் வரிசையில் மிரட்டினார் மக்ஸ் வெல். 20 பந்துகளை எதிர் கொண்டு 41 ஓட்டங்களைக் குவித்தார் மக்ஸ்வெல். முடிவில் ஆஸ்திரேலியா 348-8. பந்துவீச்சில் இந்தியா சார்பாக இசாந் சர்மா 4 இலக்குகளையும், யாதேவ் 3 இலக்குகளையும் கைப்பற்றினர். 300 பந்துகளில் 349 ஓட்டங்கள். ரோகித் சர்மா, தவான் இணையின் ஆரம்பம் கச்சிதமாக அமைந்தது. 41 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரோகித். தவான் - கோக்லி இணையின் மிரட் டலில் இந்தியா மீண்டும் பலம் பெற்றது. தடுமாற்றங்களில் இருந்து மீண்டார் தவான். அரைச்சதத்தை கடந்து சதத்தை நெருங்கிக் கொண் டிருந்தார். கோக்லியின் ஆட்டத்தில் அனல் பறந்தது. ரி-20 பாணியில் சதத்தை நெருங்கினார். இருவரதும் இன்னிங்ஸ்களில் தடுமாற்றம் இல்லை. சதம் கடந்தனர். ஆஸிக்கு எதிரான தொடரில் 2 சதங்கள் விளாசுவேன் என வசிம் அக்ரத்துக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றினார் கோக்லி. இணைப்பாட்டமாக 212 ஓட்டங்கள் பெறப்பட்ட நிலையில் 126 ஓட்டங்களுடன் தவானை வீழ்த்தினார் கஸ்ற்ரிங்ஸ். அதே பந்துப் பரிமாற்றத்தில் ஓட்டம் எதையும் பெறாமல் டோனியும் வீழ்ந்தார். இதுவே இந்தியாவுக்கு பின்னடைவாக அமைந்தது.

கோக்லியும் ஆட்டமிழக்க இறுதிப்பந்துப் பரிமாற்றம் வரை போராடி 25 ஓட்டங்களால் தோல்வியடைந்தது இந்தியா. (ம)

## நியூசிலாந்து - பாகிஸ்தான் இறுதி ரி-20 ஆட்டம் நாளை

நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

முடிவடைந்த முதல் இரு ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் பாகிஸ்தான் வெற்றி பெற்றிருந்தது. இரண்டாவது ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றிபெற்றிருந்தது. இதனால் இன்றைய ஆட்டத்தில் வெற்றிபெறும் அணிக்கு கிண்ணம் தீர்மானமாகும். (ம)

## யாழ். தாச்சிச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவு

யாழ்ப்பாணம், ஜன. 21

யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டு சங்கத்தின் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை (24 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

மு.ப. 10மணிக்கு சங்கத்தின் தலைவர் செ.சண்முகலிங்கம் தலைமையில், சங்கமண்டபத்தில்நடைபெறவுள்ள இந்தபொதுக் கூட்டத்துக்கு ஒரு விளையாட்டுக் கழகத்தை இருவர் மட்டுமே பிரதிநிதித்துவம் செய்ய முடியும். அவ்வாறு வருபவர்கள் தமது கழகங்களின் உறுதிப்படுத்தல் கடிதங்களுடன் சமூகம் தர வேண்டும். உறுதிப்படுத்தல் கடிதம் இல்லாமல் பிரவேசிப்பவர்கள் கலந்துரையாடலில் பங்கு பற்றுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்று யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் தெரிவித்துள்ளது. (ம-ரி5)




# டெஸ்ட் ஆட்டங்களுக்கும் மக்ஸ்வெல் பொருத்தமானவர்

டெஸ்ட் ஆட்டங்களிலும் மக்ஸ்வெலால் சிறப்பாகச் செயற்பட முடியும் என்ற நம்பிக்கை உள்ளதாக ஆஸியின் ஆரம்ப வீரரான வோர்ணர் தெரிவித்துள்ளார்.

மக்ஸ்வெல் மொத்தமாக மூன்று டெஸ்ட் ஆட்டங்களில் மட்டுமே விளையாடியுள்ளார். போதிய திறனற்ற காரணத்தால் டெஸ்ட் அணியில் இருந்து நீக்கப்பட்டு ஒருநாள் மற்றும் ரி-20 தொடர்களில் தொடர்ந்து விளையாடி வருகிறார். ஆனால் மக்ஸ்வெல் டெஸ்ட் ஆட்டங்களுக்கு சிறப்பான வீரராக இருக்க முடியும் என்று வோர்ணர் தெரிவித்துள்ளார்.

மக்ஸ்வெல் தொடர்பாக வோர்ணர் மேலும் தெரிவிக்கையில், மக்ஸ்வெல் ஆட்டத்தில் சமீப காலமாக முன்னேற்றத்தைப் பார்க்கின்றேன். அவர் சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரராக உருவெடுப்பதுடன், மூன்று வகை தொப்பியையும் பெற முடியும்.-என்றார். (ம)

# தலைக்கவசத்துடன் பணியாற்றிய முதலாவது நடுவர் ஜோன் வார்ட்



இந்தியா - ஆஸ் திரேலியா அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற 4ஆவது ஒரு நாள் ஆட்டத்தில் நடுவர் ஜோன் வார்ட் தலைக் கவசம் அணிந்தபடி பணியாற்றினார். சர்வதேச ஆட்டங்களில் தலைக் கவசத்துடன் பணியாற்றிய முதலாவது நடுவர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

கிரிக்கெட்டில் துடுப்பெடுத்தாடும்வீரர்களும், களத்தடுப்பில் ஈடுபடும் சில வீரர்களும் மட்டும் தலைக்கவசம் அணிந்து விளையாடி வந்த நிலையில், இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் நேற்று நடைபெற்ற 4ஆவது ஒரு நாள் ஆட்டத்தில் நடுவர் ஜோன் வார்ட் தலைக் கவசம் அணிந்தபடி பணியாற்றினார்.

திண்டுக்கலில் நடந்த ராஞ்சித் தொடரின் (இந்தியாவின் உள்ளூர்த் தொடர்) போழுது ஜோன் வார்ட் நடுவராகப் பணியாற்றினார். தமிழ் நாடும், பஞ்சாப் அணியும் மோதிய ஓர் ஆட்டத்தில் துடுப்பாட்ட வீரர் அடித்த பந்து ஜோன் வார்ட் தலையை பலமாக தாக்கியது. இதில் அவர் நிலைகுலைந்து கீழே விழுந்துவிட்டார். ஆனால் அவருக்கு எதுவும் ஆகவில்லை. இதனால்தான் அவர் நேற்றைய ஆட்டத்தில் முன்னெச்சரிக்கையாக தலைக்கவசம் அணிந்து பணியாற்றினார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய மோதல்கள்

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

யாழ்ப்பாணம், ஜன. 21
வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம்வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகமைதானத்தில்மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூ பைட் அணியை எதிர்த்து சண்சையின் அணி மோதவுள்ளது.

**றோயல் வி.கழகத் தொடர்**

ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் வடமாகாண ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இடம்பெறும் ஆட்டத்தில் நாவாந்துறை சென்.நிக்கிலஸ் அணியை எதிர்த்து முல்லைத்தீவு உதயசூரியன் அணிமோதவுள்ளது.

**ஜொலிஸ்ரார் வி.கழகத் தொடர்**

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்குஇடம்பெறும்ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணியை எதிர்த்து யாழ். பல்கலைக்கழக அணி மோதவுள்ளது.

**ஐக்கிய வி.கழகத் தொடர்**

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள்ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி காமாட்சி அம்பாள் அணியை எதிர்த்து கைதடி வளர்மதி அணி மோதவுள்ளது. இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாயன் மார்கட்டுபாரதிஅணியை எதிர்த்து நவக்கிரி எல்லாளன் அணிமோதவுள்ளது.

**எவ்.ஏ. கிண்ணத்தொடர்**

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் நடத்தப்படும் பருத்தித்துறை லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான எவ்.ஏ. கிண்ணத்துக்கான தொடரின் ஆட்டம் ஒன்று, இன்று வியாழக்கிழமை நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் பலாலி விண்மீன் அணியை எதிர்த்து உடுத்துறை பாரதி அணி மோதவுள்ளது. (ம-23)



# செரபோவா அசத்தல் வெற்றி

## ஆஸி. ரென்னிஸ் தொடரில்

நடைபெற்றுவரும் ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரின் முதல் சுற்றில் மரிய செரபோவா நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பெண்கள் ஒற்றையர் பிரிவில் முன்னணி வீராங்கனை என்ற அடிப்படையில் செரீனாவுக்கு அடுத்தபடியாக செரபோவாவின் மீதும் அதிகளவான எதிர்பார்ப்பு உள்ளது. தரப்படுத்தலில் 5ஆம் நிலை வீராங்கனையான அவர் தரவரிசையில் 56ஆவது இடத்தில் உள்ள ஜப்பானின் கிபினோவை நேற்றுமுன்தினம் தனது முதல் சுற்றில் எதிர்கொண்டார். அபாரமாக ஆடிய செரபோவா அந்த செற்றை 6:1 எனக் கைப்பற்றினார். கிபினோவால் செரபோவாவுக்கு ஈடு கொடுக்க முடியவில்லை. இரண்டாவது செற்றையும் 6-3 எனக் கைப்பற்றிய செரபோவா முடிவில் 2:0 என்றநேர் செற் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். (ம)

## இந்தியா – ஆஸி. தொடரில் இளஞ்சிவப்பு நிறப்பந்து



இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான 3ஆவதும் இறுதியுமான ரி-20 ஆட்டத்தில் இளஞ்சிவப்புப் பந்து பயன்படுத்தப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் 31ஆம் திகதி சிட்னியில் இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது.

ஆஸ்திரேலியாவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான மெக்ராத், நடத்தி வரும் புற்றுநோய் பவுண்டேசனுக்கு நிதி திரட்டும் நோக்கிலேயே இளஞ் சிவப்பு நிறப் பந்தைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. (ம)

## சென்றலைட்ஸ் சொக்ஸ் அபாரமான ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 21
ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் அணி மோதிக்கொண்டது. இதில் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி 63:40 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. (ம-23)

## கிண்ணம் உதயசூரியனிடம்



யாழ்ப்பாணம், ஜன. 21
நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் உதயசூரியன் அணி கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

இறுதியாட்டத்தில் நெடுந்தீவு உதயசூரியன் அணியை எதிர்த்து நெடுந்தீவு மகா வித்தியாலய அணி மோதியது. நெடுந்தீவு மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் உதயசூரியன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-23)

## மீண்டெழுகிறது யுனைற்ரட்



இங்கிலாந்து பிறீமியர் லீக் தொடரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஆட்டம் ஒன்றில் லிவர்பூல் அணியை வீழ்த்தி தரப்படுத்தலில் ஐந்தாவது இடத்துக்கு முன்னேற்றம் கண்டுள்ளது மான்செஸ்டர் யுனைற்ரட்.

மான்செஸ்டர் யுனைற்ரட், லிவர்பூல் அணிகள் மோதிய இந்த ஆட்டத்தில் கோல் கணக்கு ஆரம்பிக்கப்படாமலேயே முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதே நிலைமைதான். 78ஆவது நிமிடத்தில் மான்செஸ்டர் யுனைற்ரட் அணியின் நட்சத்திர வீரர் ரூனி ஆட்டத்தின் முதல் கோலையும், ஒரே கோலையும் பதிவுசெய்ய முடிவில் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது யுனைற்ரட். கடந்த 11 ஆட்டங்களில் இரண்டில் மாத்திரமே வெற்றி பெற்றிருந்த யுனைற்ரெட், இந்த வெற்றியின் மூலம் தரப்படுத்தலில் ஐந்தாவது இடத்துக்கு முன்னேறியது. ஆர்சனல் அணி தொடர்ந்தும் முதலிடத்தைத் தக்க வைத்துள்ளது. (ம)



## ஜோகோவிக்கிடம் கெயான் சரண்

சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலியா ரென்னிஸ் தொடர் தற்பொழுது நடைபெற்று வருகிறது. ஆண்கள் ஒற்றையர் பிரிவில் ஜோகோவிக் நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று இரண் டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளார்.

மெல்பேர்ண் நகரில் நடைபெற்றுவரும் இந்தத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டத்தில் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள செர்பியாவின் ஜோகோவிக் 52ஆவது இடத்தில் உள்ள கொரியாவின் கெயாங்கை எதிர்த்து மோதினார். முதல் செற்றை 6:3 எனக் கைப்பற்றிய ஜோகோவிக், இரண்டாம் மற்றும் மூன்றாம் செற்களை முறையே 6:2, 6:4 என்ற அடிப்படையில் கைப்பற்றி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பங்களாதேஷை பந்தாடியது சிம்பாப்வே தொடரில் இருப்பையும் தக்கவைத்தது



பங்களாதேஷ் - சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ரி-20 ஆட்டத்தில் 31 ஓட்டங்களால் சிம்பாப்வே வெற்றிபெற்றுள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற சிம்பாப்வே முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 20பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகள் இழப்புக்கு 187 ஓட்டங்களை எடுத்தது. அதிக பட்சமாக வோலர் 49 ஓட்டங்களையும், சிபன்டா 44 ஓட்டங்களையும், வில்லியம்ஸ் 32 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் பங்களாதேஷ் சார்பாக சகிப் அல் கசன் 3 இலக்குகளையும், கிடர் 2 இலக்குகளையும், சகிட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப் பிடித்தாலும் 156 ஓட்டங்களை மட் டுமே பெற்றது. அதிகபட்சமாகரகுமான்50ஓட்டங்களைப் பெற்றார்.பந்துவீச்சில் சிம்பாப்வே சார்பாக கிரீமர் 3 இலக்குகளையும், ரசா 2 இலக்குகளையும், சிசாரோ ஓர் இலக்கையும் வீழ்த்தினர். ஆட்ட நாயகனாக வோலர் தெரிவானார். (ம)

# மீண்டும் வீழ்ந்தார் நடால்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் தனது முதல் சுற்றில் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறியுள்ளார் ஸ்பெயினின் ரபேல் நடால்.

தரப்படுத்தலில் 5ஆம் இடத்தில் உள்ள நடால், ஆஸ்திரேலியத் தொடரின் முதல் சுற்றில் சக நாட்டைச் சேர்ந்த வெர்டாஸ்கோவை எதிர்கொண்டார். சமீபகாலமாக தோல்விகளை சந்தித்து வரும் நடாலுக்கு இந்த ஆட்டமும் கடுமையாக அமைந்தது. முதல் செற்றில் நடாலுக்கு இணையாக வெர்டாஸ்கோ கடுமையாக விளையாடினார். இதனால் அந்த செற் இழுபறியாகச் சென்றது. இறுதியில் நடால் 6:7 என்ற அடிப்படையில் இழந்தார்.



இரண்டாவது மற்றும் மூன்றாவது செற்றில் அபாரமாகச் செயற்பட்ட நடால் முறையே 6:4, 6:3 என்ற கணக்கில் அவற்றை தன் வசமாக்கினார்.

நான்காவது செற்றை வெர்டாஸ்கோ 7:6 என்றுதனதாக்க தற் பொழுது நிலைமை 2:2. இதனால் தொடரை விட்டு வெளியேறுவது யார் என்பதை நிர்ணயிக்கும் ஐந்தாவது செற்றில் நடால் கடுமையாக போராடுவார் என்று எதிர்பார்க் கப்பட்டது. ஆனால் அந்த செற்றை அவர் 2:6 என விரைவில் இழந்தார். இதனால் நடால் 2-3 என்ற செற் கணக்கில் தோல்வியடைந்து முதல் சுற்றோடு ஆஸ்திரேலிய தொடரில் இருந்து வெளியேறினார். (ம)

# இலங்கை - இந்தியா ரி-20 பெப்ரவரியில் ஆரம்பமாகிறது




இந்தியா - இலங்கை அணிகள் மோதும் 3 ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடர் தொடர்பான அறிவிப்பை இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வெளியிட்டுள்ளது.

முதலாவது ஆட்டம் புனேயில் பெப்ரவரி 9ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இரண்டாவது ரி-20 ஆட்டம் டெல்லியில் பெப்ரவரி 12ஆம் திகதியும், மூன்றாவது மற்றும் கடைசி ரி-20 ஆட்டம் விசாகப்பட்டினத்தில் பெப்ரவரி 14ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. (ம)



# ரட்வன்ஸ்கா துடிப்பான ஆட்டம்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் தான் எதிர்கொண்ட முதல் சுற்றில் நேர்செற் கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார் ரட்வன்ஸ்கா.

தரப்படுத்தலில் நான்காம் இடத்தில் உள்ள வீராங்கனையான போலந்தின் ரட்வன்ஸ்காவை எதிர்த்து அமெரிக்காவின் கிறிஸ்டினா பலப்பரீட்சை நடத்தினார். இந்த ஆட்டத்தின் முதல் செற்றை 6-2 என்ற அடிப்படையில் கைப்பற்றிய ரட்வன்ஸ்கா இரண்டாவது செற்றை 6-3 என்ற கணக்கில் கைப்பற்றி 2:0 என்ற நேர்செற் கணக்கில் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். இவரைத் தவிர செரீனா, செரபோவா இருவரும் நேர்செற கணக்கில் வெற்றிபெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியமை குறிப்பிடத்தக்கது. (ம)

RISING PUNE
SUPERGIANTS

ஐ.பி.எல். தொடரில் புதிதாகத் தெரிவுசெய்யப்பட்ட புனே நகரம் தனது அணிக்கு ரைசிங் புனே சுப்பர் ஜெயின்ற்ஸ் என்று பெயரிட்டுள்ளதுடன்அணிக்கான இலச் சினையையும் வெளியிட் டுள்ளது. இதன் தலைவராக டோனி நியமிக்கப்பட்டுள்ளார். (ம)

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 இல் பிறந்த, சதயம் நட்சத்திரம் கும்பராசியில் பிறந்த 4 இல் சூரியன் செவ்வாய், கிரகபாவம் 10 கனடா குடியுரிமை உடைய மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை.
(திருமண தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்).

தொடர்பு:
077 989 8467, 077 529 1230.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.